விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 21 செவ்வாய்க்கிழமை (03.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழ்நாட்டிலிருந்து 150 புலிகள்

# இலங்கைக்குள் இரகசிய ஊடுருவல்

## சிறப்புப் பயிற்சி பெற்றவர்களாம்

(கொழும்பு)

தமிழ்நாட்டில் மூன்று இரகசிய முகாம்களில் விசேட ஆயுதப் பயிற்சிபெற்ற சுமார் 150 விடுதலைப்புலிகள் இலங்கைக்குள் மீனவர்கள் என்ற போர்வையில் ஊடுருவியுள்ளனர். இவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பதுங்கியிருப்பதுடன் நாட்டைச் சீர்குலைக்கத் திட்டமிட்டிருப்பதாகவும், ஆங்கில நாளேடான ஐலண்ட் வெளியிட்டிருக்கும் செய்தி ஒன்று கூறுகிறது.

இலங்கையில் உளவுத்துறையை மேற்கோள்காட்டும் இந்த பத்திரிகைச் செய்தி தற்போது நடந்து கொண்டிருக்கும் நல்லிணக்க வழிமுறையைக் குலைப்பதே இவர்களின் நோக்கம் என்றும், சமீபத்தில் திருகோணமலையில் வெட்டிக்கொல்லப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் கொலையின் பின்னணியில் இருந்த மூன்று பேர் விடுதலைப்புலிப் போராளிகள் என்றும் கூறுகிறது.

போர் முடிந்தபோது தமிழகத்துக்கு தப்பியோடியதாக இந்தப் போராளிகள் விசாரணையில் ஒப்புக் கொண்டதாகவும், அங்கே இரகசிய முகாம்களில் தங்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டதாகவும் அவர்கள் கூறியதாக இந்தச் செய்தி கூறுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

### பிரான்ஸுக்கான தூதரை நீக்க ஜனாதிபதி முடிவு?

(கொழும்பு)

பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவராக பணியாற்றும் தயான் ஜயதிலகவை அப்பதவியில் இருந்து நீக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ள (24ஆம் பக்கம் பார்க்க)

### தூத்துக்குடி கப்பல் சேவை ஏப்ரல் 19-ம் திகதி

கொழும்பு-தூத்துக்குடிக்கான கப்பல் சேவை மீண்டும் இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இக்கப்பல் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் சுமார் 450 பயணிகள் ஒரே தடவையில் கொழும்பையும் தூத்துக்குடியையும் சென்றடைய முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### இலங்கை-பாக். இராணுவ தளபதிகள் இராணுவ விடயம் குறித்துப் பேச்சு



(இஸ்லாமாபாத்)

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்ற இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, அந்நாட்டு இராணுவத் தளபதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கயானியை சந்தித்து இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர இராணுவ விடயங்கள் மற்றும் இரு நாட்டு இராணுவங்களுக்கான பயிற்சித்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் இராணுவ தளபதியின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற இலங்கை இராணுவத் தளபதிக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்று திங்கட்கிழமை காலை, பாகிஸ்தான் இராணுவ தலைமையகத்தில் அந்நாட்டு (24ஆம் பக்கத்தை பார்க்க)

### கிழக்கில் தீவிரமாகும் இராணுவ தேடுதல்

(கொழும்பு)

இலங்கைக்கு வந்ததாக சந்தேகிக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களையும் ஏனைய ஆயுதக்குழுக்களையும் சட்டவிரோத ஆயுதங்களையும் கண்டுபிடிக்கும் முகமாக கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நட்வடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை அன்புவழிபுரம், திருகோணமலை – அநுராதபுரம் சந்தி ஆகிய பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டிலிருந்து புலிகளா? மறுக்கிறது இந்திய அரசாங்கம்

(கொழும்பு)

தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளுக்கான பயிற்சி முகாம்கள் இருப்பதாக கூறப்படுவதை இலங்கைக்கான இந்தியத்தூதரகம் மறுத்துள்ளது.

இச்செய்தி முற்றிலும் தவறானது மற்றும் அடிப்படையற்றது இந்த இரு நாடுகளின் சம்பந்தப்பட்ட துறைகளும் இது போன்ற விடயங்களில் தொடர்ந்து ஒத்துழைத்துக் கொண்டிருக்கின்றன. இது போன்ற ஒரு தகவல் இந்திய அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்படவே இல்லை என்று அந்த அறிக்கை கூறுகிறது.

**பொலிஸ் மறுப்பு**

இதேவேளை தமிழகக் காவல்துறை தலைமை இயக்குநர் கே.ராமானுஜம் இந்த செய்தியை மறுத்து வெளியிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பில், இந்த செய்தி முற்றிலும் ஆதாரமற்றது. அத்தகைய ஆயுதப் பயிற்சி முகாம்கள் எதுவும் தமிழகத்தில் இல்லை.

சில காலத்துக்கு முன்பு இது போன்றதொரு தகவல் இலங்கையினால் கிளப்பப்பட்டு, பின்னர் அது வெளியானதற்குப் பழியை இந்திய ஊடகங்களின் மீது தவறாகப் போட்டு அச் செய்தி திரும்பப் பெறப்பட்டது.

தமிழ்நாட்டில் தீவிரவாத இயக்கங்கள் தடைசெய்யப்பட்டு மறைமுக அல்லது வெளிப் படையான (24ஆம் பக்கம் பார்க்க)

## அழுத்தங்களை கையாளும் திறன் இலங்கைக்கு உண்டு - ஜனாதிபதி

(கொழும்பு)

வெளிநாடுகளின் அழுத்தங்களை கையாளும் திறன் இலங்கைக்குள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்து சிக்கனத்துடனும் பொறுப்புடனும் அரச அதிகாரிகள் செயல்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்வொன்று அலரி மாளிகையில் இடம் பெற்றுள்ளது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, நாட்டிற்குத் தேவையான பொருட்களை நாட்டின் உள்ளேயே உற்பத்தி செய்யக் கூடிய வளங்கள் மற்றும் இயலுமைகள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

விரயங்கள் மற்றும் ஊழல் என்பன தவிர்க்கப்பட்டு பொதுமக்களின் தேவைப்பாடுகளை கவனத்தில் கொண்டு செயல்படுமாறு அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். இதேவேளை இந்த நிகழ்வில் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உறுதியளிக்கப்பட்டதை விடவும் குறைந்த பெறுமதியில் நிவாரணம்

## வவு.கதிர்காமர் முகாம் மக்கள் திண்டாட்டம்

வவுனியா கதிர்காமர் நலன்புரி முகாமில் அண்மையில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய பெறுமதியிலான பொருட்கள் வழங்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டது.

கதிர்காமர் நலன்புரி முகாமில் மழையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒருவருக்கு 200 ரூபாய் வீதம் மூன்று நாட்களுக்கு 600 ரூபாய் பெறுமதியிலான பொருட்களை வழங்குவதற்கு வவுனியா செயலகம் ஏற்பாடுகளை செய்தது.

எனினும் 450 ரூபாய் பெறுமதியிலான பொருட்களே வழங்கப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

மழையினால் அனைத்துப் பொருட்களும் பாதிக்கப்பட்டுள்ளபோதும் தமக்கு 450 ரூபாய் பெறுமதியிலான பொருட்களை வழங்கி அரசு ஏமாற்றியுள்ளதாக அவர்கள் கூறினர்.

இது குறித்து அரச அதிகாரிகளிடம் முறையிட மக்கள் முயன்ற போதும் அது பலனளிக்கவில்லை என கூறப்பட்டது.

இது குறித்து வவுனியா அரச அதிபருடன் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவருடனும் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை.

(எ-11)






# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications will be received by me up to 30th April 2012 from suitably qualified candidates for the following post:

**POST - FULL TIME SUB - WARDEN GRADE (II) (MALE & FEMALE)**

**Qualification:**

A graduate of a recognized University.
Preference will be given to those with experience in administration and management of hostel
Preference will be given to those who have experience in handling the matters related to students' welfare and disciplines.

NOTE: The successful applicant should reside in the hostel. But, he/she cannot reside with his/her family.
The successful candidate should pay a refundable security deposit of Rs.10,000.00. This amount shall be deducted from his/her salary in 10 installments.

**Salary Scale :** Rs. 22,240 - 18x320 - 28,000 p.m
**Selection :** By Test and Interview.
**Age not more than 45 years.**

**STATUTORY BENEFITS**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application forms may be obtained from the office to the Senior Assistant Registrar/ Establishments (Non - Academic) of this University on payment of Rs. 100/= for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self - addressed Rs. 5.00 stamped envelope of 23 x10 cm in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 30th April 2012.

Only Applications sent on the specified form will be accepted. Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

Applicants from Governments/ State Corporations and Statutory Bodies should apply through their Head of the Department. Age limit is not applicable to those who are in service.

Applications received after the closing date will be rejected without intimation.

Registrar
University of Jaffna
02.04.2012

(C-6239)

# கண்காணிப்புக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக் களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுற்குமான ஏப்ரல் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும் இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(எ)






# மோ.சைக்கிள் விபத்து இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வேலியோடு மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று மாலை 3.00 மணியளவில் நவாலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுபேஸ் என்ற 24 வயதுடைய இளைஞரொருவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த இளைஞர் தனது மோட்டார் சைக்கிளை அதிவேகமாக ச் செலுத்திச் சென்ற வேளை அது கட்டுப்பாட்டை இழந்து வேலிக்குள் புகுந்ததில் குறித்த இளைஞனுடைய தலைப் பகுதியில் தடியொன்று ஏறியதோடு கையொன்றும் முறிந்தும் காயங்களுடனும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எ-4)


**EASY ENGLISH**
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
**YAALH ENGLISH ACADEMY**
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
**புதிய உயர் கல்லூரி**
விபரங்களுக்கு :0773212711
(7379)


## முக்கிய அறிவித்தல்

**அக்கராயன்குளம் ஸ்கந்தபுரம் ஐயனார் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள விவசாயிகளுக்கான அன்பான வேண்டுகோள்**

2012 ஆம் ஆண்டு சிறுபோக தண்ணீர்ப் பங்கு 01/04/2012-ம் திகதி தொடக்கம் 10/04/2012 திகதி வரை பதிவுகள் நடைபெறும். காணி உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ள வரும் போது நீர்வரி டாப்பு தயாரிப்பதற்கு காணிக்கு உரிய ஆவணத்தின் ஒரு பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதனை அறியத்தருகின்றேன்.

ஐயனார் கமக்கார அமைப்பு,
செயலாளர்.

(C-6238)


## வேலையாட்கள் தேவை

**KRD ஓவ்செற் மெசின் பழகியவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.**
**நேரில் வரவும்**

**மதி கலர் பிறிண்டர்ஸ்**
15/2, முருகேசர் லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 9285, 0777 222524
(C-6240)


## KARACHCHI PRADESHIYA SABHA - KILINOCHCHI

INVITATION FOR EXPRESSIONS OF INTEREST FOR DESIGN AND CONSTRUCTION SUPERVISION CONSULTANCY SERVICES FOR THE IMPROVEMENT FOR THE EXISTING PUBLIC LIBRARY AT KILINOCHCHI

1. Chairman, Karachchi Pradeshiya Sabha invites Expressions of Interest (EOI) from National Consultion Firms having prior experience of similar nature.
   EOIs should be sent to the address indicated below **on or before 18th April 2012 at 15.00 Hrs.**
2. The firm(s) must include in the EOI proposal, (i) summary details of the similar projects carried out by the firm; (ii) one page summary of each project executed in the past three years showing nature and magnitude of projects, extent of responsibility and name of employer, etc. (iii) details of technical personnel available with the firm, especially to be given separately for the design and construction supervision services; (iv) any other relevant information.
3. Chairman, Karachchi Pradeshiya Sabha reserves the right to shortlist or not to shortlist any or all of the applicant(s) or to cancel the entire process without assigning any reson. No liability will be accepted such in a case.

The EOI should be addressed to : **Chairman**
**Karachchi Pradeshiya Sabha**
**Kilinochchi**

**V. Kugarajah**
Chairman
Karachchi Pradeshiya Sabha

(C-6244)

# இன்று ஒரு தகவல்

## நெருப்புக்கோழி

எனக்கு மிகவும் தெரிந்த ஒருவர் வந்தார். அவர் ஒரு அறுவை மன்னர். அதை சொல்ல வேண்டிய அவசியமில்லை. எனக்கு வேண்டப்பட்ட ஒருவர் அவரேதான்.

இந்த உலகில் இறக்கையின்றி எப்படி பறக்க முடியும்? என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

"எனக்குத் தெரியவில்லை" என்றேன்.

"என்ன சேர் இது...? இது கூட தெரியவில்லையா? அது மனிதன்தான்" என்றார்.

அதுவும் சரியென்றுதான் தெரிகிறது.

இப்போதுள்ள மனிதன் எதற்கெடுத்தாலும் பறந்து கொண்டே தானே இருக்கிறான். காலம் அப்படி மனிதனை மாற்றியுள்ளது. இப்படியாக நினைத்துக் கொண்டிருக்கும்போது வேறு ஒரு கேள்வியைத் தொடுத்தார்.

அவர் அப்படிப்பட்டவர். யாரும் அகப்பட்டால் இலகுவில் விட்டு அகலமாட்டார்.

"சரி...கேள்வியை சொல்லுங்கள்" என்று கேட்டான்.

அவர் கேள்வி கனைகளைத் தொடுக்க ஆரம்பித்தார்.

"இறக்கை இருந்தும் பறக்க முடியாத பறவை எது?" என்றார்.

"இதற்கு பதில் தெரியவில்லை என்று கூறிவிட்டால் உடனே அடுத்த கேள்வியைக் கேட்க ஆரம்பித்துவிடுவார். அதனால் சற்று தாமதித்து, சிரமப்பட்டு யோசித்து ஒரு பதிலை கண்டு பிடித்தேன்.

"நெருப்புக் கோழிதான் சேர் அது!" என்று பதிலளித்தேன்.

"சரி" என்றார்.

அதன்பின்னர் அவர் அடுத்த கேள்வியைக் கேட்கவில்லை. முன்பு கேட்ட கேள்வியின் துணைக் கேள்வியை கேட்க ஆரம்பித்தார்.

"நெருப்புக்கோழி நெருப்பைச் சாப்பிடுமா?"என்றார்.

சரி இன்று இவரிடம் வசமாக மாட்டிக்கொண்டோம் என்று நினைத்தேன்.

எனக்கு நெருப்புக் கோழியைப்பற்றி என்னென்ன தெரியுமோ அவற்றையெல்லாம் சொல்லிவிட்டேன்.

இந்த உலகத்திலே மிகவும் பெரிய பறவை என்று கேட்டால், அதற்கு நெருப்புக்கோழி என்றுதான் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால் அது எட்டடி உயரம். 135 கிலோ எடை. உலகத்திலேயே மிகவும் பழைமையான உயிரினமும் அதுதான்.

அந்தக் காலத்தில் இருந்த பல பிராணிகளில் சில இப்போது இல்லாமல் போய் விட்டது. அருகி விட்டது. நெருப்புக்கோழி இப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அருகிவிடவில்லை. ஆனால், அதிகமாக இல்லை. மத்திய ஆபரிக்காவில்தான் அது இப்போது இருப்பதாக கேள்வி.

எப்போது பார்த்தாலும் அதற்கு சாப்பாடு கொடுத்துக் கொண்டே தான் இருக்க வேண்டும். ஒருநாள் அது இருக்கும் இடத்தில் அடுத்த நாள் இருக்காது. 30,40 நெருப்புக்கோழிகள் சேர்ந்து கூட்டம் கூட்டமாகத்தான் மேயப்போகும். இவ்வினம் பெண்ணை விட ஆண் சற்று பெரிதாகக் காணப்படும்.

புல், பூண்டு, செடி, கொடி, எலி,பல்லி, ஓணான் இவைபோன்று ஏதாவது கிடைத்தால் விட்டு வைக்காது, அதை சாப்பிட்டு முடித்துவிடும்.

கண்ணுக்கு பளபளப்பாக ஏதாவது தெரிந்தால் உடனே அதை விழுங்கிவிடும்.

நெருப்புக்கோழிக்கு பறப்பது கஷ்டம். ஆனால், ஓட ஆரம்பித்தால் பிடிப்பது சிரமம்.

இவ்வாறாக அந்த அறுவை மன்னனிடமிருந்து நெருப்புக் கோழியைப்பற்றி கூறி முடித்துவிட்டேன்.

இவ்வளவு கேள்வியைக் கேட்டதற்குப் பின்னரும் அவர் இன்னொரு கேள்வியைக் கேட்டார்.

"சேர்... நீங்கள் கறிக்கோழியைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

"தெரியுமே! அதுதான் 'புரொய்லர்' என்று சொல்லுவார்கள்" என்றேன்.

"ஆமாம்! அதுவேதான்! இப்போது நான் ஒரு நெருப்புக் கோழியை கறிக் கோழியாக மாற்றமுடியுமா?" என்றார்.

"அது எப்படி முடியும்...? அது வேறு இது வேறு" என்றேன். அவர் "முடியும்" என்று சொன்னார்.

"எப்படி?" என்றேன்.

"நெருப்பை தண்ணீரிலே நனைத்தால் கரியாகிவிடும். அதனாலே நெருப்புக்கோழியை தண்ணீரிலே நனைத்தால் கறிக் கோழியாகிவிடும்" என்றார்.

இப்போது எனக்கு உண்மையாகவே 40 கிலோ மீற்றர் வேகத்திலே ஓட வேண்டும்போல் உள்ளது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# காற்றினால் பாதிக்கப்பட்ட முகாம் மக்களுக்கு தொடர்ந்தும் உதவிகள்

## வவுனியா அரச அதிபர் திருமதி சார்ள்ஸ்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தை ஊடறுத்து வீசிய கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காற்றினால் 920 இற்கும் மேற்பட்ட தற்காலிக இருப்பிடங்கள், கூரைகள் சேதமடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கூறியுள்ளார்.

இதனால் ஆயிரத்து 500 இற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டதாகவும் அவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது காயமடைந்த 14 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சேதமடைந்துள்ள இருப்பிடங்களை வழமை நிலைக்கு கொண்டுவரும் நடவடிக்கை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிடுகிறார்.

ஆயிரத்து 722 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே கதிர்காமம் மற்றும் ஆனந்தக்குமாரசுவாமி நிவாரணக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடுகளை நிர் மாணிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டாலும் ஒரு சில காரணங்களால் அந்தப் பணிகள் தாமதமடைவதாகவும் மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்தார்.

அண்மையில் வீசிய கடும் காற்றினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பணிகள் துரிதப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிச்சயமாக ஆறு மாதங்களுக்குள் எஞ்சிய மக்கள் அனைவரையும் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# வடமராட்சி கல்வி வலயத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக பணி புரிவதற்காக விண்ணப்பங்களை வடமராட்சி வயக் கல்விப்பணிப்பாளர் சி. நந்தகுமார் கோரியுள்ளார்.

அதற்கான விண்ணப்ப தகைமைகளாக க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் ஏ அல்லது டி சித்தியுடன் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியை பெற்றவர்களும் அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு பெற்ற 62 வயதை பூர்த்தி செய்யாத ஆங்கிலத்தில் சிறப்பு தேர்ச்சியுடன் நல்ல தேகாரோக்கியம் உடையவர்களிடமிருந்தும் ஆங்கிலமொழி மூலம் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமையை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எனவே, தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை சி.நந்தகுமார், வலயக்கல்வி பணிப்பாளர், வடமராட்சி என்னும் முகவரிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும். இதற்கான எழுத்து மூல தெரிவுப்பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30-35 | 30 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 35 | 30 | 40 |
| தக்காளி | 20 | 20 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 10 | 20 |
| கரட் | 40 | 30 | 40 |
| பூசணி | 30 | 30 | 30 |
| புடோல் | 25 | 40 | 50 |
| வாழைக்காய் | 30-35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 40-60 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 70 |
| பாகற்காய் | 70 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 45 | 40 | 80 |
| லீக்ஸ் | 50 | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 20 | 25 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 250 |
| போஞ்சி | 40 | 70 | 70 |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 8-18 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 25 | 30 |

# இராசி பலன்

*03.04.2012*
*(பங்குனி 21, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு*
*ஏகாதசி முற்பகல் 8.41 மணிவரை*
*மகம் பின்னிரவு 5.02 மணிவரை*
*இராகுகாலம்3.10-4.40 மணிவரை*
*சுபநேரம் 10.40-12.10 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்**

தொட்ட காரியங்கள் வெற்றிபெறும் நாள். பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம். வருங்கால நலன் கருதி சேமித்து வைக்க விரும்புவீர்கள். திருமணப் பேச்சுகள் முடிபாகலாம்.

**இடபம்**

சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள். தனவரவில் இருந்த தடைகள் அகலும்.எடுத்த காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள். வாகன சுகமுண்டு. வழிபாட்டில் ஆர்வம்கூடும்.

**மிதுனம்**

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர். சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். சிலரை திருப்திப்படுத்துவதற்காக முக்கியமான பொறுப்புக்களை எடுத்துக் கொள்ளும் சூழ்நிலை அமையலாம்.

**கடகம்**

கலகலப்பான சூழ்நிலை அமையலாம். பணத் தேவைகள் பூர்த்தியாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும். இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**சிங்கம்**

அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர் உறுதுணை புரிவர். திடீர் பயணங்கள் ஏற்படலாம். கற்பனை மிகுதியான நாள்.போசன சுகமுண்டு.

**கன்னி**

விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள். இடமாற்றம் ஊர் மாற்றம் என்பன இடம்பெறலாம்.சுப நிகழ்வுகளுக்காக செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம். சயன சுகக்குறைவான நாள்.

**துலாம்**

திடீர் பணவரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் ஏற்படும். உறவினர் வருகையால் கலகலபான சூழ்நிலை அமையலாம்.

**விருச்சிகம்**

இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள். தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம். ஆரோக்கியமான நாள்.

**தனுசு**

பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.தந்தை வழி உறவினர்களால் உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியாக முக்கியமானவர்களை சந்திக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்**

வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நாள். எதையும் நன்கு யோசித்துச் செய்வது நல்லது. எதிர்பாராதவகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையலாம்.

**கும்பம்**

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் ஏற்படலாம். வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம். கௌரவமான நாள்.

**மீனம்**

அலுவலகப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பகைவர்களாக இருந்தவர்கள் மனம் மாறுவர். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும்.தொழில் விருத்தி உண்டு.

வளவன்

# ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் 11 பயனாளிகள் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தை சேர்ந்த 11 பயனாளிகள் இவ்வருடம் சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறவுள்ளதாக யாழ். மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளது பெயர் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவை வருமாறு,

சிவசுப்பிரமணியம் நாகம்மா (கரம்பைக் குறிச்சி), சிதம்பரநாதன் வேதாரணியம் (மந்துவில் கிழக்கு), சுப்பிரமணியம் தவராசா (கச்சாய்), செல்லத்துரை கனகலிங்கம் (நுணாவில் மேற்கு), சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (கிராம்புவில்). சிவசுப்பிரமணியம் ஜெயராணி (உசன்), நாகேஸ்வரன் தேவகாந்தம் (சரசாலை தெற்கு), நமசிவாயம் சிவஞானசுந்தரம் (அல்லாரை தெற்கு), சுப்பையா பாக்கியரத்தினம் (சரசாலை தெற்கு), சின்னத்தம்பி இராஜரத்தினம் ( சரசாலை தெற்கு), செல்வன் தேவநாயகி (சரசாலை தெற்கு) ஆகியோரே ஓய்வூதியம் பெறவுள்ளனர்.

ஓய்வூதியத்தின் போது இவர்களுக்கான கடிதங்கள் யாழ். மாவட்ட செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டவுள்ளது. (அ-3-29)

# சகலகலாவல்லி வித்தியில் நான்கு கணனிகள் திருட்டு

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் மாணவர் பயிற்சிக்கென வைக்கப்பட்டிருந்த 4 கணனிகள் கடந்த 29 ஆம் திகதி இரவு திருடிச் செல்லப்பட்டுள்ளது.

மறுநாள் காலை மேற்படி வித்தியாலயத்தை திறந்தபோது கணனி அறை உடைக்கப்பட்டதை அவதானித்த அதிபர் கணனிகள் களவாடப்பட்டதை அறிந்து தென்மராட்சி கல்வி வலயத்திலும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

வித்தியாலய கணனி அறை யன்னல்களை உடைத்து உட்சென்றே இத்திருட்டு சம்பவத்தை மேற்கொண்டுள்ளனர்.

கணனி மற்றும் அதனுடன் இணைந்த உபகரணங்களும் திருடிச் செல்லப்பட்டுள்ளது. சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான நிறுவனத்தினால் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இவ் வித்தியாலயம் கடந்த ஜனவரி மாதமே இயங்க ஆரம்பித்தது.

இதனால் அப்பகுதி மாணவர்களும் பெற்றோரும் கவலையடைந்துள்ளனர்.

(அ-3-29)

# விலை எகிறும் என்ற காரணத்திற்காக பொருட்களை விற்க மறுக்கும் வர்த்தகர்கள்!

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது பா.அ.அதிகாரசபை

(யாழ்ப்பாணம்)

பொருட்களை வைத்துக்கொண்டு விற்க மறுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் பொருட்களை வைத்துக்கொண்டு விலை அதிகரிக்கும் என்பதற்காக பொருட்களை வர்த்தகர்கள் விற்க மறுக்கின்றனர் என முறைப்பாடுகள் கிடைத்தவண்ணமுள்ளன.

குறிப்பாக மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் இவ்வாறு விற்க மறுக்கின்றனர் என முறைப்பாடு கிடைத்துள்ளது.

பொருட்களை வைத்துக்கொண்டு விற்க மறுப்பது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்திற்கு முரணானது. எனவே பொருட்களைப் பதுக்கி வைக்கும் நடவடிக்கைகளில் வர்த்தகர்கள் ஈடுபடாது தொழில் நடவடிக்கையில் ஈடுபடுமாறும் அவ்வாறு பொருட்களின் விலை அதிகரிக்கும் என்பதற்காக பொருட்களைப் பதுக்கும் நடவடிக்கையில் வர்த்தகர்கள் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் பொருட்களை வைத்துக்கொண்டு விற்க மறுக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக எழுத்துமூலம் தமக்குப் பாவனையாளர்கள் முறைப்பாடு கொடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரனிடம் கேட்டபோது, யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் மக்களுக்கு பல வழிகளிலும் உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒருபோதும் பொருட்களை வைத்துக்கொண்டு விற்பனை செய்ய மறுப்பதில்லை. அவ்வாறு வர்த்தகர்கள் எவராவது பொருட்களை வைத்துக்கொண்டு விற்க மறுத்தால் தமது கவனத்திற்குக் கொண்டு வருமாறும் அவ்வாறு கொண்டு வந்தால் குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(அ-3)

# உதவி வழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் வசிக்கும் மன வளர்ச்சி குன்றிய மற்றும் வலுவிழந்த பிள்ளைகளுக்கு உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நுணாவில் அறவழி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் முன்னாள் தலைவர் வி.எஸ். துரைராஜாவின் அனுசரணையுடன் இவ்வுதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. (அ-3-29)




# நிர்வாகக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையத்தின் நிர்வாகக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் கு. முருகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவிருப்பதால் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

# யாழ்.வணிகர் கழகத்தினால் இதுவரை 210 குடும்பத்திற்கு உதவிகள் வழங்கப்பட்டன

## யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் 63 இலட்சம் ரூபா செலவில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 210 குடும்பங்களுக்கு இதுவரை வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் ஆர். ஜெயசேகரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்கள் யாழ்.மாவட்டத்திலும் 15 குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்குள்ளும் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கோழி வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டு வந்தன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டத்திலும் உள்ள 19 பிரதேச செயலர் பிரிவிலும் 210 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு சுமார் 63 இலட்சம் ரூபா செலவில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும் வணிகர் கழகத்தினால் யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டத்தில் எவ்வாறு உதவிகள் வழங்கப்பட்டதோ அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் தெரிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

எனவே அந்தப் பகுதி மக்களுக்கு உதவிகள் வழங்கவிரும்புபவர்கள் வணிகர் கழகத்துடன் தொடர்பினை ஏற்படுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-3)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடும் பணிகள்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வர்த்தக வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் அலுவலகத்திலும் எதிர்வரும் 9ஆம், 10 ஆம் திகதிகளில் கைதடி உப அலுவலகத்திலும் அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரை இடாதோர் மேற்படி திகதிகளில் வருகை தந்து முத்திரை இடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# நகைக்கடையில் பணம் திருட்டுப்போனது

(யாழ்ப்பாணம்)

நகைக்கடையினுள் கூரை பிரித்து உள்நுழைந்த கொள்ளையர்கள் கடையில் நகைகள் இல்லாமையினால் அங்கிருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தினை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கஸ்தூரியார் வீதி கன்னாதிட்டி சந்திக்கு அண்மையில் உள்ள நகைக்கடையொன்றில் இடம்பெற்றது.

நகைக்கடை உரிமையாளர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சமயம் பார்த்தே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

நகைக்கடையின் கூரையினை பிரித்து உள்நுழைந்த கொள்ளையர் கூட்டம் அங்கிருந்த நகைப்பாதுகாப்பு பெட்டகத்தினை உடைக்க முயன்றுள்ளனர். எனினும் அம்முயற்சி கைகூடாமல் போகவே மேசைப் பெட்டியினுள் இருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தினை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததனைத் தொடர்ந்து நேற்றுக்காலை சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கைரேகையினை பதிவு செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-2-4)

# தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் குரோதத்தை மறந்து ஒன்றிணைய வேண்டும்

## தமிழரின் விடிவுக்கு இதுவே வழி என்கிறார் சங்கரி



(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கட்சித்தலைவர்கள் தம்மிடையேயுள்ள குரோதத்தை மறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஏற்பாட்டில் முதறிஞர் தந்தை செல்வாவின் ஜனன தின நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எல்லா பிரச்சினையையும் மறந்து தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய காலம் இது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர், உறுப்பினர்கள் இங்கு ஒன்று கூடியுள்ளனர். நாம் ஒருபோதும் பிரிந்து வாழ முடியாது தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தந்தை செல்வா அரசியலில் உச்சத்தில் இருந்த போது ஜி.ஜி.பொன்னம்பலத்தை தேடிச் சென்று நட்புறவை வளர்த்துக் கொண்டது போல தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் தம்மிடையே உள்ள குரோதத்தை மறந்து தமிழ் மக்களின் எதிர் காலத்திற்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை விட்டுச் செல்லுங்கள் என எவரும் எனக்கு இதுவரை சொன்னதில்லை. எனக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் குரோதம் இல்லை.

நான் ஒருபோதும் பதவிக்கு ஆசைப்பட்டவன் இல்லை. சிறு சிறு பொய்களை சொல்லியிருந்தால் பாராளுமன்றத்திற்கு சென்றிருப்பேன். தந்தை செல்வாவின் அரசியல் பின்னணியில் வந்ததனால் எந்த துரோகமும் யாருக்கும் செய்ய தோன்றவில்லை அதற்கான தேவையும் எனக்கு ஏற்படவில்லை.

சிலருக்கு பின்னால் சென்றிருந்தால் சலுகைகள் பெற்றிருக்கலாம். ஏன் ஆளுநராக கூட ஆகியிருக்கலாம். நான் பதவிக்கு ஆசைப்பட்டவன் அல்ல. கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் பலர் அரைப் பட்டினியுடன் வாழ்கின்றனர். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்கள் ஆகின்றன. இன்னும் வன்னிப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகவே உள்ளது.

மக்கள் பட்டினியில் கிடக்கின்றனர். அரசாங்கம்விளையாட்டுப்போட்டியை நடத்துகின்றது.

இது தவிர புத்தகத்தை பூச்சி அரிப்பது போல தமிழர்களுக்கு சொந்தமான நிலத்தை இலங்கை அரசாங்கம் ஆக்கிரமித்து வருகின்றது.

மேலும் வன்னியில் ஒரு குடும்பம் கூட மூன்று நேரமும் சாப்பிடும் வசதியில் இல்லை. இவ்வாறு மக்கள் இருக்கையில் எனக்கு பாராளுமன்றம் செல்ல வேண்டிய தேவையில்லை. எனவே, தமிழர்களின் முழுச் சுமையையும் ஒருவர் இருவரினால் மட்டும் சுமக்க முடியாது எல்லோரும் ஒன்றிணைவதன் மூலமே அது சாத்தியம்.

பதவி ஆசை மறந்து செயற்படுங்கள் ஒருவரை ஒருவர் வெட்டி ஓடாதீர்கள். தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலில் செயற்படாது ஒன்றிணைந்து செயற்படுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், சித்தார்த்தன், யாழ் மாநகரசபை உறுப்பினர்களான மு.சங்கையா, க.விந்தன் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

## செயலமர்வு

(மல்லாவி)


துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் துரித கற்றல் செயற்றிட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர்வள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

துரித கற்றல் செயற்றிட்டத்திற்கு பொருத்தமான ஆசிரியரை தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

(அ-3-15)








கிளிநொச்சி மாவட்ட செயலகமும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் இணைந்து நடத்திய சைக்கிள் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் தேசிய மொழிகள் அமைச்சின் இணைப்பாளர் டாக்டர் மோகனிடம் 2 சைக்கிள்களை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கையளிப்பதையும், ஆளுநர் கொடி அசைத்து போட்டியை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# கடல் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவு

## இந்திய நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் காங்கேசன்துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த கடல் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக குறித்த பணியை முன்னெடுத்து வந்த இந்திய நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்தத் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதன்மூலம் காங்கேசன்துறைமுகத்தின் ஊடாக வர்த்தக் கப்பல்களின் போக்குவரத்தை இலகுபடுத்த முடியும்.

இந்த புனரமைப்பு பணிகளின்போது 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட இலங்கை கடற்படையின் 6 கப்பல்களின் பாகங்கள் முதலில் மீட்கப்பட்டிருந்தன. தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதல்களில் மேலும் 4 கப்பல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கவச வாகனங்களின் பாகங்கள், வாகனங்களின் பாகங்கள், ஆயுதங்கள் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மீட்கப்பட்ட கப்பல்கள் உடனடியாகவே இரும்புக்காக தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கைவிடப்பட்ட காணிகள், வீடுகளின் விபரம் திரட்டுகின்றது-சுகாதார அமைச்சு

கொழும்பு மாவட்டத்திலுள்ள வெற்று காணிகளினதும் கைவிடப்பட்டுள்ள வீடுகளினதும் விபரங்களை திரட்டுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் சுற்றாடல் பொலிஸ் பிரிவினருடன் இணைந்து இப்பட்டியலை தயாரிக்கும் படியும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்திலுள்ள வெற்றுக் காணிகளிலும் கைவிடப்பட்டுள்ள வீட்டு பிரதேசங்களிலும் நுளம்புகள் பல்கிப் பெருகுவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் நடத்திய ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாக வைத்தே அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேற்படி ஆலோசனையை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார். கொழும்பு மாவட்டத்திலுள்ள வெற்றுக் காணிகளிலும் கைவிடப்பட்டுள்ள வீட்டுப் பிரதேசங்களிலும் நுளம்புகளின் பெருக்கம் பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் 70 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் கூறினார்.

இவ்வருடத்தின் முதலிரு மாதங்களிலும் டெங்கு நோய் கராணமாக 50 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் 8 ஆயிரத்து 594 பேர் டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டனர் எனவும் அவர் கூறினார். (அ-2)

# வினாடி வினாப்போட்டி

(முல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட விசேட புதிர் வினாடி வினாப்போட்டியில் வெற்றீட்டிய மாணவர்களுக்கு வடமாகாண விசேட புதிர் வினாடிவினாப்போட்டிக்கரன போட்டிப் பரீட்சை நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

மாகாண மட்டத்தில் அதிக வெற்றி இலக்குகளை பெறுவதற்கு போட்டியாளர்களை அதிபர்கள் தயார்படுத்தி நாளை 9 மணிக்கு முன்னர் போட்டி நடைபெறவுள்ள பாடசாலையில் வரவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# புதுவருடத்தை முன்னிட்டு 750 பஸ்கள் சேவையில்

சித்திரைப்புத்தாண்டு காலப்பகுதியை முன்னிட்டு எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் விசேட பேருந்து சேவையை நடைமுறைப்படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக சுமார் 750 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் பண்டிகைக் கால விசேட பேருந்துகளை அடையாளம் காணும் பொருட்டு மும்மொழிகளிலும் அச்சிடப்பட்ட புதிய ஸ்டிக்கர் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் ரோஷான் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குறித்த பஸ்கள் , சாதாரண அரைசொகுசு அல்லது சொகுசு பஸ்களா என அடையாளம் காண்பதற்கு மற்றுமொரு ஸ்டிக்கரும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# மின்சாரப்பயன்பாட்டைக் குறைப்போருக்கு இலவசமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை

## இலங்கை மின்சார சபைத்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவும் கடும் வரட்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் பொது மக்கள் மின்சாரம் மற்றும் தண்ணீர்ப் பாவனையில் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று இலங்கை மின்சார சபையும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையும் வலியுறுத்தியுள்ளன.

இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் டபிள்யூ அபேயவிக்ரம தெரிவிக்கையில்,

தற்போது வரட்சி நிலவுவதால் 80 முதல் 85 சதவீதமான மின்சார உற்பத்தி அனல் மின்சார உற்பத்தி மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. அனல் மின்சார நிலையங்களை இயக்குவதற்கு பெருமளவு பணம் செலவிடப்படுவதனால் மக்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுமக்கள் மின்சாரத்தை மாலை 6.30 முதல் இரவு 9.30 வரை மிகவும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட பேராசிரியர் அபேவிக்ரம இந்த நேரத்தில் வீட்டில் உள்ள அநாவசியமாக எரியும் மின்விளக்குகளை அணைத்து விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதேவேளை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தும் பாவனையாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மின்சக்தி எரிசக்தி அமைச்சு நாளைக்காக இன்று எனும் தொனிப்பொருளில் மின்சாரத்தை சிக்கனமாக உபயோகிக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இத்திட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் நோக்கிலேயே ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இவ்விசேட சலுகையினை வழங்க அமைச்சு முன்வந்துள்ளது.


கடந்த மாத மின்கட்டணத்தை விடவும் இம்மாதத்துக்கான மின்கட்டணம் 20 சதவீதத்திலும் குறைவாக காணப்படும் பட்சத்தில் அடுத்த ஒருமாத காலத்திற்கு அவர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படும். மார்ச் மாதத்தை விடவும் இம்மாதத்திற்கான மின் கட்டணம் 10 சதவீதத்தால் குறைவை டைந்திருப்பின் அவர்களுக்கு எதிர்வரும் 15 நாட்களுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேலும் அமைச்சின் கீழ் நடத்தப்படவிருக்கும் அதிர்ஷ்ட சீட்டெழுப்பில் சிக்கனமான மின் பாவனையாளர்கள் ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கென விசேட பரிசுப்பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

இதன்படி மின்சார சபையின் கீழ் மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் பாவனையாளர்கள் தமது கையடக்கத் தொலைபேசியினூடாக ஒன்று என்ற இலக்கத்தை டைப் செய்து இடைவெளி, தமது மின்கட்டண பட்டியல் இலக்கங்களை அழுத்தி 0114338338 என்ற இலக்கத்திற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவேண்டும்.

மற்றும் லெக்கோ அமைப்பின் கீழ் மின்சாரத்தை பெறுவோர் இஎஸ்சி என டைப் செய்து இடைவெளி மின்கட்டண பட்டியல் இலக்கங்களை அழுத்தி 0714643643 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் தம்மை குறுந்தகவலினூடாக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்குறுந்தகவல் அனுப்பும் நடைமுறை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பூரணத்துவமும் குறைபாடுகளும்



## ஆன்மீகம் 24

பாவச்செயல்கள் நம் இயற்கைக் குணமல்ல; நீ பாவத்திலிருந்து பிறக்கவில்லை. பாவம், துணியில் சுருக்கம்போன்றது. அது நேராக்கப் படவேண்டும். சரியான முறையில் ஸ்திரி செய்யப்படவேண்டும். காமம் பாவமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், காமத்தில் நீ, அடுத்தவரை- அவர் உயிர் உணர்வை மதிக்காமல்- அவரை ஒரு போகப் பொருளாக மட்டுமே பார்க்கிறாய். அவரின் சுயத்தை, ஆன்மாவைப் பார்ப்பதில்லை.

அன்பு காமத்திற்கு எதிரானது. ஏனெனில், அன்பில் சரணடைதல் நடைபெறுகிறது. நீ மற்றவரை உயர்வாகத் தெய்வமாக மதிக்கிறாய். நீ பொருளை சக்தி நிலைக்கு உயர்த்துகிறாய். நீ வணங்கும் சிலை, ஒரு கல்- வெறும்பொருள். ஆனால், நீ அதை வழிபடும்போது அது உயிருள்ளதுபோல் ஆகிறது. அதற்கு நீ உயிர் கொடுக்கிறாய். நீ அதைக் கடவுள் நிலைக்கு உயர்த்தியிருக்கிறாய். அன்பு பூரணத்துவத்தை நோக்கி முன்னோறுவதாகும்.


நீ கோபமடைந்தால், உன் சமநிலையை இழக்கிறாய். உன் ஆளுமையின் உரிமையை இழக்கிறாய். திரும்பவும் உன் கவனம் தெய்வீகத்திலோ, எல்லையற்ற ஒன்றிலோ இல்லை. நீ திரும்பவும் சிலவற்றிற்கு எந்த மதிப்பும் கொடுக்காமல், சிறு பொருளாக்கிவிடுகிறாய். ஆகவே, கோபம் ஒரு பாவச்செயல்.

பொறாமை ஒரு பாவச்செயல். குற்ற உணர்வும்கூட பாவத்தான். குற்ற உணர்வில், நீ இந்த உலகில்தான் வெறும் கருவியே எனப்புரிந்து கொள்வதில்லை. அந்த சிறிய மனத்தை, நடந்துவிட்ட செயலோடு குறுக்கிக் கொண்டு விடுகிறாய்.

உனக்கு அளிக்கப்பட்டுருக்கும் பண்புகளுக்கு நன்றியுடன் இரு. இது ஒரு ஆழ்ந்த அறிவு. ஏனெனில், அவை நீ செய்தவை அல்ல- அந்தப் பண்புகள் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தைப் பொறுத்திருக்கும்.

ஒரு நாடகத்தில் உனக்கு வில்லன் கதாபாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதாகக்கொள்வோம். நீ அதைத் திறம்படச் செய்கிறாய்- நீதான் வில்லன்; உனக்கு எப்போதும் தெரியும், நீ அந்த வில்லன் பாத்திரத்தில் நடிக்கவேண்டும் என்று. அது வெறும் கதாபாத்திரமே. நான், என் பாத்திரத்திற்கு நேர்மையாக இருக்கிறேன்.

சமஸ்கிருதத்தில் ஒரு வழக்கு உண்டு. நீ முதலில் தீயவரை வணங்கு; பிறகு நல்லவரை வணங்கு, ஏனெனில், தீயவர் நீ தவறு செய்யாமலிருக்க உனக்கு ஒரு முன்னோடி. சிறையிலிருக்கும் குற்றவாளியை வெறுக்காதே- அவர் உனக்கு சிறந்த சேவை செய்திருக்கிறார். போதைக்கு அடிமையானவரை வெறுக்காதே- அவர் உனக்குப் பாடம் கற்பிக்கிறார். இந்த அடிப்படை உண்மையைப் புரிந்துகொண்டால், உன்னுடைய உள்தூய்மை நிலைத்தன்மையுடையதாகிறது. பிறகு, உன்னுடைய உள்தூய்மையை- நேர்மையை- இந்தக் கிரகத்திலுள்ள எதாலும் அசைக்கமுடியாது.



பேச்சில் வாய்மையைப் பார்க்க வேண்டுமானால், அவர்கள் பேச்சுக்கப்பால் பார்க்கவேண்டும். அதில் ஏதாவது பொய்மைஇருந்தால் நீ கோபமடைகிறாய். இப்போது, நீ அதிகக் குறைபாடுடையவன்.

மனோதத்துவ நிபுணர்கள், உனக்குள் அடிமனதில் பயமும், கோபமும், குற்றஉணர்வும் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு மனதைப் பற்றி, மெய்யுணர்வைப்பற்றி எதுவுமே தெரியாது. உனக்குள் ஆழத்தில் நீ பேரானந்தப் பேரூற்று- ஆன்ந்த நீரூற்று. என்பதை அறிந்துகொள்.

அனைத்து உணர்ச்சிகளும்- அனைத்து உணர்வுகளும் உன்னை உள்ளார்ந்த முழுமைக்கும், உள்ளார்ந்த மலர்ச்சிக்கும் அழைத்துசெல்கிறது.

எல்லாச் செயல்களிலும், எப்போதும் முழுமையை எதிர்பார்க்காதே. ஒரு அறுவைச் சிகிச்சையின்போது மருத்துவர் நோயளியின்மேல் கத்தி வைத்து, அவனுடைய வயிற்றை அறுக்கிறார். அவருடைய நோக்கத்தில் தவறு இல்லை. ஒருவேளை அறுவைச் சிகிச்சையின்போது அந்த நோயாளி இறக்கலாம். அது, எல்லாச் செயலிலும் சிறுகுறை இருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. நீ, தானம் கொடுக்கும்போதுகூட, அது ஒரு தவறான செயலாகலாம். ஏனெனில், அப்போது தானம் பெறுபவரின் சுய மதிப்பையும், சுயமரியாதையையும் கீழே கொண்டுபோகிறாய். எல்லாச் செயல்களிலுமே, அதனதன் வழியே தவறுகள் உள்ளன.

தூய உணர்வுகளோடு இருக்க முடியும். பேச்சிலும்கூட பெருமளவு நேர்மையுடன் இருக்கலாம். செயலையும்கூட துல்லியமாகச் செய்யலாம். உன் வழியில் மனவிகாரங்கள் குறுக்கிட்டால், அவற்றை இலட்சியம் செய்யாதே. யாரோ ஒருவருடைய கோபத்திற்கும், காமத்திற்கும் பேராசைக்கும் நீ முக்கியத்துவம் கொடுத்தால், ஒரு காலகட்டத்தில் அது அவர்களிடம் மட்டுமல்லாமல், உன் மனதிலும் நிலையான இடம் பிடித்துவிடும். ஒருமனிதனுக்கும், மிருகத்துக்கும் உள்ள வித்தியாசம், மிருகம், பாலுறவில் ஈடுபட்டால் அடுத்த பருவகாலம்வரை அதைப் பற்றி நினைப்பதில்லை. ஆனால், மனிதன் அதைப்பற்றியே நினைத்துக்

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

கொண்டிருக்கிறான். இதைத்தான் அடிக்கடி கிருஸ்ணர் கேட்கிறார். உன் மனதுக்கு என்னவாயிற்று?

நீ இந்த மனவிகாரங்களை உனக்குள் வளர்த்தால், அவை ஒரு தவறிலிருந்து மற்றொன்றுக்கு, அப்படியே உனக்குள் பெருகிவிடும். நிம்மதியாக இரு. இந்த உலகில் எல்லாம் தாமாக நடைபெறுபவையே. நீ ஒரு கருவிதான். உன்மூலம் அது நடைபெறுகிறது. இதுதான் உன்னுள் உன் ஆன்மாவில் நிலைத்திருக்க ஒரேவழி.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

24

## ரேகைகளும் கிரகங்களும்

### செவ்வாய் மேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்கள்

செவ்வாய் மேட்டின் இரண்டு எல்லைகள் அமைந்திருக்கும் தாரதம்பியத்துக்குத் தக்கபடி பலன் ஏற்படும். ஒருவர் கையில் இரண்டு எல்லைகளும் சமமாய் கம்பீரமாய் அமைந்திருந்தால், விவகாரங்களுக்காகச் சண்டையிடுவதிலும், அச்சண்டையைத் தடுத்துக்கொள்வதிலும், அவர் சாமர்த்தியவானாவார் என்பதை அவை குறிப்பதாகும். இரண்டு எல்லைகளிலுமுள்ள செவ்வாய் மேடுகள் உச்சமாயிருந்தால், அவர் செவ்வாய் ஆதிக்கமுடையவர் எனஜயமறச் செல்லலாம். செவ்வாயின் சமவெளியாகிய மத்திய பாகம் சதைப்பிடித்து, அதில் மெல்லிய சிறு இரேகைகளிருந்தால், அவர் திடீரெனக் குணம்மாறுவார் என்பதை அவை குறிப்பதாகும். இத்துடன் மற்றைய இரண்டு எல்லைகளிலும் சதைபிடித்து கிரகாதிக்கமும் இருந்தால், அவை விபரீதமான சச்சரவுக்கு ஏதுவாய் இருக்கும். விவரீதிமான


**சக்தி**

சச்சரவு ஏற்படாவிடின் கோபதாபங்கள் படிப்படியாய் அடங்குவதற்கு அவை ஏதுவாய் இருக்கும். செவ்வாய் சமவெளி மட்டும் சதைப்பிடித்திருந்தால், அவருடைய கோபதாபங்கள் செல்லமாட்டா. அதனால், அவர் முணுமுணுப்பார்.

அநேகர் கைகளில் செவ்வாய்ச் சமவெளி சற்றுப்பள்ளமாய் இருக்கும். இவ்விதமிருப்பது, அவர்களுக்குப் பண நஷ்டமும் சிக்கலான நிலைமையும் உண்டாகும் என்பதையும், பிரவிருத்தியில் அவர்கள் முன்னேற்றம் அடையமாட்டார்கள் என்பதையும் அது காட்டுவதாகும். ஏனென்றால், அவர்களுக்கு அமைந்திருக்கும் செவ்வாய் ஆதிக்கம் எதிர்த்துப் போராடத்தக்க செவ்வாய் ஆதிக்கமாக அமையவில்லை. இந்த அமைப்பு நாற்பது வயதிற்குமேல் ஐம்பதுக்குள்ளாக பத்துவருடங்களுக்கு அமையும். இந்தச் சமவெளி புத்தி இரேகைக்கு மேலும் இருதய இரேகைக்கு கீழும் அமைந்திருக்கும். விதி இரேகையிலும் சுமார் 38 அல்லது 39 வயது முதல்சற்று ஏறக்குறைய ஐம்பது வயதுவரை அமைந்திருக்கும்.

ஒருவர் கையில் செவ்வாய் மேடு மூன்று எல்லைகளிலும் வலுவாய் அமைந்திருந்தால், அவர் அபாரமான சாமர்த்தியம் உடையவராவார். இந்நிலையில் அச்செவ்வாய் உச்சமாய் இருந்தால், அவருக்குச் சுப்பிரமணியக் கடவுள் அனுக்கிரகம் உண்டென்றும், அவர் கோபமும் சாந்தமும் உடையவர் என்றும், இவைகளை அவரிடம் சிறுவயது முதலே காணலாம் என்றும், சோதிடநூல் வல்லார் சொல்கின்றனர். மற்றும் இந்த அமைப்பு அவர் அசுரருடன் போராடி வெற்றி பெற்றிருப்பதை ஞாபகப் படுத்துவதாகும். சாமானிய மக்களில்ன் செவ்வாய் ஆதிக்கம் உள்ளவர், அசுரர்கள் யார் என்பதை ஊகித்து அறிந்துகொள்ளலாம். இப்படிப் பட்ட கையமைப்பு உடையவர்கள் தத்துவார்த்த ஞானிகளாகவும் விளங்குவார்கள். செவ்வாய் ஆதிக்கம் இல்லாமற்போனால், சண்டைக்கும் சமாதானத்துக்கும் பொருத்தமில்லை என்பது விளங்குவதாகும்.

செவ்வாய் ஆதிக்கம் உள்ளவர் மற்றவர்கள் வலுவில் சண்டைக்கு வந்தால், அல்லது வாதாடினால், அவசரப் படாமல் அமைதியாய் அதைக் கவனித்துக்கொண்டிருப்பார். விவகாரங்களில் தான் அபஜெயமடைந்தாலும் அதை அவர் பொருட்டாக எண்ணிச் சிந்திக்கமாட்டார். எவ்வளவு மனவேதனைகளையும் துன்பங்களையும் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி அவருக்கு அதிகமாய் இருக் கும்.




ஒருவர் கையில் புத்தி ரேகையின் முடிவுக்கு மேலேயுள்ள செவ்வாய் மேடு தாழ்ந்திருந்தால், அவர் எளிதில் மற்றவர்களுடைய யோசனைக்குக் கட்டுப்பட்டு அடங்கி, தனது தைரியத்தை இழந்துவிடுவார். சிற்சில சமயங்களில் அவர் பெருங்கோபம் கொள்ளுவார். ஆனால், தானே பலவீனப்பட்டு அடங்கிவிடுவார். அவர் சண்டையில் ஈடுபட்டால் அவருக்கு அபஜெயம் உண்டாவதோடு அவருடைய உயிருக்கும் ஆபத்துண்டாகும்.

(தொடரும்)

# துணுக்காய் கல்வி வலயத்தின் எழுத்தாக்க போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற எழுத்தாக்கபோட்டியில்வெற்றிபெற்றமாணவர்களின் விபரங்களினை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெளிற்றன் அறிவித்துள்ளார். இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரை**

**பிரிவு–I**

வி.தாரணி (மு/மயில்வாகனம் த.வி.), ம.தீனேகா (மு/யோகபுரம் ம.வி.), ர.பிறைநிலா (மு/அனிச்சியன்குளம் த.வி.),

**பிரிவு–II**

ம.அனிற்றாயினி (மு/மல்லாவி ம.க.), பி.எடின்சிகா (மு/யோகபுரம் ம.வி.), செ.கமலினி (மு/தோராங்கண்டல் த.வி.)

**பிரிவு–III**

சு.கஜனி (மு/பாண்டியன்குளம் ம.வி.), ச.பிரியங்கா (மு/ஒலுமடு த.வி.), த.துளசிகா (மு/கற்சிலைமடு அ.த.க.பா.)

**பிரிவு–IV**

க.பற்றிமாகெமிலஸ் (மு/மாங்குளம் ம.வி.), கு.குவேனியா (மு/யோகபுரம் ம.வி.), வி.குயிலினி (மு/பாலிநகர் ம.வி.),

**பிரிவு–V**

த.சயந்தன் (மு/மல்லாவி ம.வி.), தெ.ஜெனோதினி (மு/ஒட்டுசுட்டான் ம.வி.), சி.றஜீகா (மு/ஐயன்கன்குளம்)

**சிறுகதை**

**பிரிவு–IV**

வி.மஜித்தனா (மு/கற்சிலைமடு அ.த.க.), சி.ஜெயரூபன் (மு/ஒலுமடு த.வி.), வி.தனுசியா (மு/துணுக்காய் அ.த.க.பா.)

**பிரிவு–V**

அ.கஜன் (மு/துணுக்காய் அ.த.க.பா.), பு.ஊர்மிளா (மு/ஐயன்கன்குளம்),அ.டயானி (மு/கற்சிலைமடு அ.த.க.பா.)

**குறுநாடகம்**

**பிரிவு–IV**

செ.ருசாந்தினி (மு/துணுக்காய் அ.த.க.பா.), ரா.ரவிசங்கர் (மு/பாலிநகர் ம.வி.), ஆ.தனுஜா (மு/திருமுறிகண்டி இ.வி.)

**பிரிவு–V**

அ.ஜெனிற் (மு/பாளிநகர் ம.வி.), வி.சுஜாணா (மு/கற்சிலைமடு அ.த.க.பா.), யோ.ஊர்வனா (மு/பாண்டியன்குளம் ம.வி.)

**இலக்கணம்**

**பிரிவு–IV**

வி.வி.துசிகா (மு/தண்டுவான் அ.த.க.பா.), ம.தரணியா (மு/யோகபுரம் ம.வி.), இ.மோகனா (மு/கற்சிலைமடு அ.த.க.பா.)

**பிரிவு–V**

இ.நிரா (மு/யோகபுரம் ம.வி.), இ.தவராசா மு/பாலிநகர் ம.வி.), இ.தர்மிதா (மு/முத்தையன்கட்டு வலது கரை அ.த.க.பா.)

**திறனாய்வு**

**பிரிவு–V**

பு.மிதுசா (மு/மல்லாவி ம.வி.), வே.றியோப்பிரியா (மு/ஒட்டுசுட்டான் ம.வி.), சி.சியாமினி (மு/பாலிநகர் ம.வி).

**கவிதை**

**பிரிவு–IV**

சி.பவித்திரா (மு/ஒட்டுசுட்டான் ம.வி.), அ.குந்தவை (மு/மல்லாவி மத்திய கல்லூரி), பா.கலையரசி (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா.)

**பிரிவு–V**

ஜெ.ஜெனாத்தகன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), கோ.துஷியா (மு/யோகபுரம் ம.வி.), அ.ரோஜிதா (மு/பாலிநகர் ம.வி.).

இப்போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண மட்டப் போட்டிக்கு தயாராகுமாறும் அவர் அறிவித்துள்ளார். (அ–3–15)

# இராணுவத்தளபதி ஜகத்ஜயசூரிய பாரியாருடன் பாகிஸ்தான் விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கு ஆறு நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய தனது பாரியார் சகிதம் பாகிஸ்தான் சென்றுள்ளார். பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் அஸ்பக் பர்வேஷ் கயானியின் அழைப்பையேற்றே ஜெனரல் ஜகத் ஜயசூரிய தனது மனைவி சகிதம் பாகிஸ்தான் சென்றுள்ளார். சுக்லாலாவிலுள்ள பாகிஸ்தான் விமானப் படைத்தளத்தில் இறங்கிய அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த ஆறு நாட்கள் விஜயத்தின் போது இலங்கை இராணுவத்தளபதி, அந்நாட்டு இராணுவத்தளபதி, இராணுவ தலைமை அதிகாரி மற்றும் சிரேஷ்ட படை அதிகாரிகளைச் சந்திப்பதுடன் படைத்தலைமையகங்கள், கூட்டுப் படைத் தலைமையகங்கள், ஆயுத உற்பத்திச் சாலைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவப் பகுதிகளுக்கும் சுற்றுலா மையங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் தனது மனைவியுடன் இலங்கைக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் இராணுவத் தளபதி விடுத்த அழைப்பையேற்றே இலங்கை இராணுவத் தளபதி தற்போது பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளார். (அ–2)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த போவதில்லை

## அமைச்சர் சம்பிக்க விடாப்பிடி

(கொழும்பு)

அமெரிக்காவுடன் இணைந்து நாட்டை காட்டிக்கொடுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிராக அரசியலமைப்பின் 157 ஆவது பிரிவின் பிரகாரம் கடும் நடவடிக்கை அவசியம். இனியும் பொறுத்திருப்பதில் அர்த்தமில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கருத்துத்தெரிவிக்கையில்,

யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற போர்க் குற்றங்கள் குறித்து அரசாங்கம் விசாரணை செய்யும். ஆனால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் காணப்படுகின்ற அதிகாரப்பகிர்வு போன்ற தேசிய அரசியலுடன் தொடர்புபட்ட விடயங்களை ஒருபோதும் அமுல்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் ஒரு விடயத்தை உறுதியாக கூற விரும்புகின்றோம். இலங்கை ஒரு சுயாதீன நாடு. எனவே, இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிட அதிகாரம் கிடையாது. மீறி தலையிடுவது அநாகரிகமான செயலாகும்.

ஜெனீவாவின் தீர்மானங்களின்படி இலங்கை நடக்காது. குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்நாட்டில் நடைமுறைப்படுத்தப் போவதில்லை.

ஆனால், யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் நடைபெற்றதாக கூறப்படுகின்ற போர்க் குற்ற விடயங்கள் தொடர்பில் இராணுவத்திடம் கடற்படை மற்றும் ஏனைய படைகளிடம் உள்நாட்டு விசாரணைகளை செய்ய முடியும்.

இது ஜெனீவா தீர்மானத்திற்கு அடிபணிந்து அல்ல. அத்தோடு உள்நாட்டில் அரசியல் தீர்வை ஏற்படுத்துதல், வடக்கு, கிழக்கு இணைப்பு போன்ற விடயங்கள் குறித்து பேசுவதற்கு எந்தவொரு அந்நிய நாட்டிற்கும் உரிமையில்லை. எமக்கென்று நீதிமன்றங்கள் உள்ளன.

அத்தோடு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றம் உள்ளது. இவற்றைவிட மிஞ்சிய சக்தியாக சர்வதேசத்தை இலங்கை அரசு ஒருபோதும் கருதாது.

எவ்வாறாயினும் சம்பந்தன் குழுவினர் உள்நாட்டில் இருந்து கொண்டே பாரிய துரோகத்தனங்களை செய்து வருகின்றனர். அரசாங்கம் இவர்கள் விடயத்தில் இனியும் பொறுமைகாக்கக்கூடாது.

நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களை வெளிப்படையாக தண்டிக்க வேண்டும். இல்லையென்றால் நாட்டைப் பாதுகாப்பதில் நாம் தோல்வி கண்டு விடுவோம். அரசியலமைப்பின் 157 ஆவது பிரிவின் படி தேசத்துரோகிகளுக்கு என்ன தண்டனையோ அதனை சம்பந்தன் குழுவிற்கும் வழங்க வேண்டும் என்றார். (அ–2)

# ஆணைக்குழு அறிக்கையை உரிமைகோர முயற்சி

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை உரிமை கோர சிலர் முயற்சிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை எம்மால் உருவாக்கப்பட்டது. எமது அறிக்கையை பறித்துக்கொண்டு அவை தொடர்பில் எமக்கே அழுத்தம் கொடுக்கின்றனர்.

வரலாற்றுக்காலம் முதல் மனித உரிமைகளைப் பேணி வரும் நாடு என்ற ரீதியில் எவரும் எமக்கு பாடங்கள் புகட்ட வேண்டியதில்லை.

எனினும் அரசியல் தேவைகளுக்காக சிலர் நாட்டைக் காட்டிக்கொடுக்க முயற்சிக்கின்றனர். வெளிச்சக்திகளின் அழுத்தங்களை முறியடிக்க அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ–2)





யா/நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை ௪௭



கிறிஸ்மஸ்தினக் கொண்டாட்டத்தின்போது அமெரிக்க காலாட்படையைச் சேர்ந்த வீரர்கள், சல்மேன் தீவின் பழங்குடியினரின் பாரம்பரிய ஆடைகளில் காணப்படுகின்றனர்

1942 இறுதியில் தென்கிழக்கு ஆசியாவிலும் பசுபிக் சமுத்திரத் தீவுகளிலும் இருந்த ஜப்பானிய இராணுவத்தில் 60 டிவிசன்கள், விமானந்தாங்கிக் கப்பல்கள் உட்பட சுமார் 210 கப்பல்கள், முதலியன இருந்தன. இப்பிரதேசத்தில் நேச நாடுகளிடம்- அமெரிக்கா மற்றும் பிரிட்டனிடம் மட்டும்-35 டிவிசன்களும் 10 விமானந்தாங்கிக் கப்பல் உட்பட சுமார் 170 கப்பல்களும் கிட்டத்தட்ட 3500 விமானங்களும் இருந்தன.

கிரேட்பிரிட்டன் இப்பிரதேசத்தில் பெரும்பாலும் தனது டொமினியன்களிலும் காலனிகளிலும் இருந்த துருப்புக்களைக்கொண்டு போர்நடவடிக்கைகளில் ஈடுபட்டது. உதாரணமாக, ஆஸ்திரேலியா ஐந்து இலட்சம் பேரடங்கிய இராணுவத்தைத் திரட்டியிருந்தது, இந்திய துருப்புக்களின் எண்ணிக்கை 20 இலட்சம் எட்டியது. இவர்களில் 2இலட்சத்து 50 ஆயிரம் பேர்கள் ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் இருந்தனர். 5 இந்திய டிவிசன்கள் பர்மாவில் ஜப்பானியர்களுக்கு எதிராக இயங்கின. எஞ்சியவை பயிற்சி பெற்றுவந்தன.



நியூகினியாவில் ஜப்பானின் ஆக்கிரமிப்பில் இருந்த பெரிய விமானத் தளம் ஒன்றை அமெரிக்கக் கடற்படை கைப்பற்றுகிறது

## யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

1943-இல் பசுபிக் சமுத்திரப்பிரதேசத்தில் குறுகிய நோக்கங்களைக் கொண்ட தனிப்பட்ட நடவடிக்கைகள் நடந்தன. இதன் வட பகுதியில் அலெலூட் தீவுகளை- அத்து மற்றும் கீஸ்கா தீவுகளை கைப்பற்ற நேசநாடுகள் முடிவு செய்தன. முதலில் அத்து தீவைக் கைப்பற்றி இதன் மூலம் கீஸ்கா தீவிலிருந்து பாதுகாப்புச் சக்திகளை சப்ளை தளத்திலிருந்து துண்டிக்க இவை திட்டமிட்டன.



ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் அத்து தீவை நோக்கி நகரும் அமெரிக்க கடற்படை

அத்து தீவைக் கைப்பற்றுவதற்காக 7-வது அமெரிக்க டிவிசனும் (இதில்11ஆயிரம் போர்வீரர்கள்வரை இருந்தனர்) 8-வது கடற்படை யூனிட்டும் ஒதுக்கப்பட்டன. இதில் 3 பழைய போர்க்கப்பல்கள், பாதுகாப்பு விமானந்தாங்கிக் கப்பல்கள், 6குரூசர்கள், 19 நாசகாரிக் கப்பல்கள் 5சரக்குக் கப்பல்கள் ஆகியன இருந்தன. இது தவிர 263 விமானங்களையுடைய 11-வது வான்படையும் ஒதுக்கப்பட்டிருந்தது. முதலில் மார்ச் 1 ஆம் திகதி நடத்துவதாகத் திட்டமிடப்பட்டிருந்த இந் நடவடிக்கை மே 7-ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. மே 11 ஆம் திகதி வரை கப்பல்கள் அத்து பிரதேசத்தில் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருந்தன. மோசமான பருவநிலை காணரமாக நேச நாடுகளின் இறக்குப் படைச் சக்திகளுக்கு எதிராக ஜப்பானியர்களால் விமானப்படையை பயன்படுத்த இயலவில்லை. பீரங்கிப்படையின் பூர்வாங்கத்தாக்குதலுக்குப்பின் இறக்குப்படையினர் இரண்டு இடங்களில் தரையிறங்கினர். 2576 பேரடங்கிய தீவின் பாதுகாப்புச் சக்திகள் அமெரிக்கர்களுக்கு கடும் எதிர்ப்பை அளித்தாலும் கிட்டத்தட்ட முற்றிலுமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டன. மே-30 ஆம் திகதி வாக்கில் தீவில் சண்டைகள் முடிவடைந்தன. நேச நாடுகளின் தரப்பில் 3ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், நோய்வாய்ப்பட்டனர்.

அத்து தீவை தவிர்க்க இயலாதவாறு இழப்பதானது, கீஸ்கா தீவைப் பாதுகாத்து நிற்பவர்களை நம்பிக்கையற்ற ஒரு நிலைக்குத் தள்ளிவிடும் என்பதைப் புரிந்துகொண்ட ஜப்பானியப் படைத்தலைமை, இத்தீவின் பாதுகாப்புச் சக்திகளுக்கு தீவை விட்டு வெளியேறுமாறு கட்டளை பிறப்பித்தது. ஜூலை 29 ஆம் திகதி 2 ஜப்பானிய குரூசர்களும் 10 நாசகாரிக்கப்பல்களும் பனிமூட்டப் போர்வையினுள் கீஸ்கா குறுங்குடாவினுள் நுழைந்து, 45 நிமிடத்தில் தீவின் பாதுகாப்புச் சக்திகளை கப்பல்களில் ஏற்றி அரவமின்றி, சேதமின்றி பரமுஷீர் தீவிற்கு வந்தன.

பல தினங்களாக பீரங்கிப்படை மற்றும் பூர்வாங்க. விமானப்படை தாக்குதலுக்குப்பின் ஆகஷ்ட் 16 ஆம் திகதிதான் அமெரிக்கர்கள் கீஸ்கா தீவில் 34 ஆயிரம் பேரடங்கிய படையை இறக்கினர். அப்போதுதான் ஜப்பானியர்கள் தீவைவிட்டு வெளியேறியது தெரியவந்தது. இத்துடன் 1943-இல் பசுபிக் சமுத்திரத்தின் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்தன. அலெலூட் நடவடிக்கையின்போது ஜப்பானியர்கள் 3 நீர்மூழ்கிக் கப்பல்களை இழந்தனர். அமெரிக்காவின் தரப்பில் நாசகாரிக் கப்பலும் சரக்குக் கப்பலும் சேதமடைந்தன.

பசுபிக் சமுத்திரத்தின் தெற்கு மற்றும் மத்திய பிரதேசங்களிலும் நேச நாட்டினரின் நடவடிக்கைகள் மட்டானவையாக இருந்தன. இவை தனிப்பட்ட தீவகளுக்கான ஸ்தல இழுபறிச்சண்டைகளாகவும் ஜப்பானியப் பாதுகாப்பு சக்திகளுக்குச் சப்ளை செய்த போக்குவரத்து மார்க்கங்களில் கடற்படையினரின் தற்செயலான மோதல்களாகவும் இருந்தன. நேச நாட்டினரால் சல்மோன் தீவுகள், நியூக்கினியின் தென் கிழக்குப் பகுதி, நியூபிரிட்டனின் மேற்குப் பகுதி, கில்பெர்ட் தீவுகள் ஆகியவற்றைப் பிடிக்க முடிந்தது. பசுபிக் சமுத்திரத்தில் தான், கைப்பற்றிய நிலைகளை இழக்கும் அபாயம் முதன் முதலாக ஜப்பானின் முன் தோன்றியது.

ஜப்பானிய போக்குவரத்து மார்க்கங்களில் போராடுவதற்காக நேச நாடுகள் விமானப்படையையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் பயன்படுத்தினர். ஆனால், விமானப்படை குறைவாகத்தான் பயன்படுத்தப்பட்டது. இதன் பயன்களும் குறைவானத்தான் இருந்தன. ஜப்பானியர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களில் பயணம் செய்ததால் அமெரிக்கர்கள் தமது குண்டு வீச்சு விமானங்களிலும் கத்தலினா எனும் தமது பறக்கும் கப்பல்களிலும் ராடார்களை அமைக்கத் தொடங்கினர். 1943 இறுதியில் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களும் போக்குவரத்து மார்க்கங்களில் நடைபெற்ற போராட்டத்தில் அவ்வப்போது கலந்து கொள்ளலாயின.





ஐக்கிய அமெரிக்காவின் குண்டுவீச்சு விமானங்கள் நியூபிரிட்டன் அருகே துறைமுகத்திலிருக்கும் ஜப்பானிய கப்பல்களைத் தாக்குகின்றன

(தொடரும்)

# காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய

# தச திக்கு பரிபாலகர்கள் கும்பாபிஷேக சிறப்பு மலர்- 04.04.2012





**நிர்வாகஸ்தரின் உள்ளத்திலிருந்து...**

எமது காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் தச திக்கு பரிபாலகர்களுக்கு ஆலயங்கள் அமைத்து சிறிது சிறிதாக முழுமை பெற்று வருகின்றது.

எமது நன்மை, தீமையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் பரிபாலகர்களுக்கு இலங்கையின் எப்பாகத்திலும் ஆலயங்கள் இல்லை. இவ் ஆலயங்கள் அமைப்பது சம்பந்தமாக எமக்கான ஆலோசனைகளை யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத பீட சிரேஷ்ட பீடாதிபதி கிருஷ்ணானந்த சர்மா வழங்கினார். எமது விருப்பத்தினை தங்கள் கை வண்ணத்தினால் நிறைவேற்றிய இந்திய சிற்பாச்சாரியர்கள் சம்பந்தம்பிள்ளை இராமலிங்கம், வைத்தியநாதன் இராமதாஸ் ஆகியோர் குறுகிய காலத்தில் நிறைவேற்றித் தந்தார்கள். இவ் ஆலயங்கள் அமைத்ததினால் எமது ஆலய வெளி வீதி தூய்மைத் தன்மை அடைந்துள்ளது எனலாம். எமது வருங்கால சந்ததியினர் இவ் ஆலயங்களை பார்ப்பதன் மூலம் அட்டதிக்கு பரிபாலகர்களுக்கும் பிரம்மா, விஷ்ணு ஆகியோருக்கும் எத்திசையில் ஆலயம் அமைய வேண்டும் என்பதனை இலகுவாக கிரகித்துக் கொள்வார்கள். ஆகவே வருங்கால சமூகத்தினரையும் எமது ஆலயத்துடன் தொடர்புபடுத்த முடியும் என்பதே எமது நம்பிக்கை. எமது ஆலய பணிகளை சிறிதளவேனும் மக்கள் புரிந்து கொள்வார்களேயானால் அதுவே எமக்கான நன்மையாகும். இன்றைய நாளில் எமது விநாயகரை பிரார்த்திப்போம். அனைவரும் பேரின்ப பெருவாழ்வு பெற வேண்டுகின்றேன்.

கற்பக விநாயகர் ஆலயம்,
காரைநகர் ஆலய நிர்வாகஸ்தர்

---

**ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்**

**வாரிவளவு காரைநகர்.**

**தச திக்பாலகர் - பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்**

**04.04.2012**

**புதன் கிழமை காலை 06.10 - 07.30 வரை**

**கர்மாரம்பம் 03.04.2012 செவ்வாய் கிழமை**

**காலை 06.00 மணி**

ஆலய நிர்வாகஸ்தர்

---

**வரலாற்றுப் பெருமை வாரிவளவானுக்கே!**

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள தச திக்கு பரிபாலகர்களுக்கு நாளை 04.04.2012 அன்று கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இலங்கையிலேயே முதன்முதல் தச திக்கு பரிபாலகர்களுக்கு ஆலயங்கள் அமைத்த பெருமை வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்திற்கே உரியது. அதேபோல் நான்கு பக்கமும் கோபுரங்கள் அமைத்த பெருமையும் வாரிவளவானிற்கே உரியது.

அட்ட திக்கு பரிபாலகர்களான இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானர் ஆகியோருடன் பிரம்மா, விஷ்ணுவிற்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சகல ஆலயங்களிலும் பத்துத் திக்குகளிலும் மானசிகமாக பரிபாலகர்களை வரவழைத்து பூசை நடைபெறுவதுண்டு. ஆனால் வாரிவளவு பிள்ளையார் ஆலயத்தில் அப்பத்து பரிபாலகர்களுக்கும் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பத்துத் திக்குகளிலும் யார் யார் பரிபாலகர்கள் வீற்றிருக்கின்றார்கள் என உணரமுடிகிறது. இவ்வாறு தென்னிந்திய ஆலயங்களுக்கு ஒப்பாக சிறப்பான கலையம்சம் நிறைந்த இவ் ஆலயத்தின் தசதிக்கு பரிபாலகர்களின் கும்பாபிஷேகத்தினை கண்களால் கண்டு வழிபடுபவர்கள் பாக்கியசாலிகள். எனவே இப் பரிபாலகர்கள் ஆலயங்களை அமைக்க உதவியவர்கள் அனைவருக்கும் விநாயகர் அருள் கிடைக்க வழிபடுவோமாக!

வேழமுகத்து விநாயகனை தொழ
வாழ்வு மிகுந்து வரும்..
கற்பகன்

---

*மலரமைப்பு:- காரைநகர் செய்தியாளர்*


சகல விதமான கட்டட உபகரணங்களுக்கும் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்
**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**
இல.147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2833

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்**
இல.105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல.41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**சீமாட்டி புடைவைக்கடல்**
இல.122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீமுருகன் களஞ்சியம்**
இல.424, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ரட்ணம் பார்மசி & குறோசரி**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**யாழகம்**
இல. 568,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.




# அதிசயமான நோய்

## அம்புலி மாமா கதைகள்



சாரங்காபுரியில் அண்ணாமலையின் நகைக்கடை மிகப் பிரபலமானதாக இருந்தது. அவர் பரம்பரை வியாபாரி அல்ல! சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்த அண்ணா மலை ஒரு நகைக்கடையில் பணியாளராக வேலைக்குச் சேர்ந்தார். தனது கடின உழைப்பினாலும் ஆர்வத்தினாலும் அவர் நகை வியாபாரத்தின் சகல நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டார்.

சில ஆண்டுகளுக்குப்பின் அவர் வேலையை விட்டுவிட்டு சாரங்கபுரிக்கு வந்து ஒரு நகைக் கடையைத் தொடங்கினார். அந்த நகரில் இருந்த கைதேர்ந்த தொழிலாளிகளை வலைவீசிக் கண்டுபிடித்து தன்னிடம் வேலை க்கமர்த்தி கொண்டார். விரைவிலேயே அவருடைய கடை மிகவும் உகந்ததாகக் கருதப்பட வியாபாரம் பிரமாதமாக நடந்தது.

அவருடைய திறமையைக் கண்டு வியந்த நகரத்தின் செல்வர் ஒருவர் தன் புதல்வி நாகேஸ்வரியை அவருக்குத் திருமணம் செய்துவைத்தார். திருமணத்தின் மூலம் அவருக்கு ஏராளமான சீர் கிடைத்தது. ஆனால் இயல்பாகவே பொருளில் ஆசை கொண்டிருந்த நாகேஸ்வரிக்கு ஏற்கனவே இருந்த செல்வம் போதவில்லை. அதனால் அவள் மேலும் மேலும் செல்வத்தைப் பெருக்க முயன்றாள்.

தன்கணவர் தன்னுடன் இருப்பதைவிட முழுநேரமும் கடையிலே தங்கி வியாபாரம் செய்து வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்று விரும்பினாள். அவருக்கு வேண்டிய உணவு, தேநீர் ஆகிய அனைத்தையும் கடைக்கு அனுப்பி விடுவாள். தவிர அவள் கணவர் பணியாளர்களை நம்பி வேலையை ஒப்படைப்பதைஅறவேவிரும்பவில்லை.

ஆகையால் அது குறித்து அடிக்கடி அறிவுரை கூறுவாள். முதலில் தன்னிடமும் வியாபாரத்தின் மீதும் உள்ள அக்கறையினால் தான் அவள் இவ்வாறு கூறுகிறாள் என்று அண்ணாமலை கருதினார். ஆனால் காலப் போக்கில் அவள் பணம் பணம் என்று பேயாய் அலைவதையும் யாரையும் நம்பாமல் தூற்றுவதையும் கண்டு அவருக்கு சலிப்பு ஏற்பட்டது. ஆனால் அவளைக் கண்டித்து பேச அவருக்கு மனம் இல்லை. நாளடைவிலே அண்ணாமலைக்கு மன உளைச்சலில் உடலிலும் தளர்ச்சி ஏற்பட்டது. அதைப்பற்றி அவர் நாகேஸ்வரியிடம் குறிப்பிட்ட போது



அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

இவ்வாறு அண்ணாமலை அவதிப்படும்போது, சாரங்கபுரிக்கு ஒரு யோகி விஜயம் செய்தார். அண்ணாமலை அவரைத் தனிமையில் சந்தித்து, "சுவாமி! என் மனதில் நிம்மதி இல்லை. அதனால் என் உடலும் தளர்ந்து விட்டது. நான் என் வாழ்வில் இழந்த நிம்மதியை திரும்பப் பெறுவது எவ்வாறு?" என்று வினவினார்.


"மகனே! இளவயதில் உன் மனதில் வியாபாரத்தைப் பெருக்க வேண்டும் என்ற இலட்சியம் இருந்தது. அதை நீ எட்டிப் பிடித்து விட்டாய். அதனால் இப்போது உன்னிடம் குறிக்கோள் என்று ஒன் றும் இல்லாததால் வாழ்க்கை சூனியமாகக் காட்சியளிக்கிறது. இனி ஏனையவர்களுக்கு உதவி செய்து அதில் ஆனந்தம் காண முயற்சிப்பாய்!" என்றார்.

"சுவாமி! ஏனையவர்களுக்கு உதவி செய்வது என்றுமே எனக்குப் பிடித்த விடயம். ஆனால் அதைச் செய்யவிடாமல் என் மனைவி என்னைத் தடுக்கிறாள். மேலும் மேலும் செல்வம் திரட் டச் சொல்லி அவள் நச்சரிப்பதால் தான் என் வாழ்வின் நிம்மதி பறிபோய்விட்டது!" என்று அண்ணாமலை புலம்பினார்.

அதைக்கேட்ட யோகி புன்னகைத்துக் கொண்டே, "செல்வம் ஒன்றுதான் வாழ்வில் மகிழ்ச்சியைத் தரும் என்று உன் மனைவி தவறான கருத்துக் கொண்டிருக்கிறாள். நன்கு யோசனை செய்தால் அவள் மனதை மாற்ற ஏதாவது வழிபிறக்கும். அவளுடைய மனதை மாற்றினால் நீ இழந்த நிம்மதி உன்னை மீண்டும் தானே தேடி வரும்!" என்றார்.

"அப்படியே முயற்சிக்கிறேன்!" என்று சொல்லி அண்ணாமலை வீடு திரும்பினார். அன்றிரவு தூக்கம் பிடிக்காமல் அண்ணாமலை தீவிரமாக யோசித்துக் கொண்டேயிருந்தார். மறுநாள் அவர் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவில்லை. தன் மனைவியை அழைத்து தான் மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் எழுந்திருக்கவே முடியவில்லை என்றும் கூறினார்.

கலவரமடைந்த நாகேஸ்வரி உடனே மருத்துவரை வரவழைத்தாள். அண்ணாமலையை சோதி த்த மருத்துவர் ஏதோ ஒரு நோய் பற்றியிருக்கின்றதென்றும் ஆனால் அது என்னநோய் என்று தன் னால் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும் கூறினார். எந்த ஒரு மருத்துவராலும் அவரைப் பீடித்துள்ள நோய் என்னவென்றே கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறினார். அண்ணாமலை கடைக்குச் செல்வதையே நிறுத்திவிட்டு எந்தநேரமும் படுக்கையிலேயே கிடந்தார். சில மாதங்கள் கழித்து வீட்டிற்கு வருகை தந்த நாகேஸ்வரியின் உறவினர் ஒருவர் அவர்கள் இருவரையும் தம்பதி சமேதராக தலயாத்திரை செல்லும் படி அறிவுரை வழங்கினார். உடல் சரியில்லாத கணவரால்



எப்படிப் பயணம் மேற் கொள்ள முடியும் என்று நாகேஸ் வரி கவலையில் ஆழ்ந்தாள்.

ஆனால் அண்ணாமலை அவளுக்குத் தைரியம் கூறினார். ஆகையால் ஒரு வேலைக்காரனைத் துணை க்கு அழைத்துக்கொண்டு இருவரும் புனிதப்பயணம் மேற் கொண்டனர். அவ்வாறு செல் வதற்கு முன் அண்ணாமலையின் யோசனைப்படி வியாபாரப் பொறுப்பை நரசிம்மன் என்னும் பணியாளரிடம் ஒப்படைத்தாள்.

மூன்று மாதங்களாக பல தலங்களையும் தன் கணவருடன் சேர்ந்து தரிசித்த நாகேஸ்வரியின் மனதில் மாற்றம் உண்டாகியது. அவள் மனதை முழுமையாக ஆக்கிரமித்திருந்த பண ஆசையை அகற்றி சக்தியை உண்டாக்கியது. தனது கணவரின் உடல்நிலை யும் படிப்படியாகத் தேறுவதைக் கண்டு தனது செல்வத்தால் அடைய முடியாதது இறைவன் அருளினால் கைகூடுவதைக் கண்டு செல்வத்தை விடச் சிறந்தது இறையருளே என்று உணர்ந்தாள்.

பயணம் முடிந்து வீடு திரும்பிய பின் தங்களுடைய வியாபாரம் முன்போலவே சிறப்பாக நடைபெறுவதைக் கண்டு வியந்தாள். பணியாளர்களை திருடர்கள் என்றும் அவர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்றும் தான் முன்பு கணவனிடம் கூறியது நினைத்து வெட்கினாள். "நான் இதுவரை செல்வம்தான் வாழ்வில் மிக முக்கியம் என்று நினைத்தது தவறு! வாழ்க்கையின் உண்மையான ஆனந்தம் இறைவன் வழிபாட்டிலும் மற்றவர்களுக்குச் செய்யும் பரோபகாரத்திலும்தான் இருக்கிறது என்று உணர்ந்து கொண்டேன்" என்று தன்னிடம் கூறிய நாகேஸ்வரியின் சொற்களைக் கேட்டு அண்ணாமலை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் மூழ்கினார்.

தொடர்ந்து நாகேஸ்வரி அவரிடம், " ஏதோ ஒரு அதிசய நோய் உங்களை மட்டும் பீடித்திருக்கிறது என்று நான் இன்றுவரை தவறாக எண்ணியிருந்தேன். ஆனால் உண்மையில் என்னையும் பண ஆசை என்ற நோய் இத் தனை நாள் வாட்டி வதைத்தது. தலயாத்திரை சென்று வந்த பின் என்னுடைய நோயும் அகன்று விட்டது" என்றாள்.

மனைவியின் மனமாற்றத் தைக் கண்டு மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினார் அண்ணாமலை. தான் நோயாளி போல் நடித் ததை அவளிடம் சொல்லாமல் மறைத்துவிட்டார்.

# இலங்கை இராஜதந்திரிகள் மீது இராஜதந்திர அழுத்தங்கள்



## பீரிஸ் எச்சரிக்கை

இலங்கையின் மீது இராஜதந்திர ரீதியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதாரத்தடைகளை விடவும் தற்போதைக்கு இராஜதந்திர ரீதியாக அழுத்தங்களின் ஆபத்தே அதிகளவில் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்கள் செறிந்து வாழும் நாடுகளில் இலங்கை இராஜதந்திரிகள் மீது பல்வேறு வழிகளில் அழுத்தங்கள் பிரயோகிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஓர் கட்டமாகவே க்ளோபல் தமிழ் போரம் அமைப்பு பிரித்தானியாவிற்கான இலங்கைத் தூதரக உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா மீது அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படலாம் எனவும் அவ்வாறான சவால்களை எதிர்நோக்கத் தயாராக வேண்டுமெனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (2)

# மே மாதத்தின் பின்னர் வ.மா.ச.தேர்தல் நடத்தப்படும்

(கொழும்பு)

வடமாகாண சபைத்தேர்தல் எதிர்வரும் மேமாதத்தின் பின்னர் நடத்தப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேமாதளவில் வருடாந்த வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் பூர்த்தியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக வடக்குமாகாண சபைக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளது.

மேமாதத்தின் பின்னர் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்மிடம் குறிப்பிட்டார் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜே.வி.பி. கட்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் வடக்கு,கிழக்கு தனித்தனி மாகாணங்களாக அறிவிக்கப்பட்டன. அதன்பின்னர் இதுவரையில் வடக்கு மாகாணசபைக்குத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

வடக்கு மாகாண சபைக்கான ஆளும்கட்சி முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் நோக்கம் இருப்பதாக அமைச்சர் தேவானந்தா குறிப்பிட்டிருந்தார். (அ-2)

# அரசின் பதிலின் பின்னரே அடுத்த கட்ட தீர்மானம்

## சுரேஸ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பதிலுக்காக காத்திருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி அறிவித்துள்ளது. இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை மூன்றாம் தரப்பு ஒத்துழைப்புடன் ஆரம்பிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டத்திற்கு அரசாங்கம் இதுவரையில் பதிலளிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வை எட்டும் நோக்கில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்போ, பொதுநலவாய நாடுகள் அமைப்போ அல்லது வேறும் தரப்போ மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனைத்திட்டம் தொடர்பில் அரசாங்கம் தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவித்ததன் பின்னர் பேச்சுவார்த்தை தொடர்பான அடுத்த கட்ட தீர்மானங்களை எடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# 30 மருந்து விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும்

## ஔடதங்கள் அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி நடத்திச் செல்லப்பட்ட 30 மருந்து விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாசனைத்திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகார சபை தெரிவிக்கின்றது.

இந்தக் காலப்பகுதிக்குள் சுமார் 400 மருந்து விற்பனை நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அதிகாரசபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்தார்.

இவற்றில் சில மருந்து விற்பனை நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (2)

# அவுஸ். செல்ல தயாரான 6 பேர் கொழும்பில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு தயாராகவிருந்த ஆறு பேரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதியொன்றிற்கு அருகில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சட்டவிரோதமாக நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதற்கு குறித்த சந்தேகநபரிடம் ஏனைய ஐவரும் பணம் கொடுத்துள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. படகுகள் மூலம் இவர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல திட்டமிட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொட்டாஞ்சேனை, கிளிநொச்சி, திருகோணமலை, ஊர்காவற்றுறை மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## இறைவனுக்கும் மனிதனுக்கும் நறுமணமாவோம்



மனித ஆளுமையின் இரண்டாவது பரிமாணம் மனம், சிந்திக்கும் ஆற்றல், மாந்தரின் மனம் இறைவனையே எப்போதும் நினைக்க வேண்டும். நான் படுத்திருக்கையில் உம்மை நினைப்பேன். இரா விழிப்புக்களில் உம்மைப் பற்றியே ஆழ்ந்து சிந்திப்பேன் என்றார் திருப்பாடலாசிரியர்.

இயேசு எப்போதும் தந்தை இறைவனை மாட்சிப்படுத்துவது பற்றியே சிந்தித்தார். அவரது மனம் இறைவனையே எப்போதும் நாடியது. வேறு சிந்தனைகள் அவரிடம் இல்லை. பணம், பொருள், உணவு, ஓய்வு என எதுபற்றியும் இயேசு கவலைப் படவில்லை. மார்த்தாவின் சகோதரி மரியா விலையுயர்ந்த நறுமணத்தை தைலத்தால் இயேசுவின் காலடிகளைப் பூசுகிறார்.

இது இயேசுவின் மரணத்திற்கு ஒரு முன்னடையாளமாக அமைகிறது. இறந்துபோனவர்களின் உடலை நறுமணத் தைலத்தால் பூசுவது வழக்கம். மார்த்தாவுக்கும் மரியாவுக்கும் சகோதரரான இலாசர் இறந்து கல்லறையில் வைக்கப்பட்டபின் இயேசு அவரை மீண்டும் உயிர்பெறச்செய்தார். எனவே இயேசு உண்மையிலே நமக்குத் தம் சாவின் வழியாக உயிரளிக்கின்றார் என்பது தெரிகின்றது.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

ஆனாலும் இங்கு ஒரு கேள்வி எழுகிறது. கடவுளின் புகழுக்காக நாம் செலவு செய்வதற்கு பதிலாக ஏழைகளுக்கு கொடுத்து உதவ வேண்டாமா என்பதே அக்கேள்வி. இதற்கு இயேசு தருகின்ற பதில் ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கின்றார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை. ஏழ்மை என்பது கடவுள் நம் மீது திணிக்கின்ற நிலை அல்ல. மக்கள் பசி, பட்டினியால் வாட வேண்டும் என்றோ அவ்வாறு வாடுவோருக்கு உதவி செய்ய நமக்குக் கடமை இல்லை என்றோ கடவுள் நமக்கு கூறுவதில்லை.

இதற்கு நேர்மாறாக ஏழைகளுக்கு உதவும்போது நாம் இயேசுவுக்கே உதவுகிறோம். கடவுளுக்குச் செலவழிக்கின்றோம் என்னும் சாக்குப்போக்கு கூறி ஏழைகளை சுரண்டுவது கடவுளுக்கு ஏற்புடையதல்ல. எனவே சமூக நீதிக்காக உழைப்பதும் கடவுள் புகழுக்காக தியாகம் செய்வதும் இயேசுவின் போதனைப்படி மிக நெருக்கமாக இணைந்து பிணைந்தவை ஆகும்.

கடவுளை நினைத்து மனிதரை மறப்பதோ, மனிதரை நினைத்து கடவுளை மறப்பதோ கிறிஸ்தவரின் பார்வையல்ல. மாறாக ஒடுக்கப்பட்டோரை ஆதரிக்கின்ற அதேவேளையில் நாம் கடவுளை புகழ்வதையும் நாம் மறந்துவிடலாகாது.

# தனியான மே தினக்கூட்டம் நடத்தும் திட்டம் இல்லை

## ஐ.தே.க. பிரதித்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தனியாக மே தினக்கூட்டம் நடத்தும் திட்டம் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கூட்டத்தில் கலந்து கொள்ளாது கொழும்பில் தனியாக கூட்டமொன்றை ஒழுங்கு செய்வதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் கொழும்பில் தனியான கூட்டமொன்றை நடத்தும் எந்தவித திட்டமும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சில கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் மே தினக்கூட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளது.

எனினும் இந்த மேதினக்கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் மேதினப்பேரணிகளை நடத்துவதனை விடவும் கொழும்பில் நடத்துவது கட்சிக்கு சாதக நிலைமைகளை ஏற்படுத்தும் என அண்மையில் சஜித் பிரேமதாச தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பாக யூபிஎஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து உலகின் முதனிலை முதலீட்டு வங்கிகளில் ஒன்றான யூபிஎஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொடுகடன் வட்டிவீதம், பொருளாதார அபிவிருத்தி வீழ்ச்சி, அந்நிய செலாவணி, பாதீட்டு பற்றாக்குறை போன்ற காரணிகள் சாதகமான நிலையை பதிவு செய்யவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

இக்கொள்கை தொடர்பில் எடுக்கப்பட்ட சில பிழையான தீர்மானங்களே இந்த நிலைமை ஏற்படக்காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பற்றி பலர் சாதகமான கருத்துக்களை வெளியிட்ட போதிலும் உண்மையில் பல்வேறு நெருக்கடி நிலைமைகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2)

# கச்சதீவில் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் அடாவடித்தனம்

(கொழும்பு)

கச்சதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் வலை விரித்து மீன் பிடிக்க முற்பட்ட தமிழகம், இராமேஸ்வரப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது,

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் காலை 500 விசைப்படகுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

அவர்கள் கச்சதீவு அருகே மாலை வலை விரித்து மீன்பிடிக்க முயன்றனர். அப்போது இலங்கை கடற்படையினர் 6 குட்டி ரோந்து கப்பல்களில் 30 பேர் சகிதம் அங்கு வந்தனர்.

அங்கு நின்ற இராமேஸ்வரம் மீனவர்களை பார்த்து இங்கு மீன் பிடிக்க வரக் கூடாது என்று எத்தனை முறை சொல்வது? மீண்டும் மீண்டும் ஏன் இங்கு வருகிறீர்கள் என்று கூறி விரட்டியடித்தனர். இதனால் பயமடைந்த இராமேஸ்வரம் மீனவர்கள் வலைகளை சுருட்டிக் கொண்டு அவசர அவசரமாக வேறு பகுதிகளுக்கு சென்றனர்.

(அ-2)

# அமெரிக்க தீர்மானத்திற்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபடவுள்ள விமல்

(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஜெனிவா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் யோசனையை எதிர்த்து விகாரைகளுக்கு சென்று பிரசாரங்களை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவின் தீர்மானத்தினால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்ள முழு நாட்டு மக்களையும் அணித்திரட்டும் நோக்கில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான நிறைவேற்றப்பட்டுள்ள அமெரிக்காவின் யோசனை குறித்து தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை இதுவரை வெளியிடாத அரசாங்கம் தனது பங்காளி கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிஹெல உறுமய ஆகிய கட்சிகளை கொண்டு அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(2)

# பசில் ராஜபக்ஷ மேமாதம் இந்தியாவிற்கு பயணம்


பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மே மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக உயர்மட்ட அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது இந்திய அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களையும் மூத்த அதிகாரிகளையும் சந்தித்து பேச அவர் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்தும் வகையிலான பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

அரசியல் விவகாரங்கள் தொடர்பான பேச்சுக்களுக்கு மேலதிகமாக இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக தொடர்புகள் மற்றும் இலங்கையில் தற்போது இந்தியா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2)




நேற்று முன்தினமிரவு 8.30–9.30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் வீடுகளிலுள்ள அநாவசியமான ஒரு மின்விளக்கை அணைத்து வைப்பதன் மூலம் 2012 புவி மணித்தியாலயத்தை அனுஷ்டிக்கும் பிரதான நிகழ்வை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஆரம்பித்து வைத்த தைப்படத்தில் காணலாம்.




★ 1865-அமெரிக்க உள்நாட்டுப் போர் கூட்டுப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்ட் நகரைக் கைப்பற்றின.

★ 1917-வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த விளாடிமிர் லெனின் ரஷ்யா திரும்பினார்.

★ 1922-ஜோசப் ஸ்டாலின் சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் முதற் பொதுச் செயலாளரானார்.

★ 1933-நாசி ஜேர்மனியில் யூதர்களின் வணிக நிறுவனங்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கை வெற்றி பெறவில்லை.

★ 1942-இரண்டாம் உலகப் போர் பட்டான் தீபகற்பத்தில் ஜப்பானியப் படையினர் அமெரிக்க மற்றும் பிலிப்பைன்ஸ் படையினர் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1948-தென் கொரியாவில் ஜேஜு என்ற இடத்தில் மனித உரிமை மீறல் மற்றும் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

★ 1958-பிடெல் காஸ்ட்ரோவின் புரட்சி இராணுவம் ஹவானா மீது தாக்குதல் தொடுத்தது.

★ 1966-சோவியத்தின் லூனா 10 விண்கலம் சந்திரனின் சுற்று வட்டத்தை அடைந்தது. பூமியை விட வேறொரு விண் பொருளை சுற்ற ஆரம்பித்த முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1973-உலகின் முதலாவது நகர்பேசி அழைப்பு நியூயோர்க் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

★ 1974-13 அமெரிக்க மாநிலங்களில் ஆரம்பித்த கடும் சூறாவளி காரணமாக 315 பேர் உயிரிழந்தனர். 5 ஆயிரத்து 500 பேர் வரையில் காயமடைந்தனர்.

★ 1975-பொபிஃபிஷர் அனதோலி கார்ப்பொவ்வுடன் சதுரங்கப் போட்டியில் பங்குபற்ற மறுத்ததால் கார்ப்பொவ் உலக வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கி கொண்டார்.

★ 1982-போக்லாந்து தீவுகளை ஆர்ஜென்டினாவிடம் இருந்து மீளப்பெறும் முகமாக பிரித்தானியா தனது கடற்படையை அங்கு அனுப்பியது.

★ 1996-ஐக்கிய அமெரிக்காவின் வான்படை விமானம் ஒன்று குரோவாசியாவில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அமெரிக்க அரசின் வணிக செயலாளர் ரொன் பிரௌன் உட்பட 35 பேர் உயிரிழந்தனர்.

★ 1997-அல்ஜீரியாவில் தலித் என்ற கிராமத்தில் 52 பொதுமக்கள் ஆயுததாரிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

பிறப்புக்கள்

★ 1924-மார்லன் பிராண்டோ, ஹொலிவுட் திரைப்பட நடிகர்

★ 1934-டேம் ஜேன் குட்டால், சிம்பன்சியைப்பற்றி ஆராய்ந்த ஆங்கிலேய பெண்.

★ 1973-பிரபுதேவா, இந்தியத் திரைப்பட நடிகர், நடன அமைப்பாளர் மற்றும் இயக்குநர்

இறப்புக்கள்

★ 1680-சிவாஜி மராட்டியப் பேரரசர் (பி.1630)


★ 1932-வில்ஹெம் ஒஸ்ட்வால்ட், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர் (பி.1853)



★ 1955-இந்திய திரைப்பட பாடகர் ஹரிஹரனின் பிறந்த தினம்

# அதிசய உலகம்...

## உலக சாதனையை முறியடித்த பாலம் சீனாவில்



இந்தப் பாலம் நிச்சயம் சீனர்களின் உலக சாதனை தான். மோட்டார் சைக்கிளில் செல்வோர்கள் கீழே பார்த்தால் நிச்சயம் தலை சுத்திக் கீழே விழுவார்கள்.


கீழே இருந்து 1102 அடி உயரங்களைக் கொண்டது இந்தப் பாலம். Aizhai என்று பெயர் கொண்டு அழைக்கப்படும் இந்தப் பாலம்தான் தற்போது உலகின் நீளமான மற்றும் உயரமான பாலம் ஆகும்.

2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடங்கப்பட்ட பாலத்தின் வேலைகள் கடந்த ஆண்டு இறுதியில் முடிவுக்கு வந்தன.

சீனாவின் Hunan மாகாணத்தில் உள்ள Jishou பிராந்தியத்தில் போக்குவரத்தைச் சீர் செய்வதற்காக உருவாக்கப்பட்ட இந்தப் பாலம் நேற்றைய தினம் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

1888 மின்குமிழ்கள் இந்தப் பாலத்தில் பொருத்தப்பட்டுள்ளன. 3858 அடிகள் நீளமானது என்பது இந்தப் பாலத்தின் சிறப்பாகும்.

## திருட்டிலிருந்து தப்புவதற்காக அதிநவீன பாதுகாப்பு பெட்டகம்




அமெரிக்காவில் பொருளாதார மந்தநிலை காரணமாக கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரிக்கலாம். அஞ்சுபவர்களுக்காக கட்டிலுடன் பொருத்தப்பட்ட அதிநவீன பாதுகாப்பு பெட்டகங்களை நிறுவனமொன்று வடிவமைத்துள்ளது.

பெட் பங்கர் எனப்படும் இந்தப் பாதுகாப்பு பெட்டகம் சுமார் 1300 இறாத்தல் எடையுடையது. அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகன் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் அதிநவீன பூட்டுக்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

கோடீஸ்வரர்கள் பலர் தனது இத்தயாரிப்பை வாங்கி வருவதாக அதை வடிவமைத்த ஜோன் அட்ரெய்ன் என்பவர் கூறியுள்ளார்.

வீட்டுக்குள் அத்துமீறி பிரவேசிக்கும் சம்பவங்கள் அதிகரிக்கின்றன. பெறுமதியான பொருட் களை வைத்துக்கொள்வதற்கு உங்கள் கட்டில் அடியைவிட பாதுகாப்பான இடம் வேறு எங்கிருக்க முடியும் என அவர் வினவுகிறார்.

## நோயை கண்டுபிடிக்கும் றோபோ




பலவிதமான றோபோக்கள் வடிவமைக்கப்பட்டு செயற்பாட்டில் உள்ளன. இந்த நிலையில் தற்போது மனிதர்களின் நோயை கண்டறியும் றோபோக்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இவை ஒரு உயிரினம் போன்று தங்கள் பணியை செய்ய முடியும்.

இதை இங்கிலாந்தில் உள்ள நியூகேஸ்டில் பல்கலைக்கழகத்தின் சர்வதேச நிபுணர்குழு வடிவமைத்துள்ளது. மைக்ரோ றோபோ என அழைக்கப்படும் இவற்றில் மைக்ரோ எலெக்ட்ரானிசுடன் சைபர் பிளா சாம் கலக்கப்பட்டுள்ளது. இது அட்லாண்டிக் கடலில் ஆழ் பகுதியில் வாழும் லேம்பிரோ என்ற உயிரினத்தின் செயற்பாடு போன்று வடி வடிவமைக்கப்பட்டுள்ளது.

சைபர் பிளாசத்தில் எலெக்ட் ரோனிக் நரம்பு மண்டலம் கண், மூக்கு உள்ளிட்ட உணர்வு உறுப்புகள் உள்ளன. இவை பாலூட்டிகளின் செல்களில் இருந்து தயாரிக்கப்பட்டவை இவற்றை செயற்கை தசை என்று அழைக்கின்றனர்.

## உலகின் மிக நீளமான பூனை



அமெரிக்காவில் உள்ள பூனையொன்று உலகிலேயே மிக நீளமான வளர்ப்பு பூனை என்ற புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளது.


ஸ்டீவி எனும் 5 வயதுடைய இந்தப் பூனை அண்மையில் அளவிடப்பட்டபோது அதனது மூக்கு முதல் வால் வரையிலான நீளம் 48.5 அங்குலமாக இருந்தது. அதையடுத்து அப்பூனை உலக சாதனை பூனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நவேடா மாநிலத்தின் ரெனொ நகரைச் சேர்ந்த அப்பூனையின் உரிமையாளர்களான ரொபின் ஹென்ரிக்ஸன் மற்றும் எரிக் பிரரேஸ்னெஸ் குறிப்பிடுகையில், இப்பூனையை பார்த்தவர்கள் அந்த பூனையின் நீளத்தைப் பார்த்து திகைத்ததுடன் அதனை உலக சாதனை வெளியீட்டாளர்களுக்கு அறிவித்தால் நிச்சயம் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெறும் என்று கூறினார்கள். அதன்பின் நாங்கள் உலக சாதனை வெளியீட்டாளர்களுக்கு அறிவிப்பது என்று தீர்மானித்தோம்.

ஸ்டீவ் மூன்று வருடத்திற்கு முன்பே அபூர்வமான முறையில் நீளமாக இருந்ததை நாங்கள் அவதானித்தோம்என்று கூறியுள்ளனர்.

ஸ்டீவ்வுக்கு முன்னர் உலக சாதனைக்குரியதாக விளங்கிய பூனை 48 அங்குல நீளமானதாகும்.

## அபூர்வமான Retor கார்களின் தொகுப்பு



தற்போது காணப்படும் மனிதர்களின் போக்குவரத்து தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் பல வண்ணங்களில் அழகாகவும் ஆடம்பரமாகவும் காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் மனிதர்கள் பயன்படுத்திய வித்தியாசமான வடிவங்களில் காணப்படும் கார்களைப் படத்தில் காணலாம்.

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 06 :- நீரிழிவு நோயாளிகள் தங்கள் பாதங்களில் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டுமா?**

**பதில்:-** ஆம் நீரிழிவு நோயாளிகள் தங்கள் பாதங்களில் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டும். தங்கள் பாதங்களை பாதுகாத்து கொள்வதினாலும் சரியான அளவுள்ள சாப்பாத்து மற்றும் செருப்புக்களை அணிந்து கொள்வதினாலும் நீரிழிவு நோயாளிகள் தங்கள் பாதங்களுக்கு பாதிப்பு உண்டாகாமல் பார்த்துக் கொள்ளலாம்.

நீரிழிவு நோயாளிகள் பின்வருமாறு நடந்து கொண்டு தங்கள் பாதங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும்.

1.தினமும்பாதங்களைவெதுவெதுப்பான நீரினால் சவர்க்காரம் போட்டு கழுவ வேண்டும்.

2. பாதங்களையும் விரல்களின் இடைவெளிகளையும் நன்கு உலர விடுங்கள்.

3.நகங்களை அடிவரை வெட்டாமல் நுனியில் சீராக வெட்டிக் கொள்ளுங்கள். நகம் வளரும் பொழுது நகசுத்தி வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

4. சரியான அளவுள்ள தூய்மையான, மென்மையான காலுறைகளை அணிய வேண்டும்.

5. லோசன் கிரீம் முதலியவற்றை பாதங்களில் பயன்படுத்தினீர்கள் என்றால் விரல் இடுக்குகளில் அவை படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

6.கால்களில் அடிக்கடி ஈரம் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பருவநிலைக்கேற்ப பருத்தி அல்லது கம்பளியால் தயாரிக்கப்பட்ட காலுறைகளையும் தோல்ச் செருப்புகளையும் அணியுங்கள்.

7. சப்பாத்துக்களை அணிவதற்கு முன்பு அவற்றினுள் சருமத்தை பாதிக்கும் ஆணிகள், சிறுகற்கள், கண்ணாடிச் சில்லுகள் இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

8. காலணிகள் அணியாமல் வீட்டிற்குள்ளும் வெளியிலும் நடக்காதீர்கள்.

9. தினமும் நடைப்பயிற்சி செய்யுங்கள் . இரத்த ஓட்டம் சீராக இருக்க இது உதவும்.

**கேள்வி 07:-எப்படிப்பட்ட நீரிழிவு நோயாளிகளுக்கு சிறுநீரக பாதிப்பு உண்டாகும்?**

**பதில்:-** பின்வருபவர்களுக்கு சிறுநீரக பாதிப்புகள் உண்டாவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

1. 15 வருடங்களுக்கு மேலாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்.

2. நீரிழிவு நோயை கட்டுப்படுத்தாதவர்கள்

3. இரத்த கொதிப்பு அல்லது உயர் இரத்த அழுத்தம் கடுமையாக இருப்பவர்கள்.

4.அடிக்கடி சிறுநீர் பிரச்சினை உள்ளவர்கள் அல்லது சிறுநீர் தொற்று உள்ளவர்கள்.

5. நீரிழிவு நோயினால் சிறுநீரகம் பாதிப்பிற்குள்ளான குடும்பத்தில் பிறந்தவர்கள்.

6.புகைபிடிக்கும் பழக்கமுள்ள நீரிழிவு நோயாளிகள்

7.சிறுநீரக பாதிப்புள்ள குடும்பத்தில் பிறந்தவர்கள்.

**கேள்வி 08:- நீரிழிவு நோயினால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படுவதை எவ்வாறு தடுக்கலாம்?**

**பதில்:-** பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டால் நமது சிறுநீரகங்களை நம்மால் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

1. இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இரத்தத்தில் சீனியின் அளவு அடிக்கடி ஏறி இறங்கினால் இது ஆபத்திற்கு அறிகுறியாகும்.

2. இரத்த அழுத்தத்தினை அவ்வப்போது பரிசோதித்து கொள்ள வேண்டும். அது எப்போதும் உயர்ந்திருந்தால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

3. நீங்கள் உண்ணும் உணவில் புரதச்சத்தினை குறைத்துக் கொள்ளுங்கள். (சைவ உணவை விட அசைவ உணவில் புரதச்சத்து அதிகம் இருக்கிறது.)

4. தானாக மருந்து மாத்திரைகள் உட்கொள்ளும் பழக்கத்தை விட்டொழியுங்கள். உங்கள் மருத்துவரை கலந்தாலோசித்து மருந்து மாத்திரைகள் சாப்பிடுங்கள். இல்லையேல் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும் அபாயம் உண்டு.

5. உங்கள் சிறுநீரில் புரதச்சத்து இருக்கிறதா குறிப்பாக கறுப்பு புரதம் (Micro albumin) இருக்கிறதா இரத்தத்தில் யூரியா இருக்கிறதா என்பதற்கான பரிசோதனைகளையும் அதுபோல் க்ரியேட்டினின் (creatinine) பரிசோதனைகளையும் வருடத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை செய்து கொள்ள வேண்டும்.

**கேள்வி 09:- மருந்து மாத்திரைகள் வாயிலுள்ள சுவையை மாற்றி விடுமா?**

**பதில்:-** சிலவகை மருந்து மாத்திரைகள் (Glycomate or Glycophase) வாயிலுள்ள சுவையை மாற்றி விடும் தன்மை கொண்டவை. இம்மருந்துகளால் வாய் துர்நாற்றம் வரும். நெஞ்சு எரிச்சல் வரும். இவ்வாறு ஒருவருக்கு இருந்தால் அவர் உடனே தனது மருத்துவரை கலந்தாலோசித்து அதற்கு பதிலாக வேறு மருந்து மார்த்திரைகளை பயன்படுத்த வேண்டும்.

**கேள்வி10:- நீரிழிவு நோயாளியின் கண்களும் பாதிக்கப்படுமா?**

**02**

**பதில்:-**சில நீரிழிவு நோயாளிகளின் கண்கள் இரத்தம் உறைந்து போவதால் அவர்களின் கண்கள் பாதிக்கப்படும். அவர்களின் பார்வை தெளிவாக இருக்காது. குறிப்பாக எடை அதிகமுள்ள பொருட்களை தூக்கும் பொழுது இவ்வாறு நேரிடும். அதனால் மருத்துவரின் ஆலோசனைப்படி இவர்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

**கேள்வி 11:- இன்சுலின் ஊசி போடுவதால் ஒவ்வாமை, தொற்று போன்றவை உண்டாகுமா?**

**பதில்:-** நீரழிவு நோயாளி மனித இன்சுலின் பயன்படுத்தினார் என்றால் அதில் நோய் எதிர்ப்பு சக்தி சிறிதளவு இருக்கும். அதனால் ஒவ்வாமை உண்டாகாது.

**கேள்வி 12:- நீரிழிவு நோயாளிக்கு பார்வைக் கோளாறு உண்டாகுமா?**

**பதில்:-** இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக இருந்தால் அது விழியின் பின்புறத் திரையை பாதிக்கும். அல்லது கருமணியிலுள்ள லென்ஸை பாதிக்கும். இதனால் ஒருவருக்கு அருகிலுள்ள அல்லது தூரத்திலுள்ள பொருட்கள் தெளிவாக தெரியாது. அவர்கள் கண்ணாடியின் ஆற்றல் அதிகரித்து கொண்டே போகும். வயதான பின்னர் கண்களில் புரை உண்டாகும்.

**கேள்வி 13:- நீரிழிவு நோயின் காரணமாக விழியின் எந்தப் பகுதி மிகவும் மோசமாக பாதிக்கப்படும்?**

**பதில்:-** நீரிழிவு நோயாளிக்கு விழியின் பின்புறத்திரையே அதிகமாக பாதிக்கப்படும். விழித்திரைக்கு இரத்தத்தை எடுத்து செல்லும் நாளங்கள் வீங்கி விடும். சீனியின் அளவு கட்டுப்படுத்தப்படவில்லை என்றால் இந்த. இரத்த நாளங்கள் வெடித்து விழித்திரையில் இரத்தம் உறைந்து விடும்.


(தொடரும்)

**டாக்டர்.A.K.ஜிங்கான்**




# நோயின்றி வாழ

**02**



இந்த இயந்திரமயமான உலகத்தில் குழப்பம் இல்லாமல் வாழ்வதற்கு நம்மை நாமே தயார் செய்துகொள்ள வேண்டும். இந்த குழப்பம் மூளைக்கு அதிக சுமையைத் தந்து அதன் காரணமாக இரத்த அழுத்தம், மனப்பயம் போன்றவற்றைத் தூண்டுகின்றது. சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதும் நமது ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதும் ஒன்றே. அடுத்து சுத்தமான தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். இன்று வருகின்ற பல உடல் நலக் கேடுகளுக்கு நாம் குடிக்கும் தண்ணீர் ஒரு காரணமாகவே இருக்கின்றது. அடுத்து நம்மில் பலருக்கு இல்லாத ஒரு பழக்கம். ஆனால், இருக்க வேண்டிய ஒரு பழக்கம் உடற்பயிற்சி.

எந்த அளவிற்கு விஞ்ஞானம் நம் வாழ்க்கையை எளிமைப்படுத்தி விட்டதோ அதே அளவிற்கு நம்மை ஆரோக்கியத்திலிருந்தும் விடுபட்டு தூரப் போகவும் செய்துவிட்டது. நம் முன்னவர்கள் அன்றாட வீட்டு வேலைகளையும் ஏனைய வேலைகளையும் அவர்களே செய்தார்கள். சாதனங்கள் இல்லாத காலம் அது. வாழ்க்கை அவ்வளவு வசதியாகவும் எளிமையாகவும் இல்லாத காலம் அது. ஆனாலும் அவர்கள் நோயின்றி வாழ்ந்தார்கள். அதனால்தான் இன்று ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடற்பயிற்சி செய்யுங்கள். காலையில் நடைப்பயிற்சி செய்யுங்கள். தியானம் செய்யுங்கள். யோகாசனம் செய்யுங்கள் என்று டாக்டர்கள் வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

நோயின்றி வாழ்வது எப்படி என்பதை இன்றைய மனிதர்கள் ஏதோ ஒரு நோய் வந்த பின்னர்தான் தெரிந்து கொள்ளவே ஆரம்பிக்கிறார்கள். காலையில் நடைப்பயிற்சி செய்யுங்கள் என்று டாக்டர் சொன்ன பின்னர்தான் பலர் நடக்கவே ஆரம்பிக்கின்றனர். இந்த ஒரு எளிமையான விடயத்தை பணம் கொடுத்துத்தான் தெரிந்து கொள்கிறார்கள். ஸ்கான் என்பது பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தெரிந்து கொள்ளப் பயன்படுகிற ஒரு சாதனம். இந்த சாதனத்தைப் பயன்புடுத்தி ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்கும் முறையைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரு மகளிர் அமைப்புக் குரல் கொடுத்திருக்கிறதே. அதுபற்றி உங்கள் கருத்து?

ஸ்கான் மூலம் குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரிந்துகொள்வதற்கு என்பதை அந்த அதிநவீன சாதனத்தை டாக்டர்களாகிய நாங்கள் பயன்படுத்துவதில்லை. முதலில் இதனை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். வேண்டி விரும்பிக் கேட்கும் பட்சத்தில்கூட குழந்தை ஆணா, பெண்ணா என்று சொல்லப்படுவதில்லை. எங்கள் மருத்துவமனையில் நாங்கள் சொல்வதில்லை. ஸ்கான் என்பது உடலில் ஏற்படும் சிறு பிரச்சினையைக்கூட மிகமிகத் துல்லியமாக அடையாளப்படுத்தும் ஒரு நவீன கருவி. ஒரு நோயாளிக்கு வந்திருக்கும் பாதிப்பை உடனடியாகக் கண்டுபிடித்து உடனடியாக சிகிச்சை அளிப்பதற்குப் பயன்படுகிற கருவிதான் ஸ்கான். உதாரணத்திற்கு சிடி ஸ்கான், எம்ஆர்ஐஸ்கான் போன்றவற்றின் உதவியால் மிகமிகத் துல்லியமாக முதுகுவலி என்று வருபவர்களுக்கு அந்த முதுகுவலிக்கான காரணத்தை துல்லியமாக கண்டுபிடிக்கப் பயன்படுகிறது. முதுகுத் தண்டுவடத்தில் இருக்கும் சிறுசிறு பாதிப்புகள்தான் முதுகுவலிக்குக் காரணம் என்பதை இந்தச் சாதனம் வருவதற்கு முன்பு வரை எவராலும் கண்டு பிடிக்க முடியாமல் இருந்தது. அடுத்து, மூளை யில் ஏற்படும் சிறுசிறு கட்டிகளைக்கூட இந்த ஸ்கான் மூலம் துல்லியமாகக் கண்டுபிடிக்க முடியும். எனவே, மருத்துவத் துறையில் ஸ்கான் ஒரு புரட்சியையே செய்து கொண்டிருக்கிறது.

**ஒரு டாக்டராக பதில் சொல்லுங்கள். அசைவம் நல்லதா அல்லது சைவம் நல்லதா?**

அசைவத்துடன் ஒப்பிடும் போது சைவம் நல்லது, ஆனால் அசைவம் தப்பில்லை. அதிகம் உண்பது தான் தப்பு. சுய மருத்துவம் குறித்த உங்கள் கருத்து?

இன்று பல நோயாளிகள் தங்களுக்கு வந்திருக்கும் தன்மையை அறியாமல் அந்த நோய் முற்றிய நிலையில் மருத்துவமனைக்கு ஓடி வருவதற்கு இந்த சுய மருத்துவம் தான் காரணமாக உள்ளது. உதாரணமாக, பெரால்ஸ்கான் என்கிற மருந்து வயிற்று வலிக்கு தரப்படுவது. (இப்போது பெரால்ஸ்கான் விற்பனையில் இல்லை) அதனை வயிற்று வலி வந்த நபர் கடைக்குச் சென்று தாங்களாக வாங்கிச் சாப்பிடும் பொழுது அந்த நொடியே வயிற்று வலியானது காணாமல் போய்விடலாம். ஆனால், அந்த பெரால்ஸ்கானில் அனால்ஜின் என்கின்ற வேதிப் பொருள் அதிகம் இருப்பதினால் பின்னாளில் அதன் பாதிப்பினை அந்த நோயாளி வெகு விரைவில் உணர்வார். காரணம் அவருக்கு வயிற்று வலி ஏற்பட்டது எதன் காரணம் என்று தெரியாமலே அவர் பெரால்ஸ்கான் சாப்பிட்டிருப்பார். அந்தக்காரணம் பின்னர் ஆழமாக ஊடுருவி முற்றிய நிலைமையை உருவாக்கி முன்பு வந்த வயிற்றுவலியை விட அதிக அளவில் வயிற்றுவலி ஏற்பட்டு மருத்துவமனையை நோக்கி ஓடிவர வேண்டிருக்கும்.

சுய மருத்துவமாக மருந்துகளை விழுங்குபவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து விடுவது உண்மை. உதாரணத்திற்கு தொண்டை வலி ஏற்பட்டால் அம்பிசிலின் என்கிற மருந்தை சுய மருத்துவமாக அவர்கள் எடுத்துக் கொள்ளும்போது அப்போதைக்கு தொண்டை வலி போனாலும் பின்னர் தொண்டையில் அதிகளவில் தொந்தரவுடன் கூடிய பாதிப்பு ஏற்படுவதை அவரால் தடுக்க முடியாது.

சுய மருத்துவம் என்பது ஒரு நோய்க்கு தேவையான சிகிச்சையை பெறமுடியாமல் செய்துவிடுகிறது.

ஒரு நோய்க்கு தொடர்ந்து பெற வேண்டிய சிகிச்சையையும் தடுத்துவிடுகிறது.

உதாரணத்திற்கு தலைவலி என்று வைத்துக்கொள்வோம். அதற்கு ஏதோ ஒரு மாத்திரை சாப்பிட்டு அப்போதைக்கு அவர் தலைவலியைப் போக்கிக் கொள்வர் என்றாலும், அவருக்கு வந்திருக்கும் தலைவலிக்குக் காரணம் அவருக்கு இருக்கும் இரத்த அழுத்த பாதிப்பே என்பது அவருக்குத் தெரியாமல் போய் விடுகிறது.

இதன் காரணமாக இரத்த அழுத்தத்திற்கு போதுமான சிகிச்சையையும் அவர் பெறத் தவறிவிடுகிறார். சுய மருத்துவத்தின் பாதிப்பை இதைவிட அதிகமாக விளக்க முடியாது என்றே கருதுகிறேன்.

**டாக்டர்.சி.நடேசன்,MD.,**
**சென்னை-17.**

# இராமர் பாலம்! தேசிய சின்னம்?





"ஹலோ தலைவரே... தி.மு.க. தலைமையும் தொண்டர்களும் இப்படியொரு அதிர்ச்சியான கொடூர நிகழ்வை எதிர்பார்க்கலை."

"கே.என்.நேரு தம்பி ராமஜெயம் அநியாயமா கொலைசெய்யப் பட்டிருப்பதைத்தானே சொல்றே... கலைஞரோட அதிர்ச்சி அவ்ரோட அறிக்கையிலேயே தெரிஞ்சதே... அய்யோ... நேருவுக்கு நான் எப்படி ஆறுதல் கூறுவேன். எனக்கு நான் எப்படி ஆறுதல் தேடிக்கொள்வேன். கடத்திச்சென்று கொலைசெய்யப் படுகின்ற தம்பியா ராமஜெயம்? தன் அண்ணன் போட்டியிட்ட போதெல்லாம் தானே போட்டியிடுவதாக நினைத்து கழகப்பணியாற்றிய வராயிற்றேன்னு ரொம்ப உருக்கமா அறிக்கை கொடுத்திருந்தாரே..."

"தி.மு.க. முன்னணியினரும் தொண்டர்களும் இந்தப் படுகொலை பற்றி வருத்தத்தோடு பேசுறாங்க, கட்சி விடயமா அவங்ககிட்டே பேசிக்கிட்டிருந்தேன். 2 ஜி கேஸில் தன்னைச் சேர்த்தது தவறுன்னு சொல்லி, சுப்ரீம் கோர்டில் கனி மொழி தாக்கல்செய்த மனுதொடர்பா சி.பி.ஐ.க்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருப்பது தி.மு.க. சைடிற்கு நம்பிக் கையைக் கொடுத்திருக்கு. தி.மு.க. சார்பில் காலியாக இருக்கிற 2 மத்திய மந்திரிப்பதவியை நிரப்பிக்

## தமிழகப் பார்வை

குங்கன்னு பிரதமரோட தகவல டி.ஆர்.பாலுக்கிட்டே சொல்லியிருக்கிறார். குலாம்நபி ஆசாத். கனிமொழி மனு தாக்கல் செய்ததன் இந்தப்பின்னணியில் இந்த விவரம் இருக்கிறதா சொல்றங்க."

"அப்படின்னா கனிமொழி விரைவில் மாண்புமிகு ஆகிறாரா?"

"தன் மேலே போட்ட பழிகளைத் துடைத்துத்தான் குற்றமற்றவர்ங்கிறத நிரூபித்து, தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்த இந்த அமைச்சர் பதவி ஒரு வாய்ப்பாக

## தமிழக முதல்வர் வலியுறுத்தல்...



பண்ருட்டி ராமச்சந்திரன்



கே.பி. முனுசாமி

இருக்கும்னு கனிமொழி நினைக்கிறாராம். 2 ஜி வழக்கிலிருந்து சுப்ரீம் கோர்ட் விடுவிச்சிடிச்சின்னா பழி நீங்கிடும், குற்றமற்றவர்னு நிருபணமாயிவிடும். அதன்பிறகு தன்திறமைகளை அமைச்சர் பதவி மூலமா வெளிப்படுத்தலாம்னு நினைக்கிறார். டி.ஆர்.பாலு ஏற்கனவே மத்திய அமைச்சரா இருந்தவர் தி.மு.க.வுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிற இரண்டு அமைச்சர் பதவிகளில் ஒன்று கனிமொழிக்குப் போயிடிச்சின்னா, இன்னொன்று தனக்குக் கிடைக்கும்ங்கிற எதிர்பார்ப்பு டி.ஆர்.பாலு கிட்டே இருக்காம். குலாம்நபி ஆசாத் சொன்ன தகவலை தி.மு.க. தலைமையிடம் பாஸ் பண்ணிவிட்டார் பாலு."

"டெல்லியில் தமிழக அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து பரபரப்பு ஏற்படுத்திக் கிட்டிருக்குதுபோல... திருக்குறளை தேசிய நூலாக்கணும்ன்னு வலியுறுத்தி, மார்ச் 28 ஆம் திகதியன்னைக்கு டெல்லியில் தமிழறிஞர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துனாங்க. இதனை ஒருங்கிணைத்து நடத்தியவர் தமிழர் வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் பண்டிருட்டி வேல்முருகன். உண்ணாவிரதத்தை முடித்துவைத்தவர் திருமாவளவன். இந்த உண்ணாவிரதம் நடந்த அதே நாளில்தான், இராமர் பாலத்தை தேசிய சின்னமா அறிவிக்கனும்ன்னு பிரதமருக்கு கடிதம்எழுதி பரபரப்பை உண்டாக்கிட்டாரு ஜெயா..."



இராமர் அணை

"தலைவரே... இராமர் பாலம் விவகாரத்தாலதான் சேதுசமுத்திரத் திட்டம் கிடப்பிலே இருக்குதுங்கிறது எல்லோருக்கும் தெரியும். இது தொடர்பா முடிவுசெய்வதற்காக பச்சோரி கமிட்டியை நியமிச்சது மத்திய அரசு. சுப்ரீம் கோட்டில் கேஸ் இருக்குது. இராமர் பாலம் தொடர்பா மத்திய அரசோட நிலையை இரண்டு நாளில தெரிவிக்கணும்ன்னு செவ்வாய்க்கிழமையன்னைக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்ட நிலையில், அதை தேசிய சின்னமா அறிவிக்கச் சொல்லி புதன்கிழமையன்னைக்கு கடிதம் எழுதிட்டாரு ஜெயா...

"நாடாளுமன்றத்திலும் தி.மு.க. அதிமுக.எம்பிக்கள் இது தொடர்பா மோதியிருக்காங்களே...!"

"சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்றணும்கிறது, தி.மு.க.வோட நிலை அதை அவங்க கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினாங்க. ஜெயா. வலியுறுத்துவதுபோல இராமர் பாலத்தை தேசிய சின்னம்மா அறிவிக்கணும்னு அ.தி.மு.க எம்.பிக்கள் வலியுறுத்தினாங்க. இது சென்சிட்டிவ்வான ஓட்டுப்பிரச்சினைங்கிறதால முடிஞ்சளவு இழுத்தடிப்போம்னு மத்தியஅரசு நினைக்குது. அதனாலதான், இந்த வழக்கு வியாழக்கிழமையன்னைக்கு சுப்ரீம் கோர்ட்டில் மறுபடியும் விசாரனைக்கு வந்தப்ப, இராமர் பாலத்தை தேசிய சின்னம்மா அறிவிப்பது தொடர்பா ஆலோசித்து முடிவெடுக்க அவகாசம் வேணும்னு மத்திய அரசின் சார்பில் சொல்லப்பட்டது. கோர்ட்டுக்கும் இரண்டு வாரகால அவகாசம் கொடுத்திருக்கு. இப்போதைக்கு மத்திய அரசுக்கு ஒரு ரிலீஃப்."

"மாநில அரசு பக்கம் வாப்பா... சட்டமன்றத்தில் பட்ஜெட் கூட்டத் தொடர் பரபரன்னு போய்க் கிட்டிருக்கே...?"

"பட்ஜெட் தாக்கலாவதற்கு முன்னாடி தி.மு.க. சார்பில் ஸ்டாலின் ஒரு அறிக்கையைப் படித்துவிட்டு அவரும் மற்ற தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் வெளிநடப்பு செஞ்சாங்க. அடுத்த நாளிலிருந்து, அவங்க எது பேச எழுந்தாலும் பிரச்சினையாகி வெளியேற்றப்படுவது தொடர்ந்துக்கிட்டிருக்கு. இருந்தாலும், இந்தக் கூட்டத்தொடரில் ஆளுங்கட்சியின் டார்கெட் தே.மு.தி.க.தான்.

"பொதுவா, பிரதான எதிர்க்கட்சி தானே ஆளுங்கட்சியை டாகெர்ட் பண்ணும்?"

"இங்கே நிலைமை வேற... புதன்கிழமையன்னைக்கு அ.தி.மு.க. வின் கு.ப.கிருஸ்ணன், சங்கரன்கோவில் தேர்தலில் தே.மு.தி.க. டெபோசிட் இழந்ததைக் குறிப்பிட்டு, கட்சியைக் கலைச்சிடலாமா, வேணாமான்னு யோசனை பண்ணிக்கிட்டுருக்காங்கன்னு விஜயகாந்தை அட்டாக் பண்ணினார். இதற்கு முன்நடந்த கூட்டத்தொடர்களில் ஆளுங்கட்சியை எதிர்க்காத பண்ருட்டியார், இந்த முறை எழுந்து சபையில் இல்லாதவரைப்பற்றிப்பேசலாமான்னு கேட்க, வாக்குவாதம் முற்றி, தே.மு.தி.க.வினர் வெளிநடப்பு செய்தாங்க. ஜெயாவோ, கு.ப.கிருஸ்ணன் யார்பெயரையும் குறிப்பிடாமல்தான் சொன்னார். தே.மு.தி.க.வினர் எங்கப்பன் குதிருக்குள் இல்லைங்கிற மாதிரி நடந்துக் கிட்டாங்கன்னு கொமெண்ட் அடித்தார்."

"வியாழக்கிழமையன்னைக்கு அ.தி.மு.க., தே.மு.தி.க. இடையே காரசார விவாதம் நடந்திருக்கே..."

"எம்.ஜி.ஆரின் வழித்தோன்றல் விஜயகாந்துன்னும், கட்சியின் தொண்டர்களை மதிப்பவர்ன்னும் மாஃபா.பாண்டியராஜன் போன்ற தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் பேச, கட்சித் தொண்டர்களை அடிப்பதை ரி.வி.யில் காட்டினாங்களே... அதுதான் தொண்டர்களுக்கு தரும் மரியாதையான்னு அ.தி.மு.க. தரப்பில் அட்டாக்பண்ண, விவகாரம் சூடாயிடுச்சி.

எம்.ஜி.ஆர் பெயரை தே.மு.க. எப்படி பயன்படுத்தலாம்னு அமைச்சர் கே.பி. முனுசாமி கேட்டாரு. எம்.ஜி.ஆர். எல்லோருக்கும் பொதுவானவர்ன்னு பண்டிருட்டியார் சொன்னாரு. கே.பி.முனுசாமியோ, எம்.ஜி.ஆர். எங்க கட்சியின் நிறுவுனர். எங்களுக்குரியவர்ன்னு சொல்ல விவாதம் அனல்பறந்து, வெளிநடப்பு வரை போனது.

மத்திய அரசு கொண்டுவரும் தேசிய தீவிரவாத தடுப்புமையத்திற்கு ஜெயா. எதிர்ப்புத் தெரிவிக்க, பல மாநில முதல்வர்களும் எதிர்ப்பு தெரிவிச்சாங்க. மற்ற மாநில முதல்வர்களிடம் ப.சிதம்பரம் பேசி, திருத்தங்கள் செஞ்சிக்லாம்ன்னு சமாதானப்படுத்துனப்ப, உங்க மாநிலத்து முதல்வரிடம் முதலில் பேசுங்கன்னு சொன்னாங்களாம்.

## நக்கீரன்

மத்திய உளவுத்துறை மூலமா டி.ஜி.பி.க்கு ப.சிதம்பரம் தகவல் பாஸ்பண்ண, டி.ஜி.பி.யும் ஜெயா.வின் அனுமதியோடு ப.சிதம்பரத்தை சந்திச்சிருக்கார். திருத்தங்களோடு தீவிரவாத தடுப்புமையத்தை அமைக்க ஜெயாவும் ஓ.கே சொல்லிட்டாராம்.

# ராமர் பாலத்துக்கு பாதிப்பு இல்லாமல் சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றலாம்

## சுப்பிரமணியன் சுவாமி கூறுகிறார்



(நாகர்கோவில்)

ராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டும் என ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன்சுவாமி தெரிவித்துள்ளார்.

நாகர் கோவிலில் இந்து வழக்குரைஞர்கள் பேரவை சார்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியதாவது,

ராமர் பாலம் இந்துக்களின் புனித சின்னமாகும். இதை தேசிய சின்னமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். ராமர் பாலத்துக்கு பாதிப்பு இல்லாமல் சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்றலாம்.


இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமின்றி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வேண்டும்.

அமெரிக்கா கொண்டுவந்த இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்து உள்ளது. அதேநேரம் இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதிக்கு பிரதமர் கடிதம் எழுதியுள்ளது மோசமான செயலாகும்.

கூடங்குளம் அணுஉலைக்கு எதிராக போராட்டக்குழுவினருக்கு வெளிநாட்டில் இருந்துபணம் வருவதாக நான் ஏற்கனவே கூறி இருந்தேன். இப்போது அதை பிரதமர் உறுதி செய்துள்ளார் என்றார். (அ-2)

# பாக். ஜனாதிபதி இந்தியா வருகை

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் ஜனாதிபதி அலி சர்தாரி இந்தியாவிற்கு ஒருநாள் பயணமாக எதிர்வரும் 8 ஆம் திகதி விஜயம் மேற்கொள்ளவிருப்பதாகவும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் சந்தித்து பேசுவார் எனவும் தெரிகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடந்த எஸ்.சி.ஓ மாநாட்டின்போது சர்தாரியை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துப்பேசியுள்ளார்.

ராஜஸ்தான் அஜ்மீர் நகரில் உள்ள க்வாஜா மொய்னுதீன் சிஷ்தி தர்காவில் வழிபாடு முடித்த பின்னர் அன்றைய தினமே சர்தாரி இஸ்லாமாபாத் திரும்புவார் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு உறவு மற்றும் வர்த்தக தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கத்தில் கடந்த சில மாதங்களாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் எதிரொலியாகத்தான் சர்தாரி இந்தியாவுக்கு வருகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# ஜப்பானில் பயங்கர நிலநடுக்கம்; மக்கள் அலறியடித்து ஓட்டம்

ஜப்பானின் மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் நரஹா,தொமி யோகோ நகரங்களில் உள்ள வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கி அதிர்ந்தன. அப்போது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அலறியடித்தபடி எழுந்து வீதியை நோக்கி ஓடினர். இந்நிலநடுக்கம் 5.9 ரிக்டர் அளவில் பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

இந்நிலநடுக்கம் காரணமாக வழக்கத்தைவிட அதிக உயரத்தில் கடல் அலைகள் எழும்பின. ஆனால் சுனாமி எச்சரிக்கை எதையும் அரசு அறிவிக்கவில்லை. இச்சம்பவத்தினால் ஏற்கனவே பாதிப்புக்குள்ளான புகுஷிமா மற்றும் நாய்னி அணு உலைகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை என்றும் ஜப்பான் அரசு அறிவித்துள்ளது. (அ-2)



துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரியின் 75 ஆவது பிறந்தநாளையொட்டி அவருக்கு நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன் சிங் மலர்ச்செண்டு கொடுத்து வாழ்த்து தெரிவித்ததைப் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதித்தேர்தல் விரைவில்... ஆளும் கூட்டணி வேட்பாளர் யார்?

(புதுடில்லி)

அடுத்த சில மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ள நிலையில் இது தொடர்பான நடவடிக்கைகள்,பேச்சுவார்த்தைகள் தற்போதே சூடு பிடித்துள்ளன.

வாக்குகளை வைத்து ஜனாதிபதி தேர்தலில் தங்கள் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வது என்பது இரண்டு கூட்டணிக்குமே சிரமமான விடயம்.

ஜனாதிபதி தேர்தலில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என காங்கிரஸ் மேலிடம் இன்னும் முடிவு செய்யவில்லை.

கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக்குப் பின் இது குறித்து அறிவிக்கப்படலாம். காங்கிரஸ் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துகின்றனர் என்பதை பார்த்து அதன்பின் தங்களின் முடிவை அறிவிக்கலாம் என பா.ஜ.க கருதுகின்றது.

ஜனாதிப்தி தேர்தலில் அ.தி.மு.க. முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு காங்கிரஸ் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன.

பா.ஜ.கவும், அ.தி.மு.க. ஆதரவை பெறுவதற்கான முயற்சிகளில்தீவிரமாக இறங்கியுள்ளது. இது குறித்து ஆலோசனை நடத்துவதற்காக பா.ஐ.க மூத்த தலைவரும் ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவருமாக அருன் ஜெட்லி விரைவில் சென்னை வரவுள்ளார்.

தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதாவை சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் பா.ஐ.க சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளருக்கு ஆதரவு அளிக்கும் படி அவர் கோரிக்கை விடுப்பார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# பிரித்தானியாவில் இணையம் மற்றும் மின்னஞ்சல் பாவனைகள் கண்காணிப்பு

## சிவில் உரிமைகள் அமைப்பு எதிர்ப்பு

(லண்டன்)

பிரித்தானியாவில் இணைய மற்றும் மின்னஞ்சல் பாவனை கண்காணிக்கப்படவுள்ளது. தொலைபேசி அழைப்புக்கள், இணையதளப் பயன்பாடு, குறுந்தகவல்கள் மற்றும் மின்னஞ்சல்கள் போன்றன தொடர்பில் பிரித்தானிய அரசாங்கம் கண்காணிக்கவுள்ளது.

புலனாய்வு நிறுவனங்களுக்கு இணைய நிறுவனங்கள் தகவல்களை வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பிரித்தானிய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் பிரித்தானிய மஹாராணியினால் ஆற்றப்படவுள்ள உரையில் இந்தச் சட்டம் பற்றி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

உரிய அனுமதியின்றி மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புக்களைப் பார்வையிடவோ அல்லது கேட்கவோ முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் யார்யார் தொடர்பு கொள்கிறார்கள், எந்தத் தரப்பு தொடர்பாடலில் ஈடுபடுகின்றது என்பதனை புலனாய்வு நிறுவனங்கள் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

எனினும் சிவில் உரிமைகள் தொடர்பிலான அமைப்புக்கள் இதனைக் கடுமையாக எதிர்த்துள்ளன. (அ-2)

## ராஜ்யசபா தேர்தல்

# வேட்பாளர்களுக்கு பணம் கொடுக்க முயற்சி; தேர்தல் இரத்தானது

ஜார்க்கண்டில் ராஜ்யசபா தேர்தலில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் எம்.எல்.ஏ. க்களுக்கு பணம் கொடுக்க முயன்றது தெரிய வந்ததால் தேர்தலை இரத்து செய்து தேர்தல் கமிஷன் உத்தரவிட்டது. இதற்கு பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்டில் இரண்டு ராஜ்யசபா எம்.பி.க்களை தேர்வு செய்ய சமீபத்தில் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட்ட அகர்வால் என்பவர் எம்.எல்.ஏ.க்களுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக புகார் எழுந்தது. அகர்வாலின் தம்பி காரில் கொண்டு வரப்பட்ட 2.15 கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக விசாரணை நடத்திய தேர்தல் கமிஷன் ராஜ்யசபா தேர்தலை இரத்து செய்தது.

தேர்தல் கமிஷனின் இந்தச் செயல் ஒரு மைல்கல் என பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானி பாராட்டியுள்ளார். அவர் தன் இணையத்தளத்தில் தேர்தல் கமிஷனின் முடிவு சிறப்பானது. பாராட்டுக்குரியது. நீண்ட காலமாக பணம், அரசியல் ஆதரவுடன் நடத்தப்பட்ட தேர்தலை தடுக்கும் வகையில் தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சியின் போது 2003 ஆம் ஆண்டில் தேர்தல் சீர்திருத்த சட்டம் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தற்போது ஜார்க்கண்ட் மாநிலத்தில் மத்திய தலைமை தேர்தல் கமிஷனர் எஸ். வை. குரோஷி எடுத்துள்ள நடவடிக்கை அவருக்கு சிறப்பு பெயரையும் புகழையும் பெற்றுத்தந்துள்ளது என மேலும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# புதுடில்லி மாநகராட்சி தேர்தலில் 2,500 பேர் போட்டி

புதுடில்லி மாநகராட்சிக்கான தேர்தல் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெற உள்ளது.இதற்கான வேட்பு மனுத்தாக்கல் கடந்த சனிக்கிழமை முடிவடைந்தது.

இதனைத்தொடர்ந்து மொத்தமுள்ள 272 இடங்களை கொண்ட மாநகராட்சி தேர்தலில் சுமார் 2 ஆயிரத்து 500 பேர் களத்தில் உள்ளனர்.

இத் தேர்தலில் பா.ஜ.க,காங்கிரஸ் சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ் கட்சி, தேசியவாத காங்கிரஸ் போன்ற கட்சிகள் போட்டியிடுகின்றன.

இவர்களுடன் சுயேட்சைகளும் களத்தில் உள்ளனர்.மாநகராட்சி தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதில் காங்கிரஸ் கட்சியின் 280 வேட்பு மனுக்களையும் சுயேட்சைகளின் சுமார் 168 வேட்பு மனுக்களையும் மாநில தேர்தல் ஆணையம் நிராகரித்து விட்டது.

மேலும் காங்கிரஸ் கட்சி நான்கு தொகுதிகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை. அதுமட்டுமல்லாது அப்பகுதி சுயேட்சைகளுக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளான முகுந்த்பூர், பிரதாப்விகார். கார் ஜாகிர் நகர் மற்றும் ஜெய்த்பூர் (மேற்கு) தொகுதிகளில் பலத்த போட்டி நிலவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (அ-2)

# வாகன உரிமையாளராகும் கனவில்

# மண்ணை அள்ளிப்போட்டது வரி அதிகரிப்பு

இலங்கையைப் பொறுத்தமட்டில் மிகவும் ஆடம்பரமான சொத்து என்கின்ற நிலையிலிருந்து வாகனங்கள் பொதுமக்களின் அன்றாடத் தேவைக்குரிய ஒன்றாக மாற்றமடைந்துள்ளன.

கடந்த ஒரு தசாப்த காலத்திற்குள் தோற்றம்பெற்ற நிதிக்குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு சேவை வழங்கும் நிறுவனங்களும் வாகன கடன் வழங்கும் வங்கிகளின் சேவைகளும் பலரது வாகனக் கனவை நினைவாக்கியது.

வரிச் சலுகையுடன் வங்கிக் கடன் வசதி அல்லது குத்தகை வசதி என்பவற்றைப் பெற்று சாதாரணதர மக்கள் பலரும் வாகனம் ஒன்றுக்கு சொந்தக்காரர்கள் ஆகினர்.

எரிபொருள் விலை அதிகரிப்பை பாவனையாளர்கள் வெறுத்தாலும் அது வாகன இறக்குமதியை எதிர்பார்த்த அளவு குறைக்கவில்லை என்பதே புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவரும் விடயமாகும்.

அண்மையில்ஏற்பட்டஎரிபொருள் அதிகரிப்பிலும் வாகன உரிமையாளர்கள்எரிபொருள்பாவனையைக் கட்டுப்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்தியதுடன் ஹைப்ரைட் வாகனங்களில் ஈடுபாடு காட்டியதையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான ஒரு நிலையிலேயே தற்போது வாகன இறக்குமதி தீர்வைகள் அதிகரிப்புக்கு உள்ளாகியுள்ளன.

மதுபானம், சிகரெட் அவற்றின் விலை அதிகரிப்பு குறித்து கவனம்




செலுத்தாவிடினும் வாகனங்கள் பொருளாதார ரீதியில் ஒருவரது அந்தஸ்தாக (கௌரவப் பொருள்) கொள்ளப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதால் அமெரிக்க டொலரினால் கணிப்பிடப்பட்டு கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு பொருளின் விலையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதிகரித்துள்ளது.

இது வாகனங்களின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே புதிய வரி அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதி அமைச்சர் சுங்கத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பிய சுற்றுநிருபத்தில் சுங்கத்தீர்வை மற்றும் உற்பத்தி வரியென இரு பிரிவுகளின் கீழ் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள், கார்கள், சிகரெட், மதுபானம் போன்றவற்றின் வரிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி 1000 சிசிக்கு குறைவான இயந்திர வலுவுடைய பெற்றோல் கார்களின் வரி சுமார் 80 வீதத்தாலும், 1000 - 1600 சிசிக்கு இடைப்பட்ட கார்களின் வரி 71 வீதத்தாலும், 1600-2000 சிசி வரையான இயந்திர வலுவுடைய கார்களின் வரி 95 வீதத்தினாலும் 3000 சிசிக்கு அதிகமான கார்களின் வரி 85 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டது.

டிசல் கார்களின் வரி 59 தொடக்கம் 70 சதவீதம் வரையும், பெற்றோல் வான்களின் வரி 13 தொடக்கம் 28 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை விசேடமாக வடிவமைக்கப்பட்ட பெற்றோல் வாகனங்களின் வரி 110 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

முச்சக்கர வண்டிகள் மீதான வரி 23 தொடக்கம் 49 சதவீதத்தினாலும் மோட்டார் சைக்கிள்கள் மீதான வரி 39 வீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

இதன்படி பார்த்தால் மாருதிக் கார் ஒன்றின் விலை இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான தொகையினால் அதிகரிக்கலாம் என வாகன விற்பனை நிறுவன பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது.

அவ்வாறே மோட்டார் சைக்கிள் ஒன்றின் விலை 50 ஆயிரம் ரூபாய் வரையிலும், முச்சக்கர வண்டி ஒன்றின் விலை ஒரு இலட்சம் ரூபாய் வரையிலும் அதிகரிக்க இடமுள்ளதாக வாகன விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 126.13 | 129.57 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 200.90 | 207.75 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 167.45 | 173.87 |
| சுவிஸ் பிராங் | 138.62 | 144.65 |
| கனேடிய டொலர் | 125.81 | 130.99 |
| அவுஸ்திரேலிய டொலர் | 130.26 | 135.94 |
| சிங்கப்பூர் டொலர் | 99.76 | 103.74 |
| ஜப்பான் யென் | 1.52 | 1.58 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.49 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.90 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




## மக்கள் வங்கியின் 2011-ம் நிதியாண்டு
## வரிக்கு முந்திய இலாபம் ரூ.21 பில்லியன்







மக்கள் வங்கிக் குழுமம் 2011-ம் நிதியாண்டில் 21 பில்லியன் ரூபாய் வரிக்கு முந்திய இலாபத்தினை பதிவு செய்துள்ளது.

மக்கள் வங்கி 2011-ம் ஆண்டின் 15.3 பில்லியன் ரூபாயை இலாபமீட்டிய வங்கிகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

அத்துடன் மக்கள் வங்கியின் வைப்புகள் 540 மில்லியன் ரூபாயினைத் தாண்டி 17 சதவீத அதிகரிப்பை பெற்றுள்ளது.

மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 478 பில்லியன் ரூபாயை அடைந்து, 29 சதவீதம் அதிகரித்துள்ளது. மூலதனமும், ஒதுக்கங்களும் 26.5 பில்லியனாகவும் அதிகரித்துள்ளது.

இச்சாதனையை ஏற்படுத்த மக்கள் வங்கியில் ஆயிரக் கணக்கான ஊழியர்களும் அவர்களுக்கு வழிகாட்டிகளாக மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவவும், வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளருமான என்.வசந்தகுமாரும் இச் சாதனைகளுக்கு பின்னணியில் இருந்து உந்துசக்தியாக செயற்பட்டிருக்கிறார்கள்.

1961ஆம் ஆண்டு மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. அவ் ஆண்டில் 8 கிளைகளும் கொழும்பில் வெளிநாட்டுக் கிளையொன்றுமாக ஆரம்பமான மக்கள் வங்கியில் அப்போது எல்லாமாக 169 உத்தியோகத்தர்களே இருந்தார்கள். தற்போது, மக்கள் வங்கி 339 கிளைகளுடன் விரிவடைந்து மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வருகிறது.

## ரூ.8 ஆயிரம் கோடி அதிர்ஷ்டம்

அமெரிக்காவின் மிகப் பெரிய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களை தேடும் நடவடிக்கை நடைபெறுகிறது.

64 கோடி டொலர்(சுமார் 8000 ஆயிரம் கோடி ரூபாய்) பெறுமதியான இந்த அதிர்ஷ்டலாபச் சீட்டை 3 டிக்கெட்டுகள் பகிர்ந்து கொள்கின்றன.

மேரிலான்ட், கன்சாஸ் மற்றும் இலினொய்ஸ் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மூவருக்கே இந்த அதிர்டஷ்டம் கிடைத்திருக்கிறது.

அதிர்ஷ்டலாபச் சீட்டுகளுக்காக அமெரிக்கர்கள் 1.5 பில்லியன் டொலர்களை செலவிடுகிறார்கள்.

கடந்த ஜனவரி மாதம் முதல் எவருக்கும் ஜாக்பொட் கிடைக்காத காரணத்தால் பரிசுத் தொகை இவ்வளவு பெரிய அளவை எட்டியிருக்கிறது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5422.33 | 5420.20 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4847.86 | 4891.58 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,293.47 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ)* சிலோன் பிறின்டேர்ஸ்(150.00), ஒபிஸ் ஈகுப்மன்ட்(180.60), றோயல் பாம்ஸ்(55.00), ஹபுகஸ்ரன்(40.50), மிரமர்(150.00).

*சரிவடைந்த பங்குகள்(ரூ)* மேர்ஷன்ட் சிப்பிங்(171.00), ஈகுவிட்டி(26.50), பிசி பார்மா(16.60), அக்ஸ்ரார்யேர்டிலைசர்(10.20), சிரஸ் லிசர்(W)(5.20).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## செலான் வங்கியின் தலைமைப் பதவியில் இருந்து
## ஈஸ்ட்மன் நாரங்கொட விலகிக் கொண்டார்



புகழ்பெற்ற வங்கியியலாளரான ஈஸ்ட்மன் நாரங்கொட செலான் வங்கியின் தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொண்டார். தனது 3 வருட சேவைக் காலத்தின் பின்னர் அவர் இந்த முடிபை எடுத்துள்ளார். அத்துடன் கடந்த வாரம் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அவர், தனிப்பட்ட காரணங்களினால்தான் இந்த முடிபை எடுத்ததாக அறிவித்தார்.

2008ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதி செலான் வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்ட ஈஸ்ட்மன் நாரங்கொட, செலான் வங்கியின் திருப்பத்திற்கு முக்கிய பங்காற்றியதுடன், குழுப்பமான சூழல் நிலவிய காலப் பகுதியில் வங்கியானது உறுதி மிக்கதாகவும் போட்டிகரமான ஒன்றாகவும் தோற்றம் பெறுவதற்கான வழியாக அமையும் அடித்தளம் ஒன்றைப் இட்ட பெருமை இவரையே சாரும்.

வங்கித் துறையில் 35 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட இவர்,

தேசிய சேமிப்பு வங்கியிலும் பொது முகாமையாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் தலைமை தாங்கி வழி நடத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.



பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பில், முதலீட்டாளர்கள் சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்கான ஆற்றலை வழங்கும் நோக்குடையதும் அறிவுசார்ந்த முதலீட்டு சமூகத்தை உருவாக்கும் நோக்குடையதுமான செயலமர்வு கடந்த 17-ம் திகதி முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் (RDHS Office-யாழ்.போதனா வைத்தியசாலை எதிர்) நடைபெற்று வருகிறது.

அவ்வகையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற செயலமர்வில் 'பங்குத் தெரிவுகள் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.சுப்பிரமணியம் கருத்துரை வழங்கினார்.

இதில் கலந்துகொண்டவர்களையும், கருத்துரை வழங்கும் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.சுப்பிரமணியத்தையும் படங்களில் காணலாம். அடுத்த சனிக்கிழமை நடைபெறவுள்ள செயலமர்வில் பங்குபற்ற விரும்புவோர் முன் பதிவுகளை 021 222 1455 தொலைபேசி மூலமாகவோ, அல்லது 398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையிலோ முற்கூட்டியே பதிவுகளை செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தாக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளரை விடுதலை செய்யுங்கள்- புகலிட செ.அமைப்பு

அவுஸ்திரேலிய தடுப்பு முகாமில் தாக்குதலுக்கு இலக்கான புகலிடக் கோரிக்கையாளரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய வில்லாவூட் தடுப்பு முகாம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் நடத்திய தாக்குதலில் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் காயமடைந்திருந்தார்.

குறித்தநபர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

வில்லாவூட் முகாமில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் அவுஸ்திரேலிய குடியவரவு, குடியகல்வு அமைச்சு முழுமையாக விசாரணை நட த்தவேண்டுமென புகலிட செயற்பாட்டுக் கூட்டமைப்பு என்ற உரிமை அமைப்பின் உறுப்பினர் இயன்ரின்டோல் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான புகலிடக் கோரிக்கையாளரை விடுதலை செய்வதன் மூலம் அவரைச் சிறப்பாக பராமரிக்கமுடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த தமிழ் புகலிடக்கோரிக்கையாளரை 5 தொடக்கம் 6 வரையான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்கியுள்ளனர்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்கள் மூடப்பட வேண்டும் என்பதனையே இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி நிற்பதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மிதிபலகையில் பயணிப்பு; சாரதிக்கு அபராதம் விதிப்பு

மிதிபலகையில் பயணிகளை ஏற்றிச் சென்ற மினிபஸ் உரிமையாளருக்கு யாழ். நீதிமன்றம் 2 ஆயிரம் ரூபா பணம் அபராதமாக விதித்துள்ளது.

யாழ். நகர்ப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸாரே நேற்றுக் காலை குறித்த மினிபஸ் சாரதி மீது வாகன அனுமதிப்பத்திரம் இன்றியும் அதிக பயணிகளை மிதிபலகையில் ஏற்றிச் சென்றார் எனக் குற்றஞ்சாட்டி யாழ். நீதிமன் றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா. கணேசராசா குறித்த சாரதிக்கு 2 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்தார். (அ-2-4)

# வவுனியா இ.போ.ச.சாலையால் இரண்டு பஸ்கள் சேவையில்

(வவுனியா)

பயணிகளின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா கிளையினால் இரண்டு வழித்தடத்திற்கான போக்குவரத்து சேவைகள் கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக செயற்படாதிருந்த நெடும் வழித்தடமான நாவலப்பிட்டி மற்றும் தலைமன்னாருக்கான போக்குவரத்துச்சேவைகளே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டிக்கான சேவை வவுனியாவில் இருந்து தினமும் காலை 7.30 மணிக்கும் தலைமன்னாருக்கான சேவை காலை 5.30 மணிக்கும் ஆரம்பிக்கப்படும் என்பதுடன் தலைமன்னாருக்குச் செல்லும் பேருந்து அங்கிருந்து 9.30 மணிக்கு நேரடியாக திருகோணமலைக்கு செல்லுமெனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை வவுனியாவிற்கான உள்ளூர் சேவைகளையும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் போதியளவு பேருந்துகள் கிடைக்கப்பெற்றதும் அந்த போக்குவரத்து சேவைகளும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# க.பொ.த. சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள்

**யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை**

பி.ஜோதிகா (8ஏசி), க.லாவண்ணியா (4ஏ4பிசி), இ.தமிழ்நிலா (4ஏ2பி2சிஎஸ்)

**யா/அத்தியார் இந்துக் கல்லூரி**

க.தினேஸ் (7ஏபிஎஸ்), ஸ்ரீ.கிருத்திகன் (6ஏ2பிஎஸ்), இ.தமிழ்குமரன் (6ஏபி2சி), சி.கௌசலா (3ஏ5பிசி), பு.ரஞ்சிகா (3ஏ2பிசி3எஸ்), ஆ.சுதர்சினி (3ஏ4பிசிஎஸ்), இ.வாசுகி (3ஏபி4சிஎஸ்), ப.டெனிஸ்ரன் (2ஏ3பி3சிஎஸ்), ஜெ.நிதர்சன் (2ஏ2பி4சிஎஸ்), நி.சதுர்ஷன் (2ஏ2பி4சிஎஸ்), சி.பவித்திரா (2ஏ3சி4எஸ்), ப.கனிஸ்ரா (2ஏ2பி3சி2எஸ்), க.குகப்பிரணவி(2ஏபி3சி3எஸ்)

**யா/செங்குந்தா இந்துக்கல்லூரி**

ஜெ.சிந்துஜா (3ஏ3பி3சி), சி.சிராணிசுகந்திகா (3ஏ4பிசிஎஸ்), உ.அசோதன் (ஏபி3சி4எஸ்)

# கப்பம் கோருதலுக்கும் எனக்கும் தொடர்பில்லை

## கருணா விளக்கம்

கிழக்கு மாகாணத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் அரசியல்வாதி ஒருவர் கப்பம் கோரி வருவதாக வெளியாகிய செய்தி தொடர்பாக பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விளக்கமளித்துள்ளார். அவ்வாறான சம்பவத்துக்கும் தனக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை என அவர் கூறியுள்ளார். இந்த செய்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் நிறுவர் நிதியத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தில் பணியாற்றும் அஸத்தூர் ரஹ்மானிடம் தகவல்கள் ஏதும் இருக்கின்றனவா என வினவினேன். எனினும் செய்தி தொடர்பாக எந்தத் தகவலையும் தான் அறியவில்லை என அவர் தெரிவித்தார்.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்தி பணிகளில் சம்பந்தப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் வெள்ளிக்கிழமைகளில் அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றங்கள் குறித்த கூட்டங்களைத்தான் நடத்துவதாகவும் அந்தக்கூட்டத்தில் இவ்வாறான சம்பவங்கள் குறித்துத்தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். (அ-2)

# தடைசெய்யப்பட்ட தங்கூசி வலையினை பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை

## கடற்றொழில் நீரியல் வளப்பணிப்பாளர்

தடை செய்யப்பட்ட தங்கூசி வலையினை பயன்படுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளப்பணிப்பாளர் கசேணமூர்த்தி தெரிவித்தார்.

மீன் வளங்களுக்கு பாதிப்பேற்படும் வகையில் பயன்படுத்தப்படுகின்ற இத்தங்கூசி வலைப்பாவனையை கட்டுப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இத்தடை செய்யப்பட்ட வலையினால் பாதிப்படைகின்ற மீனவர்கள் எம்மிடம் முறைப்பாடுகளை தினமும் பதிவு செய்து வருகின்றனர். இத்தங்கூசி வலைப்பாவனை அதிகமாக மாதகல், சாவற்கட்டு மீனவர்களே பயன்படுத்தப்பட்டு வருவதாக எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இவ் வலைத்தடை பற்றி ஏற்கனவே அறிவுறுத்தல்கள் பல வழங்கப்பட்ட போதிலும் அதனை அவர்கள் கைவிடுவதாகத் தெரியவில்லை.

மேலும் இவ் வலைகளினை பயன்படுத்துபவர்களே அதிகமாக றோலர் படகுகளினைப் பயன்படுத்துகின்றனர். இவ்றோலர் படகுகள் அதிகமாக குருநகர் கடற்பகுதிகளில் காணப்படுகின்றன. இதனால் சிறு தொழிலாளர்களின் வலைகள் அறுக்கப்பட்டு நாசமாக்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. இச்செயற்பாட்டினை கட்டுப்படுத்த முடியாமலும் உள்ளது. றோலர் படகுகள் கரைக்கு அண்மையாக வந்து செல்வதனால் பெறுமதிமிக்க வலைகளும் சேதமாக்கப்படுகின்றன. இவை தொடர்பிலான முறைப்பாடுகளும் சிறுகைத் தொழிலாளர்களினால் பதிவு செய்யப்படுகின்றன.

யாழ். குடாக்கடல் குறைந்தளவு கடல் வளங்களினையே கொண்டிருப்பதனால் இவ்றோலர் படகினால் முழுமையாக கடல் வளத்தினைப் பயன்படுத்த முடியாமல் உள்ளது. அண்மையில் கூட பயன்படமுடியாத 18 இலட்சம் ரூபாய் பெறுமதி மிக்க சிறிய கடலட்டைகள் றோலர் படகுகளும் கைப்பற்றப்பட்டன. தற்போதுள்ள கடல் வளத்தினையாவது மிகக் கவனமாக பாதுகாக்க முற்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-4)


உண்மை நிலை

வளர்ச்சி

இலங்கையின் வரலாற்றில் 8% அல்லது அதற்குக் கூடுதலான பொருளாதார வளர்ச்சி அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகளில் பதிவு செய்யப்படுவது முன்னொருபோதும் இடம்பெறவில்லை. 1968இலும் 1978இலும் நாங்கள் 8% இற்கும் கூடுதலான வளர்ச்சியைக் கொண்டிருந்த போதும் இது 2010 மற்றும் 2011இனைப் போன்று தொடர்ந்து இரு ஆண்டுகளில் ஒரு போதும் நிகழவில்லை.




உயர்ந்த அரச மற்றும் தனியார் துறை முதலீடுகள் சரியான கொள்கைத் தீர்மானங்கள், உயர்ந்த உள்நாட்டுக் கேள்வி, சமாதானம் நிரம்பிய சூழல் மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு நாடு தாக்குப்பிடிக்கக் கூடியதாயிருக்கும் வல்லமை என்பன முன்னொருபோதுமில்லாத இவ்வாச்சரியத்திற்கு பங்களித்த காரணிகளாக இருந்தன.

CERTIFIED
CENTRAL BANK OF SRI LANKA
இலங்கை மத்திய வங்கி

(சி-6236)

# விமான நிலையத்தில் இந்திய பயணிகள் மீது நடத்தப்படும் கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டும்



## பிரபா கணேசன் தெரிவிப்பு

அண்மைக்காலமாக இந்தியாவிலிருந்து வரும் சிறு வர்த்தகர்கள் உல்லாச பிரயாணிகள் மீது மட்டுமே குறிவைத்து இலங்கை சுங்க திணைக்களத்தினரால் நடத்தப்படும் கெடுபிடிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபாகணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது,

இலங்கை சுங்க திணைக்களத்தினர் குறிப்பாக இந்தியாவிலிருந்து வரும் பிரயாணிகளிடம் கெடுபிடியாக நடந்து கொள்கின்றனர். ஒரு சில பொருட்களையும் கூட கொண்டு வருவதற்கு அனுமதிப்பதில்லை. சில தமிழ் நாட்டை சேர்ந்த உல்லாச பிரயாணிகள் தமது உறவினர்களுக்கும்நண்பர்களுக்கும் எடுத்து வரும் பரிசு பொருட்களை கூட சுங்க திணைக்களத்தினர் தடுத்து நிறுத்துகின்றனர்.

இலங்கைக்குள் விமான நிலையம் மூலம் அதிகமாக கொண்டுவரும் பொருட்களுக்கு சுங்க தீர்வை அறவிடப்பட்டு பொருட்கள் கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படுகிறது. ஆனால் கடந்த ஒருவார காலமாக சுங்கத் தீர்வை அறவிடப்படாமல் பொருட்களை சுங்கத்தினர் பறிமுதல் செய்வதாக என்னிடம் பலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக சுங்கத் திணைக்களத்தினர் ஆர். டீ.எப். துறையை சேர்ந்த விமான நிலையத்திற்கு பொறுப்பான உதவி அத்தியட்சகர் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

சுங்கத் தீர்வுக்கு உள்ளடக்கப்பட்ட பொருட்களுக்கு வரி செலுத்தப்பட்டால் அவற்றை எடுத்து செல்ல முடியும் எனவும் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இதேசமயம் கொண்டு வரும் பொருட்களை அவை வரி விதிப்புக்கு உள்வாங்க கூடிய பொருட்களாக இருந்தால் அவற்றை பறிமுதல் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார். இது சம்பந்தமாக காலந்தாழ்த்தாமல் உடனடி தீர்வு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு அவரிடம் தெரிவித்தேன்.

இப்படியாக தமிழ்நாட்டிலிருந்து வரும் பிரயாணிகளிடம் சுங்கத்தினர் நடந்து கொள்வதை பார்க்கும் பொழுது ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தமை தான் காரணம் என்று நினைக்க தோன்றுகிறதென இந்தியாவில் இருந்து வரும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இப்படியான சந்தேகம் தமிழ் மக்களுக்கு வராதவகையில் அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தனிப்பட்ட சில அதிகாரிகளினால் இப்படியான நடவடிக்கைகளினால் அரசாங்கத்தின் மேல் தமிழ் மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் அரசாங்கம் அக்கறையாக இருக்க வேண்டும் என்றார். (அ-2).

# இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கட்டட வேலையின் போது தவறு தலாக விழுந்த இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

என்.சிவனேஸ்வரன் (வயது 21) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஹற்றன் நஷனல் வங்கியில் நடைபெற்ற கட்டட வேலையின் போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ந-1)

# பொலிஸார்- பயணிகள் பதுளையில் கைகலப்பு

(கொழும்பு)

பதுளை மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் பொலிஸாருக்கும் பயணிகளுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் இரண்டு பொலிஸார் உட்பட மூவர் காயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சன நெருக்கடி தொடர்பில் ஏற்பட்ட போக்குவரத்து பிரச்சினை ஒன்று பற்றி விசாரிக்க சென்ற பொலிஸாருக்கும் பயணிகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு பின்னர் கைகலப்பாக மாறியதாக அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர்.பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள அதே வேளை மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளனர். (அ-2)

# மூன்று மாதத்தில் டெங்கு நோயினால் 32 பேர் பலி

## சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு அறிவிப்பு

நாட்டில் கடந்த மூன்று மாத காலப் பகுதியில் 8 ஆயிரத்து 594 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நோய் தாக்கம் காரணமாக 32 பேர் உயிரிழந்ததாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்திலேயே டெங்கினால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் மற்றும் உயிரிழந்தோரின் எண்ணிக்கையும் அதிகமாக பதிவாகியுள்ளதாக தொற்றுநோய் ஆய்வு பிரிவின் அறிக்கை தெரிவித்துள்ளது. இதன்படி மூன்று மாத காலப் பகுதியில் டெங்கினால் கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 159 பேர் பீடிக்கப்பட்டிருந்ததோடு 12 உயிரிழப்பு சம்பவங்களும் கம்பஹா மாவட்டத்தில் ஆயிரத்து 641 பேர் பீடிக்கப்பட்டிருந்ததோடு 4 உயிரிழப்பு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இதற்கு அடுத்தபடியாக கண்டி மாவட்டத்தில் 529 பேரில் 4 உயிரிழப்புச் சம்பவங்களும் புத்தளம் மாவட்டத்தில் 279 பேரில் 3 உயிரிழப்புச் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 567 பேரும் காலி மாவட்டத்தில் 308 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 439 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 446 பேரும் யாழ். மாவட்டத்தில் 164 பேரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 388 பேரும் கேகாலை மாவட் டத்தில் 379 பேரும் டெங்குநோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது நாட்டில் நிலவும் இடையிடையே மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் நிலவுகின்றதாகவும் இதனால் டெங்கு நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக நுளம்புகள் பெருகாத வகையில் சுற்றுச்சூழலை வைத்திருக்குமாறு சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ-2)

# தேர்தல்கள் ஒத்திவைப்பு; அரசின் திட்டமிட்ட சதி

## சங்கரி தெரிவிப்பு

அரசாங்கம் திட்டமிட்டு தேர்தல்களை ஒத்தி வைத்துள்ளதாக தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி குற்றம் சுமத்தியுள்ளார்.

புதுக்குடியிருப்பு மற்றும் கரையோரப் பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை அரசாங்கம் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நடத்துவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு அரசியல் நோக்கங்களை கொண்டது என அவர் தெரிவித்துள்ளார்.

*தேர்தலில் வாக்களிக்க மக்கள் ஆர்வத்துடன் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். வேட்பு மனுக்கள் கோரப்பட்டு ஓராண்டு காலம் கடந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.எனவே தேர்தல்கள் ஒத்திவைப்பதனை விடவும் தேர்தல்களை இரத்து செய்து மீண்டும் புதிதாக வேட்பு மனுக்களை கோருவது மிகவும் பொருத்தமான நடவடிக்கையாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மார்ச் மாதம் 24 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படவிருந்தது. எனினும் இரண்டு இடம்பெயர் மக்கள் தாக்கல் செய்த மனுவை தொடர்ந்து தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. (அ-2)

# ஸ்தாபகர் தினமும் பரிசில் தின நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசில் தினமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி கற்பக விநாயகர் கலையரங்கில் கல்லூரி முதல்வர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, திருமதி செல்வராசா , சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், திருமதி பாலசுப்பிரமணியம், யாழ். கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வி. மகேந்திரம், திருமதி மகேந்திரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

March 2012 to August 2012

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.04.2012

(சி/6235)

இதற்கு முன்பு நாம் என்ன நினைத்தோமோ, அப்படித்தான் இப்போது நாம் அனைவரும் இருக்கிறோம். ~ கௌதம புத்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சாத்தியமான தீர்வுத் திட்டத்தை ஐ.நாவிடம் சமர்ப்பிக்க வேண்டும்

இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வுத் திட்ட வரைவு அரசிடம் மட்டுமல்ல; தமிழ்த் தரப்புகளிடமும் இல்லை என்பது ஆச்சரியமான உண்மை.

காலத்திற்குக் காலம் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை அரங்கேறவில்லை.

1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை –இந்திய ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத்திட்டம் முதல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தயாரித்த தீர்வுத்திட்டம் மற்றும் இலங்கை அரசுடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்திய காலத்தில் விடுதலைப்புலிகளால் முன்மொழியப்பட்ட திட்டம் வரை அனைத்தும் ஏதோ ஒரு வகையில் காலாவதியாகிவிட்டன என்றோ அல்லது அவற்றை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த நாம் மறந்து விட்டோமென்றோ கூறலாம்.

எதுவாயினும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான மனப்பாங்கு அரசிடம் இல்லாதபோது எழுத்துமூலமான தீர்வுத்திட்டங்களை புரட்டிப் பார்ப்பதில் என்ன பயன் என்ற நிலைப்பாட்டிலும் இனப்பிரச்சினைத் தீர்வை மையப்படுத்திய தீர்வுப் பொதிகளை நாம் மறந்து போயிருக்கலாம்.

எனினும் அத்தகைய நிலைமை இப்போது இல்லையென்றே கூறவேண்டும்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறியதன் மூலம் இனப்பிரச்சினைக்கான 'தீர்வு' சாத்தியமானது என்ற முடிவுக்கு நாம் வருவதில் ஐயங்கொள்ளத் தேவையில்லை.

அதேநேரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி அதன்மூலம் கிடைக்கும் என்ற நினைப்பு –விருப்பு யாருக்கேனும் இருந்தால் அதனை அடியோடு மறந்து விடுவது உத்தமம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஐ.நா. சபையின் ஊடாக அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து மேற்கொள்வதாகவே அமையும்.

இவ்வாறான தீர்வு முன்வைக்கப்படும்போது ஏற்கமுடியாது என்று இரு தரப்பும் கூற முடியாது.

ஆக, தமிழ்த் தரப்புகள் முழுமையானதும் நிறுத்திட்டமானதுமான தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயார் செய்து உடனடியாக அதனை ஐ.நாவிடமும் அமெரிக்கா மற்றும் இந்தியாவிடமும் ஒப்படைக்க வேண்டும்.

இத் தீர்வுத் திட்டத்தில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளினதும் முஸ்லிம் அரசியல் கட்சிகளினதும் ஒப்புதல் பெறப்படின் உத்தமம்.

ஒப்புதல் பெறுவதில் இடறல் இருக்குமாயின் அதுபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை பிரதிபலிக்கும் தீர்வை நாம் முன்வைக்க வேண்டும். அதுவே சாலச் சிறந்ததாகும்.

# தமிழர் என்ற அடையாளத்தை அழிக்கும் முயற்சியில் அரசாங்கம்

## மாவை எம்.பி.குற்றச்சாட்டு



தமிழ் மக்கள் எங்கெல்லாம் பலமாக வாழ்கின்றனரோ அப்பகுதிகளை இராணுவ மயப்படுத்தி சிங்கள மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எந்த மண்ணில் நாம் வாழ வேண்டுமென விரும்புகின்றோமோ அந்த மண்ணில் தமிழர்களின் பிரதேசம் என்ற அடையாளத்தை இல்லாதொழிக்கும் செயற்பாட்டிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் எம்.பியுமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வநாயகத்தின் 114 ஆவது ஜனன தின நிகழ்வுகள் கடந்த 31ஆம் திகதி வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள அவரது சிலைக்கு அருகில் சிறப்புரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது விடுதலைக்காக எம்மைத் தொடர்ந்தும் அர்ப்பணிப்போம். அந்த விடுதலையைப் பெறுவோம் என்ற உறுதிப்பாட்டோடு நாம் ஒன்று திரண்டிருக்கின்றோம்.

இந்த இக்கட்டான நிலையிலும் 2009ஆம் ஆண்டு மே மாதம் மிகப் பெரிய பேரழிவு இடம்பெற்ற பின்னும் கடந்த 3 ஆண்டுகளிலும் அரசாங்கத்தினாலும் அவர்களுடைய இராணுவத்தினாலும் தமிழர்களுடைய பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பூமியாக இருப்பது மிகவும் வேதனையும் துக்கமும் நிறைந்த நிகழ்வாகவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாநிலம் தமிழர்களுடைய தாயகம் என்பதை எமக்குத் கற்றுத்தந்த தந்தை செல்வா இந்த நிலத்திலேயேதான் நாம் ஆட்சி செய்ய வேண்டும் என போராட்டம் நிகழ்த்திய தன் மூலமும் அவர் எம்மை கட்டியெழுப்பியுள்ளார்.

அதனால் அரசாங்கம் தமிழ் மக்கள் எங்கெங்கு பலமாக வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இராணுவ மயமாக்கி சிங்கள மயமாக்கி எந்த மண்ணில் நாம் வாழவேண்டுமென நினைக்கின்றோமோ அந்த மண்ணில் தமிழர்களுடைய பிரதேசமென்ற அடையாளங்களை இல்லாது செய்து சமூக அந்தஸ்து தமிழர்களுடைய தேசமென்பதை அழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்கின்றது.

இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும். கைது செய்யப்பட்டு காணாமல் போனோரது பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் இன்று ஐ.நா சபையின் மனித உரிமை அவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அவை இன்று முக்கியத்துவம் பெற்ற காலகட்டமாக இருக்கின்றது.

அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளினால் மிகவும் குழம்பிப் போய் மீண்டும் ஓர் இனவாத நிகழ்ச்சியை ஒரு பேரவலத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஜனாதிபதியும் ஒவ்வொரு அமைச்சர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் இருக்கும் தலைவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை நீக்கித் தமிழர்களுடைய நம்பிக்கையைப் பெறக்கூடிய அளவிற்கு தமிழர்கள் சொந்தத் தாயகத்தில் ஆட்சி செய்யக்கூடிய காலம் கனிந்துள்ள இந்த நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என அவர் தெரிவித்தார். (அ-2)

# மலேசியாவிற்குள் நுழைய முற்பட்ட 24 பேர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

(கொழும்பு)

மலேசியாவிற்கு சட்டவிரோதமாக நுழைய முயற்சித்ததாக கருதப்படும் 5 இலங்கையர்கள் உள்ளிட்ட 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசியாவின் பென்கெராங் கிராமவாசிகள் 20 பேர் இணைந்து குறித்த 24 வெளிநாட்டவர்களையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வான் மற்றும் இரு கார்களில் வந்திறங்கிய 24 வெளிநாட்டவர்கள் அக் கிராமத்தில் 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாது உள்ள பாடசாலை ஒன்றிற்குள் செல்ல முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 14 ஆப்கானிஸ்தானியர்களும் 3 பாகிஸ்தானியர்களும் 5 இலங்கையர்களும் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களின் கடவுச்சீட்டு செல்லுபடியானதா இல்லையா என்பது குறித்து மலேசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைது செய்யப்பட்வர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் மலேசிய ஆட்கடத்தல் சட்டத்தின் கீழ் 15 வருட கால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டி வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த மின்தடை பற்றிய செய்திக்கு மேலதிகமாக வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழமுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை தொட்டிலடி சந்தி முதல் சங்கானை ஊடாக சித்தன்கேணி சந்தி வரையான பிரதேசம், சித்தன்கேணி முதல் வட்டுக் கோட்டை வீ.சி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

7 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## ஓய்வூதியம் 5ஆம் திகதி

(சிவநகர்)

ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 5ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலக ஓய்வூதியப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இக்கொடுப்பனவானது எதிர்வரும் 10 ஆம் திகதி வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. புதுவருடத்தை முன்னிட்டே மேற்குறித்த திகதியில் வழங்கப்படவுள்ளது. (அ-3-254)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### அதிகம் பெருமைப்படாதே!



நல்ல நூல்களைப் படிப்பது, சொற்பொழிவுகளை நடத்துவது இவற்றைவிட அன்பால் மட்டுமே ஆன்மீகத்தில் மேம்படமுடியும்.


தேவையற்ற சிந்தனைகளை விட்டுவிட்டு மனப்பூர்வமாக இறைவனை வழிபட்டால் அவன் இருப்பதை உணரலாம்.

பக்தனாக விரும்புகிறவன் சொர்க்கத்தை அடைவது போன்ற ஆசைகளை ஆரம்பத்திலேயே விட்டு விடவேண்டும்.

வெறுப்பையும் கோப உணர்ச்சியையும் அடக்கும்போது அந்த அளவிற்கு நல்ல ஆற்றலை சேமிக்கிறோம். அந்த ஆற்றல் உயர்ந்த ஆன்மீக சக்தியாக மாறுகிறது.

ஆன்மீக அறிவால் மட்டுமே நமது துன்பங்களை என்றென்றைக்கும் ஒழிக்கமுடியும். ஏனைய அனைத்து அறிவும் அதைக் குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே நீக்கும்.

உன்னைப்பற்றி அளவுக்கு மீறிப் பெருமை கொள்ளாதே. பிறர் பெறாத அந்தப் புகழை உனக்கு அளித்தது இறைவனின் அருளே. அதை ஒரு வழிபாடாகச் செய்.



கிளிநொச்சி மாவட்ட சிவநகர் கிராம அலுவலர் பிரிவின் பதிவு செய்யப்பட்ட மூத்த பிரஜைகளுக்கான கருத்தரங்கு அண்மையில் சிவநகர் முன்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளவளத்துறை டாக்டர் எம்.ஜெயராஜ் உரையாற்றுவதையும் கிளிநொச்சி மருத்துவமனை டாக்டர் என். பிரதீபன், கிராம அலுவலர் சாரதாம்பாள், முன்னாள் அதிபர் கா.நாகலிங்கம் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மூத்த பிரஜைகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# இந்தியா தாளம் போடுகிறது கூட்டமைப்பு ஆட்டம் போடுகிறது

## -இடதுசாரி.முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை டில்லியிலுள்ள பிராமண ஆட்சியாளர்கள் பலமிழக்கச் செய்துள்ளதால் அப்பிரேரணை நடைமுறைக்கு வரும் என்ற நம்பிக்கை இல்லையென இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் தாளத்திற்கே ஆட்டம் போடுவதாகவும் அம் முன்னணி குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக இடதுசாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை கல்கிஸை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமாகு மேலும் தெரிவிக்கையில்

இந்தியாவில் ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளும் மக்களும் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஆனால் டில்லி ஆட்சியாளர்களில் உள்ள பிராமணர் கூட்டம் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற்படுகிறது.

எனவேதான் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணையை பலமிழக்கச் செய்துள்ளனர். நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலை பெற வேண்டும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் இது அமுல்படுத்தப்படுமென்ற நம்பிக்கையை வைக்க முடியாது.

இந்தியாவும் அமெரிக்காவும் தமக்குத் தேவையானதை நிறைவேற்றிக் கொள்வதற்கான நாடகத்தை அரங்கேற்றி முடித்துள்ளன.

இந்தியா தமிழ் மக்களுக்கு செய்த துரோகம் காரணமாகவே இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதனையும் வழங்க மாட்டோம் என்ற பிடிவாதப் போக்கிற்கு தள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை அரசாங்கத்திலுள்ள சில கட்சிகள் இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்கும் எதிராக மேற்கொள்ளும் எதிர்ப்புக்கள் வெறும் நாடகமாகும்.

வெளிநாட்டுகடன்களைதிருப்பிசெலுத்தமுடியாத சூழ்நிலையிலேயே அரசாங்கம் வரிகளை அதிகரித்து மக்கள் மீது சுமைகளை சுமத்தி நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ளது. அத்தோடு அரசாங்கம் டொலர்களை பதுக்கி வைத்து மக்களை நசுக்குகின்றது என்றார்.

(அ-2)

# மூன்றுமாத விபத்துக்களில் 578 பேர் பரிதாப உயிரிழப்பு

## பொலிஸ் தலைமையகம் தகவல்

(கொழும்பு)

இவ்வருடம் மார்ச் 28 ஆம் திகதி வரையான 3 மாத காலப்பகுதியில் நாடுமுழுவதும் வீதி விபத்துக்களால் 578 பேர் உயிரிழந்ததுடன் ஆயிரத்து 270 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை காலை 6 மணிமுதல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரையான 24 மணித்தியாலங்களில் வீதி விபத்துக்களால் 11 பேர் பலியானதுடன் 23 பேர் காயமடைந்தனர்.

கடுவெலயில் நடைபெற்ற விபத்தொன்றில் இருவர் பலியானதுடன் 7 பேர் காயமடைந்தனர். ஆடைத்தொழிற்சாலையொன்றின் ஊழியர்களை ஏற்றிக்கொண்டு வந்த பேருந்து ஒன்றுடன் கார் ஒன்று மோதியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.


கேகாலையில் பேருந்து ஒன்றும் வான் ஒன்றும் மோதியதால் இருவர் பலியானதுடன் 6 பேர் காயமடைந்தனர். குருநாகல் நாரம்மலவில் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் 24 வயதான இளைஞர் ஒருவர் பலியானார்.

நுவரெலியா-பதுளை வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்தனர். அம்பலாங்கொடையில் வான் ஒன்றும்-ட்ரக் ஒன்றும் மோதிக் கொண்டதால் ஒருவர் பலியானார்.

(அ-2)

# இந்தியா உறுதியான வெளிவிவகார கொள்கைகளை கொண்டிருக்கவில்லை

## அமெ. இராஜதந்திரியின் நூலில் குறிப்பு



(கொழும்பு)

ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கொல்வதற்கு அல்லது. உயிருடன் பிடிப்பதற்கு இந்தியா தனது படைகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பியிருக்க வேண்டும் என்று முன்னாள் அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் எழுதியுள்ள நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவை அச்சுறுத்தும் கனவு அமெரிக்காவின் கனவு அடுத்த உலக சக்தியாக இந்தியா என்ற நூலிலேயே அமெரிக்காவின் முன்னாள் இராஜதந்திரி வில்லியம் எச்.அவெரி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பில்கிளின்ரன் மற்றும் ஜோர்ஜ் புஸ் நிர்வாகங்களில் இந்தியாவிலும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திலும் இவர் இராஜதந்திரியாகப் பணியாற்றியுள்ளார். அவர் தனது நூலில் ராஜீவ்காந்தி படுகொலை இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்க சக்திஎன்ற நிலைமீது நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கட்டாயமாக இந்தியாவுக்கு கொண்டு வந்து நீதியின் முன் நிறுத்துவதன் மூலம் இந்தியா தனது அரசியல் தலைவர்களை தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும், தனது அரசியல் முறைகளை அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்கும், தெற்காசியாவில் எந்தவொரு சவால்களில் இருந்தும் பாதுகாக்கும் என்று பிராந்தியத்துக்கும் உலகத்துக்கும் தெளிவான செய்தி ஒன்றை சொல்லியிருக்கலாம்.

ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பின்னர் இலங்கையில் தலையிடுவதற்கு இந்தியாவுக்கு கதவுகள் அகலத் திறந்திருந்தன. 1991 இல் தனது முன்னாள் பிரதமர் ஒருவரை தீவிரவாத அமைப்பின் தாக்குதலில் இழந்த அவமானம் நவீன இந்திய வரலாற்றில் குறைத்து மதிப்பிட வைத்துள்ளது. இந்தியா உறுதியான வெளிவிவகாரக் கொள்கையை - இராணுவ வல்லமையை கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

(அ-2)

# பிரேரணை தொடர்பில் மகிழ்ச்சியடையமுடியும்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கெதிரான ஜெனீவா பிரேரணை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைய முடியும் என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடு என்ற ரீதியில் இலங்கைக்கான ஆதரவு குறைவடைந்த போதிலும் உலக நாடுகளின் மத்தியில் ஓர் நிலைப்பாட்டை ஏற்படுத்த முடிந்துள்ளது எவ்வாறான ஓர் சூழ்நிலை ஏற்பட்டாலும் மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்பட மாட் டாது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சட்டங்களை மேம்படுத்த தவறின் அமெ.வின்வரிச்சலுகை மீறிப்போகும்

## பொது. ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் தொழிலாளர் தொடர்பான சட்டங்களை மேம்படுத்தத் தவறினால் அமெரிக்காவிடம் இருந்து கிடைக்கும் பல வரிச்சலுகைகள் இல்லாமல் போதும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சுதந்திர வர்த்தக வலயத்தின் பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கம் உடனடியாக தனது நிலைப்பாட்டைதெளிவுபடுத்துவது முக்கியம் என சங்கத்தின் செயலாளர் அன்டன் மாக்ஸ் தெரிவித்துள்ளார். தொழிலாளர் சட்டம் தொடர்பான விடயங்களை வார்த்தைகளில் மாத்திரம் காண்பிக்காது அதனை செயற்பாட்டு ரீதியாகவும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தொழிலாளர் சட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரிலேயே அரசாங்கம் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெற்றுள்ளது. இதனால் தொழிலாளர் சட்டம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவிக்க கால அவகாசம் வழங்குவதாகவும் மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# ஐ.பி.எல். திருவிழா நாளை ஆரம்பம் சென்னையில் இன்று கோலாகலம்

(சென்னை)

ஐ.பி.எல். இருபது-20 ஐந்தாவது சீசன் போட்டி தொடக்க விழா சென்னையில் இன்று மாலை கோலாகலமாக நடக்கிறது.

இதில் அமெரிக்க பொப் பாடகி கேட்டி பெர்ரி, நடிகர் அமிர்தாப்பச்சன் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐபிஎல்) இருபது-20 போட்டிகள் கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதுவரை 4 சீசன் போட்டிகள் நடந்துள்ளன.

இதைத் தொடர்ந்து 5ஆவது சீசன் கிரிக்கெட் திருவிழா நாளை சேப்பாக்கம் மைதானத்தில் தொடங்குகிறது.

முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி எதிர்கொள்கிறது. 5-வது சீசனை பிரமாண்ட ஆரம்ப விழாவுடன் நடத்த ஐ.பி.எல். நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதன்படி சென்னை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் இன்று மாலை வண்ணமய மான ஆரம்ப விழா நடக்கிறது.

பிரபல அமெரிக்க பொப் பாடகி கேட்டி பெர்ரி கலந்து கொண்டு உற்சாகத்தோடு பாடுகிறார்.

நடிகர் அமிதாப்பச்சன் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கிறார்.

கரினா கபூர், பிரியங்கா சோப்ரா, சல்மான் கான், பிரபுதேவா ஆகியோரது நடனங்களும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறு கின்றன.

தொடக்க விழாவை காண ரசிகர்கள் ஆர் வத்துடன் உள்ளனர்.

நாளை தொடங்கி 51 நாட்களுக்கு இந்தத் திருவிழா நடக்கிறது .

மொத்தம் 76 ஆட்டங்கள் நடக்க உள்ளன.

நடப்பு சம்பியன் சென்னை, மும்பை , கொல்கத்தா, பஞ்சாப், ராஜஸ்தான் , பெங் களூர், புனே, ஐதராபாத், டில்லி ஆகிய 9



கேட்டி பெர்ரி

அணிகள் கலந்து கொள்கின்றன.

இறுதிப் போட்டி மே 27ஆம் திகதி நடக்கிறது.

புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங் களைப் பெறும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

இந்தச் சுற்றில் 3 ஆட்டங்கள் நடக்கிறது.

முதல் ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.

இரண்டாவது தகுதி சுற்று ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி, முதல் தகுதிச் சுற்று ஆட்டத்தில் தோல்வி அடைந்த அணியுடன் பலப் பரீட்சை நடத்தும். இது விலகல் சுற்றாக கருதப்படுகிறது. இதில் வெற்றிபெறும் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

இந்த சீசனில் பல்வேறு முன்னணி அணி யில் ஆடிய நட்சத்திர வீரர்கள் வேறு அணிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை அணிகள் சர்வதேச போட்டிகளில் ஆடி வருவதால் அந்த அணியை சேர்ந்த வீரர்கள் ஐ.பி.எல். தொடரின் பிற்பாதியில் இணையவுள்ளனர்.

# ரூ.9,458 கோடி கிரிக்கெட் ஒளிபரப்பு இ.எஸ்.பி.என்னுக்கு

இந்திய அணி ஆடும் போட்டிகளை ஒளி பரப்ப இ.எஸ்.பி.என் தொலைக்காட்சிக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்டுள்ள இந்த உரிமை 750 மில்லியன் டொலர் அதாவது 3851 கோடி இந்திய ரூபாய் அல்லது 9458 கோடி இலங்கை ரூபாய் பெறுமதி கொண்டது.


96 போட்டிகளை ஒளிபரப்ப பெறப்பட் டுள்ள இந்த ஒளிபரப்பு உரிமையின் படி ஸ்ரார் ரீவி நிறுவனம் ஒரு போட்டிக்காக சராசரியாக 40 கோடிக்கும் அதிகமான இந் திய ரூபாய்களை வழங்கியுள்ளது.

இது இதற்கு முன்னர் காணப்பட்ட நிம்பஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் நிம்பஸ் நிறுவனம் வழங்கிய 32.5 கோடி இந்திய ரூபாய்களை விட கணிசமான அளவு அதிக மாகும்.

சென்னையில் நடைபெற்ற கிரிக்கெட் சபை வர்த்தக குழுக் கூட்டத்தில் இந்த முடிபு செய்யப்பட்டுள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை நடத்தி வரும் ஊடக ஜாம்பவான் ரூப்பர்ட் முர்டோக் கிற்கு சொந்தமான நிறுவனங்களில் ஒன்றே ஸ்ரார் ரீவி நிறுவனம் என்பது குறிப்பிடத் தக்கது.

# அன்டி முரேயை தோற்கடித்து ஜோக்கோவிச் சம்பியனானார்



ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்று வந்த மியாமி மாஸ்டர்ஸ் கிண்ணத் தொடரில் ஆண்களுக்கான தனிநபர் இறுதிப்போட் டியில் உலகின் முதற்தர வீரர் நெவாக் ஜோக் கோவிச் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இது அவர் வெற்றி கொள்ளும் மூன்றாவது மியாமி சம்பியன் பட்டமாகும்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பிரித்தானியாவின் அன்டி முரேயை 6:1, 7:6 என்ற கணக்கில் ஜோக்கோவிச் வெற்றி கொண்டார்.

2007ஆம் ஆண்டு முதன்முதலாக மியாமி மாஸ்டர்ஸ் சம்பியன் பட்டம் வென்ற ஜோக்கோவிச், 2011ஆம் ஆண்டிலும் சம்பி யன் பட்டம் வென்றிருந்தார்.

இவ் வெற்றி குறித்து கருத்து தெரிவித்த ஜோக்கோவிச், ஆரம்பத்திலிருந்து போட்டிகளில் சிறப்பாக விளையாடியதாகவும், அன்டி முரே சிறந்த வீரர் என்பதால் தவறுகளை விட முடி யாது இருந்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, பெண்களுக்கான தனிநபர் போட்டியின் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா வெற்றி கொண்டார். இறுதிப் போட்டியில் அவர் 7:5, 6:4 என்ற கணக்கில் வெற்றி கொண் டார்.

# இலங்கை - இங்கிலாந்து இடையேயான 2-வது டெஸ்ட் இன்று கொழும்பில் ஆரம்பம்

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ள நிலை யில், இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இங்கிலாந்துக் கெதிராக இரண்டாவது டெஸ்ட்போட்டிக்கான அணியில் இலங்கை அணியின் துணைத் தலைவர் அன்சலோ மத்யூஸ் இடம்பெற்றுள்ளார்.

அன்சலோ மத்யூஸ் அணியில் சேர்க்கப் பட்டுள்ள போதும், தனித்து துடுப்பாட்ட வீரராக மட்டுமே செயற்படுவார் என எதிர்பார்க்கப்படு கிறது.

தற்போது அன்சலோ மத்யூஸ் அணிக் குத் திரும்பியுள்ள நிலையில் சாமர சில்வா அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை , ஆரம்ப பந்து வீச்சா ளர் சானக வெல கெதரவிற்கு அடி வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட உபாதை கார ணமாக அணியிலி ருந்து நீக்கப்பட்டுள் ளார்.

வெலகெதரவுக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ஷமின்ட் ஏரங்க அணியில் இணைக்கப்பட்டுள் ளார்.

கடந்தாண்டு ஒக் ரோபரில் பாகிஸ்தா னுக்கு எதிரான டெஸ்ட் தொடருக் கான அணியில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர் அவரது முழங்கையில் ஏற்பட்ட உபாதை காரணமாக அத் தொடரில் இருந்து விலகிய ஏரங்க, அதன் பின்னர் அணியில் இணைத்துக் கொள்ளப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

# உதைபந்தாட்டம்

கொழும்பிலிருந்து யாழ்.வரும் கடற்படை உதைபந்தாட்ட அணிக்கும் யாழ்ப்பாண அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதை பந்தாட்டப் போட்டி இன்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் யாழ்.அணியில் யாழ்.பல் கலைக்கழக அணி வீரர்களும் உரும்பிராய் ஞானமுருகன் அணி வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

## பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

யாழ் மாவட்டத்திலிருந்து பிரதேச செய்தியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். தகைமையும் விருப்பமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, பால், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கிராமசேவகர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, தொலைபேசி இலக்கம், கல்வித்தகைமை, தற்போது செய்யும் தொழில், செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் பிரதேசம் ஆகியவை உள்ளடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல. 3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழுப்பாணம்.

எனும் முகவரிக்கு உடனடியாக சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி பா. நிவேதிகா



கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 7A, 2B பெறுபேற்றினைப் பெற்ற செல்வி பா. நிவேதிகா அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இ வரை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் செல்வி பா.நிவேதிகா அவர்கள் தனது கல்விப் பயணத்தில் பல சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ள புதையல்புட்டி வைரவரின் ஆசியை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
கண்ணன் சித்தப்பா (யாழினி ரான்ஸ்போட், கொக்குவில்)
விக்கி சித்தப்பா (நிவேதினி வெதுப்பகம், முல்லைத்தீவு)
குட்டிச் சித்தப்பா (விது மெடிக்கல் அன் பேபி நீட்ஸ், முள்ளியவளை)

(ஜ-6243)

# தமிழ்நாட்டிலிருந்து 150...

தமிழகத்தில் அமைந்துள்ள மூன்று முகாம்களில் சிறப்புப்பயிற்சி பெற்ற சுமார் 150 விடுதலைப்புலிகள் இலங்கைக்குள் ஊடுருவி இருப்பதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை திசை திருப்பும் வகையில் அரசாங்கத்துக்குச் சார்பான ஐலண்ட் பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இலங்கைக்குள் இவ்வாறு ஊடுருவி இருப்பவர்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மீனவர்கள் போல் வேடமிட்டுக் கொண்டு இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக புலனாய்வுத் துறையினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி, நாட்டில் மீண்டும் அழிவுகளை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கம் என பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை குச்சவெளியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்ளை கைது செய்யப்பட்டதை அடுத்து இவ்விடயம் தெரிய வந்துள்ளதாக இவ் வூடகம் கூறியுள்ளது.

இக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவருக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான தொடர்பை தாம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என பொலிஸாரின் குரல்தரவல்ல அதிகாரி அஜித்ரோகன தெரிவித்துள்ள நிலையில் ஐலண்ட் பத்திரிகை இவ்வாறு குறிப்பிட்டது.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசாங்கத்தின் அமைச்சர்கள் இனத்துவேசத்தை வெளிப்படுத்தும் வகையிலும் மேற்குல நாடுகளுக்கு எதிராகவும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

அத்துடன் இலங்கைக்கு எதிராக மேற்குலக ஊடகங்களால் மேற்கொள்ளப்படும் தவறான பரப்புரைகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க உள்ளூர் ஊடகங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்திருந்தார்.

மறுபுறத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்களை அரசாங்கம் இராணுவ மயப்படுத்தி சிங்கள பௌத்த பிரதேசமாக மாற்றி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச ஊடகங்களும் சுட்டிக்காட்டி வருகின்றன.

- இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் மற்றும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பில் சர்வதேச சமூகம் அரசாங்கத்துக்கு கடும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

இத்தகையதொரு பின்னணியிலேயே சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை திசை திருப்பும் நோக்கில் தமிழகத்தின் மூன்று முகாம்களில் சிறப்புப் பயிற்சி பெற்ற சுமார் 150 விடுதலைப் புலிகள் இலங்கைக்குள் ஊடுருவிஇருப்பதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதாக அரசியல் நோக்கர்கள்கருத்துவெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் கூறியிருந்தது தெரிந்ததே. (எ-11)


## ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன்
### புதிய பிரிவுகள் ஆரம்பம்

04.04.2012 (புதன்கிழமை)

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலம் | ~~12,000/-~~ | 3,000/- | காலை 8 – 9 |
| பிரெஞ்ச் | ~~60,000/-~~ | 15,000/- | காலை 9 – 10 |

இச்சலுகை புதன்வரை பதிவுசெய்வோருக்கு மட்டும்

1. பிரெஞ்ச், ஜெர்மன் தூதரக பரீட்சை மாதிரி புத்தகம் உட்பட 5க்கு மேற்பட்ட பெரிய புத்தகங்களும் 40 சிறிய புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும்.
2. பயிற்சியில் திருப்தி இல்லையேல் பணம் முழுமையாக திருப்பித்தரப்படும்.
3. மூன்று மாத பயிற்சியின் பின் ஒரு வருடம்வரை பயிற்சியை தொடரவிரும்பின் சலுகைக்கட்டணம் 15000/- தவிர வேறு எந்த கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

ஆசிரியர், அரச அலுவலர் உயர்கல்வி மாணவர்களுக்கான இலவச ஆங்கில விடுமுறைநாள் பயிற்சிப்பட்டறை : 06.04.2012 வெள்ளிக்கிழமை

6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஆங்கில பயிற்சிவகுப்பு 09.04.2012 திங்கள்

MyWay Language Research Institute
077 33 63 456



தரம் 6 முதல் O/Lநு யாழ் நகரின் No.1

## எடிசன் அக்கடமி

யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய்

19 பேருக்கு 9A

இது

சாதனையா ? அதிசயமா ? அற்புதமா ?

| English Medium | Tamil Medium | Tamil Medium |
|---|---|---|
| பிரகதீஸ்வரன் குணவரன் | சுந்தரம் கேதாரன் | வைஸ்ணவி தங்கராஜா |
| குகநாதன் கௌசிகாந் | மிகுந்தன் துமிலன் | தேவிகா தேவகுமார் |
| சிவநேசன் அச்சுதன் | சிவேந்திரராஜா சஞ்ஜீவன் | சௌஜா காயாரோகணன் |
| பாலச்சந்திரன் சங்கீர்த்தன் | முத்துலிங்கம் அனுஜன் | கௌசனா பாலசுந்தரம் |
| ஜெயக்குமார் புலேந்திரன் தனுசன் | ஜெயஸ்ரீ லோகபவன் | தாட்சாயனி ராஜாராம் |
| யோசப் கருணாகரன் ஹயசிந்கிரான் | புஸ்பகுமார் வைஸ்ணவன் | |
| சாரங்கா சபாநாயகம் | கோபிகா பரிமளகாந்தன் | |


# அழுத்தங்...

வெளிவிவகார அமைச்சரும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பாக இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதகங்கள் குறித்து பொதுமக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இதனூடாக இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைகளைக் கொண்டு வருவதற்கான அதிகாரம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

# பெற்றோல் வாங்க குவிந்தது கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மாலை திடீரென அதிகளவானோர் பெற்றோல் கொள்வனவு செய்ததை காணக்கூடியதாக இருந்தது.

பெற்றோலின் விலை திடீரென அதிகரிக்கும் என கிளம்பிய வதந்தியதையடுத்தே இவ்வாறு பெற்றோல் கொள்வனவு செய்ய முண்டியடித்ததாக கூறப்பட்டது. இரவிரவாக பெற்றோல், டீசல் என்பன விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# தமிழ்நாட்டிலிருந்து...

தீவிரவாதச் செயல்கள் எதுவும் நடைபெறாதபடி கடுமையாக கண்காணிக்கப்பட்டு வரு கின்றது.

யாராவது தீவிரவாதி என்று கண்டறியப்பட்டால் அவர்கள் சிறப்பு முகாம்களில் அடைக்கப்படுகின்றார்கள். எனவே தமிழ்நாட்டில் ஆயுதப்பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவது அல்லது அவ்வாறு நடத்தப்பட அனுமதி வழங்கப்படுவது என்ற கேள்விக்கே இடமில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

இதனிடையே இது குறித்து இலங்கை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தின் தலைமை இயக்குநர் லக்ஸ்மன் ஹூலுகல்ல கருத்து வெளியிடுகையில், இந்த செய்தியை மறுத்தார். தானும் அந்தச் செய்தியை பார்த்ததாகவும், ஆனால் இதை உறுதிப்படுத்தும் வகையில் நம்பகத்தன்மை கொண்ட ஆதாரம் எதுவும் இல்லை எனவே இதில் உண்மை எதுவும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும் என்றார் ஹூலுகல்ல.

ஆனால் இந்த பத்திரிகை இலங்கை உளவுத்துறையை மேற்கோள்காட்டி இந்த செய்தியை வெளியிட்டிருக்கின்றதே என்று கூறியதற்கு பதிலளித்த ஹூலுகல்ல, ஆனால் இந்த செய்தி பொதுப்படையாக அப்படி கூறுகிறது. எந்த ஒரு பொறுப்பான அதிகாரியையும் மேற்கோள்காட்டவில்லை. இவ்வாறு அவர்கள் கூறமுடியாது என்றார். (எ-11)

# இலங்கை...

இராணுவ மரபுப்படி அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

இதனையடுத்து பாகிஸ்தான் இராணுவத்தில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மலரஞ்சலி செலுத்தினார்.

இராணுவத் தளபதியின் விஜயத்தின் போதான இரண்டாவது அம்சமாக, பாகிஸ்தானின் கூட்டுப்படைகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் ஜெனரல் காலித் எஸ்.வைனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# கிழக்கில்...

சந்தேக நபர் ஒருவர், இந்தியாவிலிருந்து தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் இலங்கை வந்திருப்பதாக கூறியதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவ்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# பிரான்ஸுக்...

தாகத் தெரியவந்துள்ளது.

அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளராக பணியாற்றும் சேனுகா செனவிரத்னவை அப்பதவிக்கு நியமிக்க அவர் தீர்மானித்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது

வெளிவிவகார அமைச்சில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் வெளிவிவகார அமைச்சைக் கண்காணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன இது குறித்து கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் தயான் ஜயதிலக ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாகவும் சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜெனிவா தீர்மானத்தை அரசாங்கம் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும், இவ்விவகாரம் தொடர்பில் மியான்மாரிடம் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் எனவும் தயான் ஜயதிலக அண்மையில் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருந்தார்.

இந் நிலையில், இக்கருத்துக்கள் குறித்து விளக்கம் அளிக்குமாறு தயான் ஜயதிலகவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பும்படியும் சஜின் வாஸ் குணவர்த்தன சேனுகா செனவிரத்னவிடம் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


யாழ் நகர் ஆசிரியர்கள் தற்போது சங்கானையிலும்...

## றோயல் அக்கடமி

பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)

A/L 2014

ஆரம்பம்: ஏப்ரல் 05 வியாழக்கிழமை மாலை 4.00 மணி

வர்த்தகப்பிரிவு
- பொருளியல் : வரதராஜன்
- கணக்கீடு : பகீரதன்
- வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு
- தமிழ் – பத்மநாதன்
- புவியியல் – பாபு
- இந்துநாகரிகம் – ஸ்ரீஸ்
- நாடகஅரங்கியலும் – றமேஸ்
- ஆங்கிலம் – சந்திரமவுலி
- அளவையியல் – E.S. பவ்ன்
- அரசியல் – சுகாஷ்
- வரலாறு – R.S. சந்திரன்
- விவசாயம் – சசி
- I.C.T – அம்பி



எம்முடன் இணைந்து சிறந்த பெறுபேறை தர காத்திருந்த மாணவர்களுக்கு நன்றிகள்

2014 A/L - வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்: 05.04.2012 வியாழன் மாலை 4.00 மணி

College of Accounting

கொமர்ஷல் வங்கி முன்பாக சாவகச்சேரி

Acc:-M.N. நீதன்
Eco:-K. பிரதீபன்
B.St:-S. பிரதீபன்

A/L 2012, 2013, 2014 கலை, வர்த்தகப் பிரிவுகள் நடைபெறுகின்றன. (8082)



## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விசேட கட்டணங்கள்

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும், வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பி DHL

நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே உள்நாடு,வெளிநாடுகளுக்கான DHL சேவையினைப் பெற்றுக்கொளள்ள (Door to door Service) அழையுங்கள் 021 222 7835, 0719554528

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
கனடா – 1 kg – 500/=
சுவிஸ் – 1 kg – 400/=

திருமுருகன் கொம் நெற் TCN Express

இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.